# இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்



எஸ். பி. கிருஷ்ணன்

இந்து சமுத்திரத்தில்
ஓர் இரவுப் பயணம்
எஸ். பி. கிருஷ்ணன்

inthu samuthirathil
orr iravup payanam
stories by
s.p. krishnan

# இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்

எஸ். பி. கிருஷ்ணன்

கண்ணன் வெளியீடு
திருச்சி — 21.

முதற் பதிப்பு : நவம்பர் 2000
உரிமை : எஸ்.பி.கிருஷ்ணன்
பக்கங்கள் : 144
விலை : ரூ. 140

# INTHU SAMUTTHIRATTHIL ORR IRAVUP PAYANAM

**Collection of Short Stories**

By

**S.P. KRISHNAN**

Typeset & Lay-out

**Mithra Arts & Creations**
375/8-10, Arcot Road,
Chennai - 600 024.

First Edition :
November - 2000

Pages : - 144

Printer :

Mithra Book Makers

Publisher :

**KANNAN VELIYEEDU**
4-18, 5th Main Road,
Renganagar, **TIRUCHY - 21.**

இந்நூல்...

எமது மண்ணின்

விடுதலைக்காய்

உயிர் ஈந்த

எண்ணற்ற

மறவர்களின்

நினைவுக்கு...

# அணிந்துரை

புரட்சிகளும் எழுச்சிகளும் பண்டுதொட்டு இன்றுவரை உலகெங்கும் நிகழ்ந்த வண்ணம்தான் உள்ளன.

இவ்வித சூழலில் பிறக்கின்ற இலக்கியங்கள் நின்று நிலைக்கும் பெற்றியவை மட்டுமின்றி வரலாற்றுப் பதிவுகளாகவும் அமைந்து விடுகின்றன.

பிரெஞ்சுப் புரட்சியின்போது அந்நாட்டில் தோன்றிய இலக்கியங்கள் சில காலம் முன்பு வரை சிலாகிக்கப்பட்டன. இன்று உலகளாவிய அளவில் தமிழில் சிறுகதை இலக்கியம் வளர்ந்திருப்பதாலோ என்னவோ பிறமொழி இலக்கியங்கள் தமிழில் பெயர்க்கப்படுவது வெகு குறைவாகவே காணப்படுகின்றது. தமிழில் வரும் சிறுகதைகள், பெருங்கதைகள், கவிதைகள் பற்றி விமர்சிப்பவர்கள் மட்டும் பிறமொழி இலக்கியங்களைத் தூக்கி நிறுத்திப் புதிய இலக்கண வியாக்கியானங்கள் மூலம் ஒப்பிட்டு நமது எழுத்தாளர்களே நினைத்திருக்காத பல கருத்துக்களைப் பிட்டுப் பிட்டு வைத்துப் பேசும் போது வாசகனென்ன, எழுத்தாளனே ஒரு மயக்க நிலையை எய்தி விடுகின்றான். எஸ்.பி. கிருஷ்ணன்

அவர்களின் கதை அம்மாதிரி விமர்சனங்களுக்குட்பட்டு விடாமலிருக்க வேண்டுமென்பது என் அவா.

இலங்கையில் தம் சொந்த மண்ணில் வாழ முடியாமல் அல்லலுற்றுக் கதிகலங்கி நிற்கும் தமிழர்களின் ஆறாத் துயர்களைக் கொண்டது நண்பர் கிருஷ்ணனின் இக்கதை நூல். அங்கு நம் தமிழர் படும் பாடுகளில் இது ஒரு பனித்துளிதான். அங்கு வாழ முடியாமல் ஒரு நள்ளிரவில் தமது மனைவி மக்களுடன் படகேறித் தென்னகம் வந்த திரு. கிருஷ்ணன், பயணத்தில் தாம் பட்ட இன்னல்களை 'இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' என்ற கதையில் பதிவு செய்துள்ளார். திரு. கிருஷ்ணன் படைப்புக்கள் மனித நேயமிக்கவை. இலங்கை தவிர உலகின் இதர நாடுகளி லிருந்தும் வெளிவரும் இதழ்களிலும் அவர் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

எஸ்.பி.கிருஷ்ணன் அவர்கள் சிறுமை கண்டு பொங்கும் பண்பினர். நெஞ்சம் நிறைந்த இரக்கம் கொண்டவர். இந்நூலில் இடம் பெற்றுள்ள 'பசி' என்ற கதை, அவர் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாகும். அவர் மனைவியும் அவர் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்.

மிகுதியும் மொழிப் பற்றினால் கவரப்பட்ட நண்பர் கிருஷ்ணன், அப்பற்றின் காரணமாகத் தமது அரச பதவியை இழந்தார். பத்திரிகையாளருமான அவர், யாழ்ப்பாணம் அரசுச் செயலகத்தில் பொறுப்பான பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சு. சபாரத்தினம்**
(சசிபாரதி)
முன்னாள் ஆசிரியர், ஈழநாடு வாரமலர்

திருச்சி - 21
01.11.2000

## என்னுரை

தமிழகத்துக்கு நான் வந்து நான்காண்டுகளாயின. இக் காலத்தில் என்னால் ஆற்ற முடிந்த் ஒரே மன நிறைவான பணி சில சிறுகதைகளை எழுதியதுதான். வீடு, பொருள், புத்தகங் களையும் இயல்பு வாழ்க்கையையும் இழந்து ஏதிலி யாய் வந்தவனுக்கு என்ன மறுவாழ்வு! உயிர் வாழ்தலுக்காக மட்டுமே, உண்டு உறங்குவது வாழ்க்கை ஆயிற்று. வனாந்தி ரத்தில் ஒரு குளிர் மையம் போல என் கவலைகளை மறந் திருக்கக் கிடைத்த ஒரே வாய்ப்பு புத்தகங்கள். பிறந்த மண்ணில் நடந்து கொண்டிருக்கும் போரின் விளைவுகளை அனுபவித்துவிட்டு வந்தவன். அதனால் என் கதைகளில் போரினால் சிதைந்துள்ள மண்ணும் அதனால் அல்லற்படும் மக்களுமே பதிவாகி யுள்ளனர். பல கதைகளும் ஒரே பின்ன ணியில் அமைவது தவிர்க்க முடியாததாயிற்று.

மன்னார் கிழக்குக் கரையில், கடலின் சமீபமாக

இருக்கும் இலுப்பைக்கடவை எனும் சிற்றூரிலிருந்து இரவு ஒன்பது மணிக்குப் படகில் ஏறியபோது என் உடலைத் தழுவிய குளிர் காற்றும் பரந்த கடலும் எனக்குப் புத்துணர்வையூட்டின. அன்று வளர்மதி நாள். கடல் பளபளத்தது. பேரலைகள் ஓய்வின்றி ஓடி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டே படகில் நின்றேன். பயணம் துவங்கியது. ஏதேதோ நினைவுகள் வந்து அச்ச மூட்டின. 'பல தடவைகள், இக்கடலில் படகுகள் கவிழ்ந்து பயணிகள் மூழ்கிப் போயினர்.' நினைவலைகளில் நான் மூழ்கியிருக்க, படகு கடலலைகளை எதிர்த்து முன்னேறிக் கொண்டிருந்தது.

அகதி முகாம் வந்தடைந்து சில நாள்கள் சென்றன. 'இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' எழுதினேன். பிரான்சிலிருந்து வெளிவரும் 'ஈழநாடு' வார இதழுக்கு அனுப்பி வைத்தேன். நாளடைவில் பிரான்சில் வெளிவரும் 'எரிமலை' மாத சஞ்சிகையும் வன்னியிலிருந்து வெளிவரும் 'வெளிச்சம்' சஞ்சிகையும் இதனை மறு பிரசுரம் செய்தன.

சொந்த மண்ணில் அமைதியாக வாழ முடியாத நிலையில் தமிழகம் வந்து அகதி முகாமில் சில நாள்கள் இருந்துவிட்டு, 'இருக்கப் பிடிக்காமல்' மேலதிகாரியின் அனுமதியுடன் திரும்பிப் பிறந்தகத்துக்குச் சென்று விட்டவர் களும் உண்டு. அத்தகைய ஒருவரின் கதை 'வானமே கூரை'. எரிமலையும் வெளிச்சமும் இதனை மறுபிரசுரம் செய்தன.

தமிழ்நாட்டின் கோயில்கள் சிலவற்றைப் பார்த்து வரப் போய் அங்கெல்லாம் பக்தர்கள் கைகூப்பி வணங்கி நிற்க பைத்தியக்காரன் போல, கற்சிலைகளை நின்று நின்று பார்த்துக் கொண்டு திரும்பியவரின் கதை 'கலைஞன்'.

1995-ல் யாழ். மாவட்டத்திலிருந்து, இரண்டு நாளில், ஐந்து லட்சம் மக்கள் பதினாறு கிலோ மீட்டர் தூரம் நடந்து தென் மராட்சியை அடைந்த வரலாற்று இடப் பெயர்வு. இயற்கை வனப்பும் பொருள் வளமும் கல்வியிற் சிறந்தோரை யும் புகழ் பெற்ற சைவக் கோயில்களையும் தன்னகத்தே கொண்டிருந்த தென்மராட்சிக்கு வந்து சில நாள் அமைதி யாய் வாழ்ந்திருந்த ஒருவரின் கதை 'ஓ தென்மராட்சி'

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் சிறப்புடன் வாழ்திருந்தவர்கள் தமிழர். உயர் பதவிகளில் இருந்தனர். சிங்கள இனத்தவரின் ஆலோசகர்களாக, வழிகாட்டியாக வாழ்ந்தவர்கள் தமிழர். அந்நாட்டில் வியாபாரம் செய்து வாழ்ந்திருந்த தமிழகத்துப் பெரியவர் ஒருவர் தான் கண்டும் கேட்டும் பெற்ற அனுபவங்களை நினைவு கூர்ந்து, சொன்ன கதை 'நன்றியுணர்வு'.

'காது கேட்பது குறைவு' என்று டாக்டரிடம் போனவருக்கு அதிர்ச்சி. நோயாளியைச் சோதித்து விட்டு டாக்டர் கேட்டார்: 'பலமான அடிபட்டதுண்டா? யாராவது தாக்கியதுண்டா? விழுந்ததுண்டா?' ஒளிக்காமல் உண்மையைச் சொன்னார். பதில் கேட்டு டாக்டர் வருத்தப்பட்டார். இது அதிர்ச்சியால் வந்தது என்றார். அதனைக் கேட்ட நோயாளிக்கு 'அதிர்ச்சி'.

'பொம்மர்' ஒன்று வானில் வட்டமிட்டு குண்டுகளை வீசுகின்றது. ஷெல் குண்டுகளும் வந்து விழுந்து வெடிக் கின்றன. வீடுகள், கட்டிடங்கள் தரை மட்டமாகின்றன. மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு, வீட்டை விட்டு, பாதுகாப்புத் தேடி தொலைதூரம் போகின்றார்கள். இங்கே பூட்டிய வீட்டை உடைத்து, இருப்பதை அள்ளிக் கொண்டு

போகின்றார்கள், ஆபத்தைப் பொருட்படுத்தாமல், இதற் கென்றே தங்கி யிருப்பவர்கள். இங்கே பிறந்த கதை "எரிகிற வீட்டில்."

இழப்புக்கள் மனித உயிர், மாடு, ஆடு, வீடு, பொருள், சொத்துக்கள் மட்டுமா? அவர் மிகவும் பாசம் வைத்து வளர்த்த சுட்டி நன்றியுள்ள பிறவி. விளைவுக்கு அஞ்சாமல் கடமையாற்றிய காவலன். மனிதர் இல்லாத வீட்டைச் சோதனையிடச் சென்ற அமைதிப் படையினரை, குரைத்து விரட்டுகையில் வீரச்சாவடைந்தது. அந்தக் கவலையின் நினைவாக எழுந்தது 'நெஞ்சில் ஆழப் பதிந்த வடு"

குடி குடியைக் கெடுக்கும், பிரித்து வைக்கும். மன்னித்து ஒரு வாய்ப்பைக் கொடுத்துப் பார்த்திருக்கலாம். அவன் பாவம். 'குற்றம் புரிந்தவன்'.

இரண்டு பொம்மர்கள் வானில் வட்டமிட்டு குண்டு பொழி கின்றன. சிலர் வெட்ட வெளியில் நின்று பார்க்கின்றனர். பலரும் பாதுகாப்புத் தேடி ஓடுகின்றனர். அதே நேரம், மாற்றுக் கட்சியினரால் கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளான அனு பவங்களை, எதிர் பாராமல் அங்கே சந்தித்துக் கொண்ட இருவர், நினைவுபடுத்திக் கொள்கின்றனர். எல்லாமே 'அரிதான அனுபவங்கள்'. இதனை யாழ். 'சிரித்திரன்' சஞ் சிகையும் பின்னர் பிரான்ஸ் 'ஈழமுரசு'வும் பிரசுரித்தன.

'பயணங்கள்' சென்னையிலிருந்து வெளிவரும் 'ஈழ சுதந்திரன்' இதழில் 'எதையும் தாங்கும் இதயம்' எனும் தலைப்பில் பிரசுரமானது. அதனை சில திருத்தங்களுடன் இங்கு சேர்த்துள்ளேன்.

அவ்வப்போது என் சிறுகதைகளை வெளியிட்ட சிரித்திரன், ஈழநாடு, ஈழமுரசு, எரிமலை, வெளிச்சம், ஈழ சுதந்திரன் ஆகிய ஏடுகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றி.

இந்த நூல் எனது அய்ந்தாவது முயற்சி. இரு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு கட்டுரைத் தொகுதியையும் ஒரு நாடக நூலையும் இதற்கு முன் வெளியிட்டுள்ளேன். மற்றும் இரு நூல்களுக்குப் போதுமான படைப்புக்களை, வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். அவை இனி கிடைக்குமோ!

இக்கதைகளைப் பார்த்துச் சீரமைத்து உதவிய திலிருந்து நூல் அச்சாகி வெளிவரும் வரை, அவ்வப்போது ஆலோசனையும் அன்பும் காட்டி, அணிந்துரையும் வழங்கிய நண்பர் யாழ். ஈழநாடு வாரவேட்டின் முன்னாள் ஆசிரியர் சு.சபாரத்தினம் அவர்களுக்கும் தகுந்த அட்டைப் படம் வரைந்துதவிய ஓவியர் திரு. இலங்கைநாதனுக்கும் நூலை அழகாக அச்சிட்டு வெளிக்கொணர்ந்த மித்ர வெளியீடு நிறுவனத்துக்கும் என் நன்றி உரித்தாகுக.

*திருச்சி - 21*
*01-10-2000*

**எஸ்.பி.கிருஷ்ணன்**

கதைகள்

கலைஞன் 13
அதிர்ச்சி 39
அரிதான அனுபவங்கள் 46
ஓ தென்மராட்சி 54
நன்றியுணர்வு 67
எரிகிற வீட்டில் 75
நெஞ்சில் ஆழப்பதிந்த வடு 82
பசி 87
குற்றம் புரிந்தவன் 92
வானமே கூரை 103
பயணங்கள் 124
இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம் 133

# கலைஞன்

ஆசியாவிலேயே மிக நீளமான பாலம் என்று சொல்லப்படும் பாம்பன் பாலமும் வட இந்தியரும் வந்து வணங்கிச் செல்லும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலும் அந்த அகதி முகாமுக்கு அண்மையில் தான் இருந்தன. மண்டபம், தங்கச்சிமடம், பாம்பன் ஆகிய சிற்றூர்களைக் கடந்து இராமேஸ்வரம் சந்தியில் இறங்கி 'கோயில்' என்று செல்லுமிடம் காட்டும் பேருந்தில் ஏறி இராமநாதசுவாமி கோயில் முன்னால் இறங்கினார் குமாரசாமி.

எதிரே வண்ணச் சிற்பங்கள் நிறைந்த கோபுரம் வானளாவத் தெரிந்தது. அதை நிமிர்ந்து பார்த்தவர் அகலவில்லை. சில நிமிடங்கள் அதனையே பார்த்துக்

கொண்டு நின்றவரை "சார் சற்றே ஓரமாய் நில்லுங்க..." என யாரோ எச்சரித்து விட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

அவரைச் சுற்றி பல நூறு மனிதர்கள். பல இனத்தவர். பல வகையினர். காவியுடுத்து தாடி வளர்த்து முடியை முறுக்கிக் கட்டியவர்கள், மொட்டை அடித்து சந்தனம் பூசியவர்கள், சங்கு, சிப்பி, மாலை அணிந்தவர்கள், தாறுபாச்சி கட்டியவர்கள், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள், உள்ளே போவதும் வருவதுமாக....

அவர்களுடன் கலந்து உள்ளே சென்றார் குமாரசாமி.

வெளி வாயிலில் இரு புறமும் விநாயகர், காளி, அனுமார், துர்க்கை - கருங்கல் சிலைகள். அவற்றை அவதானித்தபடி உள்ளே போக "தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்" என்ற அறிவிப்பு அவரை வரவேற்றது.

ஆளுயர சிவலிங்கமும் இராமர் சீதா சிலைகளும் மின் ஒளியில் பளபளத்தன. அர்ச்சகர்கள், கற்பூர தீபம் ஏந்தி நின்றனர். பக்தர் தரும் பூமாலை, அர்ச்சனை, காணிக்கை களை அங்கே படைத்து ஆராதித்தனர்.

கை கூப்பி நிற்கும் பக்தர்கள் வரிசையில் இறுதியாக குமாரசாமி. அவர், கருவறையில் காட்சி தரும் சிலை களையே கவனித்தபடி நின்றார். இரண்டு அர்ச்சகர்கள் தீபணம், திருநீறு, சந்தனம், குங்குமம் கொண்ட தட்டு கையில் ஏந்தி வந்து கொண்டிருந்தனர். சில்லறையும் தாள்களும் தட்டில் போட்டு பிரசாதம் பெற்றுக் கொண்டனர் பக்தர்கள். குமாரசாமி காசு போடவில்லை. திருநீறு மட்டும் வாங்கி ஒரு விரலால் நெற்றியில் வரி வைத்துக் கொண்டு இடது பக்கமாக வீதியில் நடந்தார்.

உயரமான கற்றூண்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களையும் சுவர்களில் ஓவியங்களையும் நின்று நின்று பார்த்தார். தன் டயரியில் சில குறிப்புக்கள் எழுதிக் கொண்டார். வீதி நீளம் சிறிதும் பெரிதுமாக கோயில்கள், அவை ஒவ்வொன்றிலும் பக்தர் கூட்டம். துரிதமாக இயங்கும் ஐயர்கள். எதையெதையோ வேண்டி வணங்கும் பக்தர் நடுவில் இவர் மட்டும் டயரியும் கையுமாக வித்தியாசமான மனிதராக...

சுமார் நாற்கது அடி உயரமான கற்கள் தூண்களாக, சுமார் ஐம்பதடி நீளக் கற்களை அவற்றின்மேல் கூரையாக வைத்து வீதி அமைத்த சிற்பி யாரோ? அவன் பெயர் எங்கேயும் பொறிக்கப்பட்டிருக்குமோ எனவும் கவனித்துக் கொண்டார். சுமார் ஒரு தொன் எடையுள்ள ஒரே கல்லில் தீபமேந்தி நிற்கும் ஒரு சிலையழகியரை வடித்தவன் யாரோ? மனதில் எழுந்த கேள்வியை டயரியில் எழுதிக்கொண்டார். எங்கு பார்க்கினும் கண்கவரும் வைவண்ணம். தொழில்நுட்பம், உயர்ந்த தூண்கள் நாற்புறமும் உயிர்ப்பான தெய்வச் சிலைகள். சுவர்களில் இராமாயண வரலாற்று ஓவியங்கள். கருங்கற்களில் வடித்த கோவில்கள். செங்கட்டி இல்லை. சீமெந்து இல்லை. கூரைத்தகடு இல்லை. கோபுரங்கள், விமானங்கள், சுவர்கள் எல்லாமே தனிக்கற்கள் - கல் பாளங்கள்.

கை கூப்பியபடி வீதிவலம் வருகின்றவர்கள் சிலர் கண்களில் டயரியும் கையுமாக நிற்கும் மனிதர் வித்தியாசமான உருவமாகத் தென்படுகிறார். யாரையும் பொருட்படுத்தாது தன் 'கடமை' யை முடித்துக் கொண்டு

வாசலுக்கு வருகிறார் குமாரசாமி. அங்கே முன்னரை விட அதிக கூட்டம். பலர் ஈர உடையுடன் உள்ளே போகிறார்கள். ஏன்? அப்படியொரு வணக்கமுறையா? ஓ, இவர்கள் கடலில் குளித்துவிட்டு வருகிறார்களோ? அதையும் பார்க்கலாம் என்ற முடிவுடன் கடற்கரையை நாடி நடந்தார்.

"வெளி மண்டபத்தை விட்டு தெருவைத் தாண்டி நேரே சென்றால் கடல்" என்று ஈர உடையுடன் வந்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அலைமோதும் பெருங்கடல் அவரை வரவேற்றது. மூழ்கியும், நீந்தியும் நீராடியவர்களை மோதித் தள்ளிவிட்டு, கடலோடு மறையும் பேரலைகள் அவை புதிது புதிதாய் ஒன்றின் பின் ஒன்றாய் வரும். ஒன்றின் மேல் பல விழுந்து புரளும். அவை கடலன்னையின் குழந்தைகளா? சில நேரம் கால்களை கடல்நீரில் கழுவ நினைத்த குமாரசாமி இறங்கி முழங்கால் வரை நின்று மோதும் அலைகளை கையில் ஏந்தி மகிழ்ந்தார். தூரத்தே போய்க் கொண்டிருந்த பல படகுகளை கவனித்தார். அவை மீனவர் படகுகள் என அறிந்தார். அங்கிருந்து தனுஸ்கோடி வரை போய்க் கொண்டிருந்த பல படகுகளைக் கவனித்தார். அவை மீனவர் படகுகள் என அறிந்தார். அங்கிருந்து தனுஸ்கோடி வரை போய்த் திரும்பி மன்னார் தீவு வரை போகிறார்களாம். "நாங் களும் வந்து அந்த தனுஸ்கோடிக் கரையில் அல்லவா இறங்கினோம்" அந்த நாளை நினைவு கூர்ந்தார்.

"அக்னி தீர்த்தம் ஆச்சா... உள்ளே தீர்த்தம் ஊத்தணுமா... வாங்க..."

வாளியும் கயிறுமாக நின்ற வழிகாட்டி ஒருவன் கேட்பது குமாரசாமியின் காதில் விழுந்தது.

அவன் அருகில் போய் "இன்னும் தீர்த்தம் இருக்கா...? எத்தனை இருக்கு?" என்று கேட்டார்.

"இன்னும் இருபத்தொரு தீர்த்தம் இருக்கு" என்றான் அவன்.

"அதெல்லாம் ஊத்த எவ்வளவு கூலி?"

"எல்லாமா 110 ரூபா.. ஒவ்வொரு வாளி... கடைசியா கோடி தீர்த்தம் ஊத்திவிட்டு சாமி கும்பிடணும்..."

"எல்லாத் தீர்த்தத்துக்கும் பெயர் இருக்கா?"

"ஆமா... மகாலக்ஸ்மி... சாவித்திரி... காயத்திரி..."

யாரோ அவனை அழைக்க அவன் ஓடினான். அவருடன் பேசி, ஐந்து பேரை கூட்டிக் கொண்டு அவன் கோயிலுக்குள் போனான்.

சுற்றுலாவை முடித்துக் கொண்டு பேருந்து நிலையம் நாடி நடந்தார் குமாரசாமி.

"**நா**னும் வாறன்... அடுத்த வெள்ளிகிழமை போவம் என்ற மனைவி கண்மணியிடம்... "சரி போகலாம்... நான் கடலில குளிக்க விரும்பிறன்... நீயும் குளிக்க விரும் பினால் மாற்று உடை கொண்டு வா..."

"பெண்களும் குளிக்க இடம் இருக்கே?"

"ஓ... ஒரு பக்கம் பெண்கள் மறுபக்கம் ஆண்கள்..."

அந்த வெள்ளிக்கிழமை இருவரும் புறப்பட்டனர்.

கோயில் வாசலில் பேருந்து விட்டிறங்கி நேரே கடற் கரைக்கு நடந்தார்கள். கண்மணி பெண்கள் பக்கம் போக குமாரசாமி மறுபக்கத்தில் இறங்கி அலைகளை எதிர்த்துத் தாண்டி கழுத்தளவு நீரில் பேரலைகளுடன் போராடினார். தலைக்கு மேல் எழுந்த அலை ஒன்று அவரை அடித்து விழுத்தியபோது பயந்தவராய் திரும்பி வந்து இடுப்பளவு நீரில் நின்றார். திரும்பி கண்மணி நின்ற பக்கம் பார்த்தார். அவள் கரைக்குப் போவது தெரிந்தது.

கரையேறி மணலில் நின்று உடை மாற்றிக் கொண்டார்.

வெளி மண்டபத்தில் அர்ச்சனை சாமான்களையும் ஒரு பெட்டி கற்பூரமும் கண்மணி வாங்கினாள். அவர், மனைவி அருகில் நடந்தார். "அர்ச்சனை டிக்கட் எடுங்க" என்றாள். எடுத்துக் கொடுத்தார்.

அர்ச்சனைத் தட்டை ஐயரிடம் கொடுத்து சில பெயர், சில நட்சத்திரங்கள் சொல்ல ஐயர் அவற்றைத் திருப்பி சொல்லி நிற்க, "ஐயா தமிழில் அர்ச்சனை செய்யுங்கள்" என்றார் குமாரசாமி. ஐயர் விலகி உள்ளே போய் சாமி யுடன் தமிழ் பேசினாரா? கேட்கவில்லை குமாரசாமிக்கு. கண்மணி வீதிவலம் வந்து எல்லாத் தெய்வங்களையும் கைகூப்பி வணங்கி வர குமாரசாமி இரண்டாவது தடவையும் சிலைகள், சிற்பங்களின் அழகை ரசித்தார்.

**"பா**ர்க்க வேண்டிய இடங்கள் எத்தனையோ இருக்கு இந்த நாட்டில, ஊருக்குத் திரும்புமுன் சிலவற்றையெண் டாலும் பார்த்துவிடவேண்டும்" மனைவியுடன் சொல்லிக்

கொண்டிருந்த குமாரசாமியின் மனதில் வெளிப்பதிவுக்கு விண்ணப்பம் கொடுத்த ஞாபகம் வந்தது. "அதை எடுத்துவிட்டால், வெளியில்போய் இருந்து கொண்டு, தம்பியையும், வரச் சொல்லலாம், சேர்ந்து போய் பார்க்கலாம்"

"ஓ... மேலாளரைப் போய்ப் பாருங்களன்" என்றாள் கண்மணி.

இந்நிலையில் சுவிசிலிருந்து கடிதம் வந்தது.

"முகாமிலிருந்து வெளியே போய் இருக்க, அனுமதி கேட்டதாக எழுதினீங்கள். அதன் முடிவு என்ன? அதைக் கவனித்து கூடிய கெதியில் அனுமதியை வாங்கிக் கொண்டு மதுரையிலோ, திருச்சியிலோ ஒரு வீடு பாருங்கோ... பார்த்து விட்டு சொல்லுங்கோ. நாங்கள் வந்து பதினைந்து நாள் தங்குவோம். வீடு பார்த்து முடிவானால் போனில் சொல்லுங்கோ, காசு அனுப்ப"

இது அவர் மகன் காந்தன் எழுதியது.

கடிதத்தை மனைவியிடம் கொடுத்துவிட்டு, முகாம் மேலாளரைப் பார்க்கப் போனார் குமாரசாமி. ஏற்கனவே கொடுத்திருந்த வெளிப்பதிவு விண்ணப்பத்தின் பிரதியை கொடுத்து அவருடன் பேசினார். "அது தொடர்பான கோப்பு எங்கே? "எனக் கேட்டுப் பெற்றுத் திறந்து பார்த்த மேலாளர், "சரி தரலாம்... நாளைக்கு வாங்க... ஆனா" என்று நிறுத்தி, "புரிகிறதா?" என குமாரசாமியைப் பார்த்தார்.

"சரி சார்... கவனிக்கிறேன்... என மெல்லச் சொல்லிவிட்டு எழுந்தார் குமாரசாமி.

அப்படி அனுமதி பெற்றுக் கொண்டு போன சிலர் சொன்ன இரகசிய தகவல்கள் அவர் நினைவில் வந்தன.

அடுத்தநாள், மூன்றாம் மனிதருக்குத் தெரியாமல் அன்பளிப்பை உறையில் வைத்துக் கொண்டு அலு வலகம் போனார். இடது கையால் அதனை மேலாளரிடம் கொடுத்து வலது கையில் அனுமதிக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, நன்றியும் சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

வெளியில் போய் இருக்க அனுமதி கிடைத்துவிட்டது என தொலைபேசியில் மகனுக்கு அறிவித்துவிட்டு, "திருச்சியில் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கிறார், போய் அவருடன் கதைத்து வீடு பார்த்திட்டு வருகிறேன்" என மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

திருச்சி வந்து நண்பருடன் கலந்து பேசி சில வீடுகளைப் பார்த்து ஒன்றைத் தெரிவு செய்து வாடகை முற்பணம் கொடுத்துவிட்டு முகாமுக்குத் திரும்பினார்.

வீடு எடுத்தாயிற்று, பாவனைப் பொருள்கள் பெரும் பாலானவற்றை கட்டி பேருந்தில் கொண்டு போவது சிரமம். அவற்றை அயலவருக்கு கெடுத்துவிட்டு முக்கிய உடைமைகளை இரண்டு பொதிகளாகக் கட்டிக் கொண்டனர்.

மறு நாள் அதிகாலையே எழுந்து பழகியவர்களிடம் சொல்லிக் கொண்டு முகாமை விட்டு வெளியே வந்தனர்.

பிரதான வாசலில் அனுமதிக் கடிதத்தை காவலா ளியிடம் காட்டிவிட்டே பொதிகள் கொண்டு போகலாம்.

"ஏன் சார்... போறீங்களா... இங்க இருக்கப் பிடிக்

கேல்லையா?' சரி சரி.... உட்காருங்க என்றான் அவன்.

அவசியமின்றி தாமதிக்க வைத்து பணம் பண்ணும் காவலாளியின் உள்ளத்தை புரிந்து கொண்ட குமாரசாமி, இரண்டு பத்தை மடித்து அவன் கையில் வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தார்.

முகாமின் எதிரே தான் பேரூந்து தரிப்பிடம் இருந்தது.

இராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் பேரூந்துகள் அங்கே நின்றுதான் போகும். சாதாரண பேரூந்துகளை விட்டு, திருச்சி விரைவுப் பேரூந்து வரும் வரை காத்திருந்து ஏறிக்கொண்டனர் குமாரசாமி தம்பதியர்.

திருச்சி சந்தியை வந்தடைந்போது நேரம் ஒரு மணி.

"எல்.ஐ.சி. காலணி" என்று சொல்லி ஆட்டோவில் ஏறி, நண்பரின் வீட்டில் போய் இறங்கினார்கள். நண்பரின் உதவியுடன் வீட்டுக்கு அப்போதைக்கு தேவையான சாமான்களை வாங்கி வைத்து குடிபுகுந்தனர். இனியும் அகதி என்று சொல்ல யாருமில்லை; அந்த அனுமதிக் கடிதம் தவிர.

தமிழ்நாட்டு மக்கள் பலருடன் கலந்து பழகினார்கள். இரு நாட்டு மக்களும் தமிழர். ஆயினும் அவர்கள் சொல்லும் வார்த்தைகள் இவர்களுக்கு வினோதமாகப் பட்டன. ஆமா... அப்புறம்... கம்மி... ரோடு... கிறாஸ், தர்ணா, பந்த்... சொல்வது மட்டுமல்ல எழுத்தும் அத்தகையதே என்றாலும் தமிழர்கள். அந்நியம் இல்லை என்ற மன நிறைவு.

சுவிசிலிருந்து மகன் குடும்பம் அடுத்த மாதம் வருவதாகத் தகவல் வந்தது.

மகன் வருவதற்கு முன்பாக கிட்டவுள்ள சுற்றுலா மையங்களை விசாரித்து விபரம் அறிந்து கொண்டனர். மலைக்கோட்டை, திருவரங்கம், திருவானைக்கா, சமயபுரம், வயலூர் முருகன், கல்லணை என மனதில் பட்டியல் போட்டுக் கொண்டனர். திருச்சியிலிருந்து தஞ்சாவூர் ஐம்பது கிலோ மீட்டர். இராஜராஜசோழன் கட்டிய கற்கோயிலை முதலில் பார்ப்பது என்று திட்டமிட்டனர்.

**கா**ந்தன், சித்திரா, வசந்தன்.

அவர்கள் வந்து ஒருநாள் ஓய்வு எடுத்தனர்.

"அம்மா கையால் குழைத்துச் சாப்பிட்டு எவ்வளவு காலம், இண்டைக்கு நாங்கள் அம்மா குழைத்துத் தர சாப்பிடுவம்" என்று காந்தன் சொல்ல சித்திராவும் வசந்தனும் ஏற்றுக் கொண்டனர்.

"இந்தக் கதிரை போதுமா... ஏனப்பா நிலத்தில படுக்கிறியள்... ஒரு கட்டில் வாங்கேல்ல? அம்மா ஏன் மிக்சி வாங்கல்ல..."

வீட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான், காந்தன்.

"வேண்டாம் தம்பி, நிலத்தில படுத்தெழும்பினால் என்ன..." என்ற தகப்பனைப் பார்த்து சிரித்துவிட்டு "அப்பா நாளைக்கு கடைத் தெருவுக்கு போவம்" எ்ன்றான்.

தாயையும் கூட்டிக்கொண்டு சித்திரா, வசந்தனுடன் 'மெயின் காட்கேற்' பக்கம் போய் இரண்டு கட்டில் வாங்கி

வாடகை வண்டியில் வீட்டுக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்குத் தேவையான ஏனைய பொருள்களும் வாங்கி ஆட்டோ பிடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

"ஏன் தம்பி இதெல்லாம்? வீண் செலவு?"

வீட்டுக்கு வந்தபொருள்களைப் பார்த்துக் கேட்டார் குமாரசாமி.

"இருக்கட்டும் அப்பா..." கொஞ்சினான் செல்ல மகன்.

"நாளைக்கு எங்க போகலாம்?" காந்தன் கேட்டான்.

உச்சிப் பிள்ளையாரட்டைத்தான் முதல் போக வேணும்" என்றாள் கண்மணி.

"சரி... போகலாம். கிட்டத்தான்..." குமாரசாமி.

மலைக்கோட்டை வாசலில், அறுகம்புல் மாலையும் அர்ச்சனைத் தட்டும் வாங்கிக் கொண்டு படியேறி னார்கள்.

ஏறஏறப் படிகள் வந்து கொண்டிருந்தன.

அவை இலக்கமிடப்பட்டிருந்தன. நின்றும் நடந்தும் 375 படிகளைக் கடந்தனர். அதற்கப்பால் இலக்கமிடப் படவில்லை.

எண்ணிக் கொண்டார், குமாரசாமி. எல்லாமாக 450. உச்சியை அடைந்ததும் களைத்துப் போய் கோயில் முகப்பில் படியில் அமர்ந்தார். வலது பக்கம் கீழே வீடுகளும் மாடிகளும் வாகனங்களும் வீதிகளும் சுருங்கி சிறுத்தனவாய்த் தோன்றின. இடது பக்கத்திலிருந்து தென்றல் வந்து குளிர்வித்தது. எழுந்து நின்றார்.

தூரத்தே காவேரி பாய்வது தெரிந்தது. அதற்கப்பால் தூரத்தே திருவரங்கம் கோபுரம் தெரிந்தது.

மலை உச்சியில் விநாயகருக்கு சிறுகோயில். வீதியையும் சேர்த்தால் ஐம்பது பேர்வரை தான் நிற்கலாம். விநாயகரை கிட்ட நின்று வணங்க முடிந்தது. பளபளக்கும் கருங்கல் உருவம்.

திரும்பும் வழியில் வலதுபுறம் வழிகாட்டும் அறிவிப்பு இருந்தது.

சமதரை, தாயுமானவர் கோயிலும் அதனைச் சுற்றி வீதியில் சிறு சிறு சிலைகளும் இருந்தன. தூண்களில் சிற்பங்கள், சுவர்களில் ஓவியங்கள், தலைநிமிர்ந்து பார்த்தால் கற் கூரையில் வண்ண ஓவியங்கள், கலை மகள், துர்க்கை, அனுமார் இத்தியாதி.

படிகளில் இறங்கினர். தெருவுக்கு வந்தனர்.

"திருவரங்கம் கிட்டவேதான் போவமா?" அப்பா.

"களைச்சுப் போனீங்கள் அப்பா... நாளைக்கு வருவம்" -- மகன்.

ஆட்டோ கூப்பிட்டு ஏறிக் கொண்டனர்.

"அப்பாடா... கால் வலிக்குது..."

தரையில் படுத்துக் கொண்டார் குமாரசாமி. அருகில் வந்தமர்ந்து கொண்டான் காந்தன். சித்திராவும் வசந் தனைக் கொண்டு அங்கே வந்தாள்.

"அம்மா வாங்க..."

"வருகிறேன்..." கண்மணி வந்து வசந்தனை தூக்கி வைத்துக் கொண்டாள்.

"நாளைக்கு எங்கே போகலாம்...?" -காந்தன்.

"நாளைக்கு தஞ்சாவூர் போவம்... திருவரங்கம் பிறகு பார்க்கலாம்..."

"சரி அப்பா... காருக்கு சொல்லுங்கோ... போய்வந்து நாளை மறுநாள் கடைத்தெருவுக்கு போக அலுவல் இருக்கு..."

"அதுக்கென்ன.. ஓய்வாய் வீட்டிலயும் நாலு நாள் இருக்கத் தானே வேணும்..."

**சோ**ழப் பெருமன்னன் சுந்தர சோழனுக்கும் திருக் கோவிலூர் மலையமான் குலத்தில் தோன்றிய வானவன் மாதேவிக்கம் இரண்டாவது மகனாகப் பிறந்தவன் அருண்மொழி எனும் இராஜராஜன். இவன் கி.பி.985-ல் சோழப் பேரரசனாக முடி சூடினான் என்றும் இலங்கை உள்பட பல தேசங்களைக் கைப்பற்றி ஆண்டான் என்றும் வாசித்த குமாரசாமி அவன் கட்டுவித்த கற் கோயிலைப் பார்க்கக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ந்தவராய் காரில் சாய்ந்திருந்தார்.

அகழி சூழ்ந்தது தஞ்சைப் பெருங்கோயில், உயர்ந்து அகன்ற மதிற் சுவரில் தூரம் ஒரு நந்தியும் நாலு மூலை யிலும் காவற்கோபுரமும் இருந்தன. இடதுபக்கம், பெருஞ் சுவரின் பின்னால் குளமும் பூங்காவும் இருப்பதாகத் தெரிந்தது. மன்னனும் மனைவியரும் கோயிலுக்கு வரும் நாளில் தங்கிச் செல்லும் மாளிகை அங்கே இருந்

திருக்கலாம். பாதுகாப்புக் கருதி கோயில் மதிலில் கண்காணிப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். அங்கே செல்ல அனுமதியில்லை. கோயிலின் உள்ளே காலடி வைத்ததும் அவர்கள் கண்டது பிரமாண்டமான நந்தி. பத்தடி நீளம் எட்டு அடி அகலம். பன்னிரண்டடி உயரம். ஒரே கல். அப்பால் நடந்து படிகளில் ஏறினால் சிற்பியின் கைவண்ணம் காட்டும் தூண்கள். ஒரே கல்லில் செதுக்கி நிறுத்தி அதன் மேல் நீளக்கற்களை எப்படி வைத்தனர் என்ற வியப்பு. அதைவிட அரிதாக இரண்டாவது கோபுர வாசலில் நிறுத்தப்பட்டுள்ள இரு நாற்பதடி உயரமான ஒற்றை நிலைக்கால்களும் 18அடி உயரமான ஒரே கல்லாலான இரண்டு துவாரபாலகர் சிற்பங்களும் சிந்திக்கத் தூண்டின.

கருவறையில் இருப்பது 13அடி உயர லிங்கம் மட்டுமே.

அதன் நாலா பக்கமும் பதினொரு அடி உயர கருங்கல் சுவர்.

மற்றைய தெய்வ உருவங்கள் எல்லாம் செப்புச் சிலைகள்.

இடதுகாலைத் தூக்கியும் வலது காலைத் தூக்கியும் ஆடும் நடராசரும் செப்பினால் ஆனவை. சாணக்கியரை வென்று வந்த இராஜராஜன் தங்கத்தால் மலர்கள் செய்து நடராசரின் பாதத்தில் இட்டு வழிபட்டானாம்.

குமாரசாமி இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டு வலது பக்க வாசலால் வெளியில் இறங்கினார். அவர் தனியே போவதை அவதானித்த காந்தன் ஓடிப்போய் "அப்பா நில்லுங்கோ... நாங்களும் வருகி

றோம்" என்றான்.

"நான் வெளியில் நிற்கிறன். நீங்கள் ஆறுதலாய் வாருங்கோ..."

வீதியில் நின்ற குமாரசாமியின் பார்வை புறச்சுவர் நீளத்தில் படர்ந்தது.

என்ன அதிசயம். அத்திவாரத்தின் மேல் பத்திரிப்பு கல் நீளம் நெஞ்சுயரத்துக்கு எழுத்துக்கள் - விளங்காத எழுத்துக்கள் - பொறிக்கப்பட்டிருந்தன.

இடையிடையே தமிழ் - இ, ஐ, சொ, ழ, ன - போலத் தோன்றின.

இராஜராஜசோழன் என்ற வார்த்தையைக் கண்டு பிடித்துவிட்டதாக அவர் நினைத்தார். ஓலைச் சுவடி களில் புள்ளி இல்லாத எழுத்துக்களை அவர் பார்த்த துண்டு. இங்கேயும் புள்ளி இல்லை. வளைவு, கொம்பு களில் வேறுபாடு. அருகில் வந்த சிலருடன் பேச்சுக் கொடுத்து சில தகவல்களை அறிந்து கொண்டார். இக் கோயிலை கட்டுவதற்கு மன்னனும் அவர் மனைவியரும் அவர் சகோதரிகளும் கொடுத்த பொருள்களுடன் பொது மக்கள் கொடுத்த பொருள்களின் விபரத்தையும் அவர்கள் பெயருடன் கல்லில் எழுதுமாறு மன்னன் ஆணையிட்டானாம். இன்னும் என்னவெல்லாம் எழுதப் பணித்தானோ!

மனைவி, பிள்ளைகள் இறங்கி வருவதைக் கண்டு முன்னால் நடந்தார் குமாரசாமி. மேற்கு வீதியில் நின்று விமானத்தைப் பார்த்தார். கலசம் தங்கம் போல் மின்னியது. அதன் உயரம் பன்னிரண்டு அடி என்றும் 2926

களஞ்சு தங்கத்தினால் முலாம் பூசப்பட்டதென்றும் மன்னன் நினைவாக பின்னாளில் உருவாக்கப்பட்ட இராஜராஜசோழன் - வானவன் மாதேவி செப்புச் சிலைகள் தற்போது குஜராத் மாநிலம் அலகாபாத்தில், கௌதம் சாராபாய் கலைக்கூடத்தில் உள்ளதெனவும் அறிந்து கொண்டார். தமிழ் மண்ணின் கலைப் பொருள்கள் இப்படியெல்லாம் அழிந்து போகிறதே என வருந்தினார்.

மேற்கு வீதியிலிருந்து வடக்கு வீதிவரை மதிலுடன் சேர்ந்த மண்டபத்தில் லிங்கங்கள் வரிசையாக இருந்தன. அவை முன்னால் சிலர் கற்பூரம் கொழுத்தி வணங்கினர். அவற்றைப் பார்த்துக் கொண்டு மெல்ல நடந்த குமாரசாமியை விட்டு மனைவி பிள்ளைகள் தூரத்தே போய்விட்டதைக் கண்டு விரைந்து நடந்தார்.

அதேநேரம் மேலும் கீழும் பார்த்துக் கொண்டார்.

"அதென்ன சுவரெல்லாம் கறுப்பாய் கரிக்கரியாய்... நெருப்புப் பிடித்த மாதிரி..." நின்று பார்த்தார்.

போன வருடம் கும்பாபிஷேகம் நடந்தபோது தீப்பிடித்து நூறுபேர் வரை செத்துப் போனார்கள்... அந்த செய்தியை பத்திரிகையில் பார்த்தவர். மகனைக் கூப்பிட்டார். "இங்கே பார் மதிற் சுவர் கரிக்கரியாய்... என்ன நடந்தது தெரியுமா?"

அந்த சோகசம்பவத்தைச் சொன்னார். காந்தன் தாயையும் மனைவியையும் திருப்பியழைத்து அந்த இடத்தைக் காட்டி விபரம் சொன்னான்.

அருகில் வந்த ஒருவருடன் அது பற்றிக் கேட்டு

அவர்கள் நினைத்தது சரி என்று அறிந்து கொண்டு அப்பால் நகர்ந்தனர்.

"அப்பா வாருங்க வெய்யில் வந்திட்டுது. இங்க ஒரு மரநிழல் கூட இல்லை..." என்றான் காந்தன்.

"ஓமோம்... நடவுங்க இனிப் போவம்..."

எல்லாரும் வாசலுக்கு வந்து மதில் நிழலில் நின்றனர்.

"இனி எடு கமராவை" என்றார் குமாரசாமி.

உள்ளே எடுத்துப்போக அனுமதி இல்லாததால் தோள்பையில் வைத்துவிட்ட கமராவை எடுத்தான் காந்தன். அவர் ஒரு சிலை நேரே நின்றார். அடுத்து வாசலில் நின்ற கோயில் யானையருகே நின்றார். பின் வசந்தனைத் தூக்கி வைத்துக் கொண்டார். மூன்று படங்கள் தஞ்சை பெரிய கோவில் நினைவாக மேலும் சில குடும்பமாக எடுத்துக் கொண்டனர்.

இடது பக்கம் கடை ஒன்று இருந்தது. அங்கே படங்கள், சிலைகள், புத்தகங்கள் இருப்பது தெரிந்தது. குமாரசாமி ஒரு புத்தகம் வாங்கினார். கண்மணி ஒரு லிங்கம் வாங்கினாள். காந்தனும் சித்திராவும் கண்ணாடியில் அடைத்த கோயில் மாதிரி வாங்கினர்.

திரும்பி வரும்போதுதான் தெற்கு வீதியில் இருந்த அருங்காட்சியகம் கண்ணில் பட்டது. "அதையும் பார்த் திட்டுப் போவம்" என்றார் குமாரசாமி.

அங்கே 11-ம் நூற்றாண்டு கற்சிலைகள், செப்பு ஏடுகள், செப்பு சிலைகள், சோழமன்னர்களின் உருவச் சிலைகள் - சில சிதைந்தவை - ஓவியங்கள், படங்கள்,

பாவனைப் பொருட்கள், காசுகள், வாள், ஈட்டி, வரலாற்று நடுகல், கல்லில் குடைந்த நீர்த்தொட்டி முதலியன காணப்பட்டன.

கண்ணாடி சட்டமிட்ட பேளைகளில் சோழ மன்னர் வரலாறு சுருக்கமாக உள்ளன.

"தேவாரம் பாட ஐம்பது பேரும் ஆடல் மகளிர் 400 பேரும் கோவிலுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வீடும், பொருளும், நெல்லும் வழங்கப் பெற்றன. அரச பணியில் இருந்த நாவிதன் இராஜராஜப் பெரு நாவிதன் என அழைக்கப்பட்டான்." வியப்பு மேலிட அந்த வரிகளைத் தன் டயரியில் எழுதிக்கொண்டார் குமாரசாமி.

"சரி வாருங்கோ... போவம்..." என்றான் காந்தன்.

வெளியே வந்து காரில் ஏறும்போது "ஒரு சைவ ஹோட்டலுக்கு விடுங்க" என்றான்.

கார் திருச்சியை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

"வழியில்தானே கல்லணை?" சாரதியிடம் கேட்டார் குமாரசாமி.

"ஆமா... திருச்சி பார்டரிலிருந்து ஆறு கிலோ மீட்டர்..."

"அதையும் பார்த்திட்டு போகலாம்..."

"அதென்னப்பா கல்லணை?" காந்தன் கேட்டான்.

"காவேரி ஆற்றை மறித்துக் கட்டிய அணை, நீரை அளவாய் பாயவிடும் அணைக்கட்டு. கரிகால் சோழன்

இலங்கையைக் கைப்பற்றி 1200 சிங்களவரைக் கைது செய்து கொண்டு வந்து, அவர்களைப் பயன்படுத்தி இந்த அணையை கட்டுவித்தானாம்...."

"ஆச்சரியந்தான்...." – காந்தன்.

திருச்சி நகரை அண்மிய கார் வலதுபக்க சாலை ஒன்றில் திரும்பியது.

வயல் நிலம் செறிந்த தஞ்சை எல்லை. அறுவடை செய்து நெல் நீக்கிய வைக்கோல் வீதியோரம் மலை-யென குவிக்கப்பட்டிருந்தன.

கல்லணையிலிருந்து காவேரி பாயும் வேகம் தூரத்தே தெரிந்தது. கார், ட வடிவில் இருந்த பாலத்தைக் கடந்து மரங்கள் அடர்ந்த நிழலில் போய் நின்றது.

கணவாய்கள் ஊடாகக் காவேரி பாயும் வேகம் அச்ச மூட்டியது. மறுபக்கம் கட்டுப்பட்டு மெல்லெனப் பாய்ந்தது. இங்கே சிறுவர் தொட்டு முதியோர் வரை குளித்துக் கொண்டிருந்தனர், குதூகலம் பொங்க.

"மாற்று உடை இல்லையே" என்று கவலைப்பட்டான் காந்தன்.

"இன்னொரு நாள் வருவோம்... கிட்டத்தான் இருபது கிலோ மீட்டர் இருக்கும்..." - குமாரசாமி.

அணைக்கட்டில் நின்று சில படங்கள் எடுத்துக் கொண்டனர்.

"இங்கிருந்து எங்கே...?" எனக் கேட்டான் காந்தன்.

"வீட்டுக்குப் போவோம்... அடுத்தது மதுரை.... நாளைக்கு ஓய்வெடுத்து மறுநாள் போகலாம்..." என்றார்

குமாரசாமி.

அதிகாலை ஐந்து மணிக்கே புறப்பட்டு விட்டனர்.

மழை பெய்து கொண்டிருந்தது. ஓட்டம் வேகம் குறைந்தது. "மெல்லமாகப் போகட்டும்... எப்படியும் ஒன்பதுக்கு முன்னர் போய்விடலாம்" என நினைத்துக் கொண்டார் குமாரசாமி.

காந்தன் கேட்டான் "எவ்வளவு தூரம் அப்பா?"

"நூற்று முப்பதுக் கிலோ மீட்டர்... மூன்று மணித் தியால ஓட்டம்..."

"மதுரையில வேறென்ன கோயில் இருக்குதப்பா?"

"அங்க திருப்பரங்குன்றம்... அழகர் கோவில்... பழமுதிர்ச்சோலை முருகன்..."

"எல்லாம் பார்த்து வர நேரம் போதுமே அப்பா..."

அவர் சாரதியைப் பார்த்தார்.

"ஓ போதுமே..." என்றார் சாரதி.

மழை ஓய்ந்திருந்தது. காரின் வேகம் அதிகரித்தது.

பின்னால் இருந்த கண்மணி, காந்தன், சித்திரா, வசந்தன் தூக்கத்தில் சுகமாக சாய்ந்திருந்தனர். குமாரசாமி முன் இருக்கையில் சாரதியுடன் பேசியபடி நாட்டு வழக்கை அவதானித்துக் கொண்டிருந்தார். மதுரை நகரை அண்மிய நேரம்தான் அவர்களைத் தட்டி எழுப்பினார்.

மீனாட்சியம்மன் கோபுரம் தூரத்தே தெரிந்தது. தமிழ்ச் சங்கங்களின் பிறப்பிடம் மதுரை. தமிழரின்

கட்டிடக்கலை, சிற்பக்கலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது மீனாட்சியம்மன் கோவில். கிழக்கு வாசலில் இறங்கி உள்ளே சென்றனர். வெளிமண்டபத்தின் இரு மருங்கும் அர்ச்சனைச் சாமான், பூமாலை விற்கும் கடைகள். ரோசா பூ மாலை ஒன்றும் அர்ச்சனைத் தட்டும் வாங்கிக் கொண்டு உள்மண்டபத்தை அடைந்தனர். வழியில் இருபுறமும் தெய்வசிலைகளும் சிற்பங்களும் வண்ண ஓவியங்களும் நின்று பார்க்கத் தூண்டின.

மனைவியைப் பார்த்து "பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு உள்ளே போய் அர்ச்சனையை முடித்துக் கொண்டு வாரும். நான் இங்கே நிற்கிறன்" என்றார் குமாரசாமி.

'பொற்றாமரைக் குளம்' என்றும் 'சங்கப் புலவர்கள்' என்றும் அறிவிப்புக்களை தன் டயரியில் குறித்துக் கொண்டார்.

பெயரிடப்படாமல் பார்த்தாலே இனம் காணக் கூடியவை அனுமார், துர்க்கை, விநாயகர் போன்ற சிலைகள். பொற்றாமரைக் குளத்தில் வைத்துத்தான் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது என்று படித்த ஞாபகம். சங்கப் புலவர்கள் இருபத்தி நான்கு பேரின் உருவச் சிலைகள் தூண்களில் இருந்தன.

மனைவி, பிள்ளைகள் வெளியில் வந்து தன்னைத் தேடுவதை கவனித்த குமாரசாமி அவர்கள் முன் போய் நின்றார். அவர் நெற்றியில் திருநீறு பூசினாள் கண்மணி.

வீதிவலம் வந்தனர். அவருக்கு மட்டுமல்ல ஐவருக்கும் கண்ணில் தெரிவதெல்லாம் அழகு. அழகுக் கலை என்று

தோன்றினவோ அருகில் வருவோருடன் அவை பற்றி பேசிய குமாரசாமியின் பின்னால் அவர்களும் நின்று கேட்டனர்.

கல்யாண கரும்பு தின்பதும் இராவணன் கைலையைத் தூக்குவதும் அழகான சிற்பங்கள். தெற்கு மண்டபத்தில் திருக்குறள் முழுவதும் பளிங்கு கற்களில் செதுக்கி சுவரில் பதிக்கப்பட்டுள்ளன. கிழக்கு வீதியில் நின்று சிவன், அம்மன் கோயில் விமானங்கள் தங்கமாய் ஒளிர்வதைப் பார்த்தனர். அம்மன் மண்டபம் எதிரே தங்கத்தாலான கொடிமரத்தைப் பார்த்தனர்.

கருவறையில் கையில் கிளியுடன் நிற்கிறாள் மீனாட்சி. வெளியே நந்தியும் பலிபீடமும் தங்கவண்ண கொடி மரமும் -

சூழவுள்ள எட்டுத் தூண்களில் மீனாட்சி சுந்தரேசர் திருமணக் காட்சிகள் - ஆயிரங்கால் மண்டபம் -

தமிழ் வருடங்கள் அறுபதையும் காட்டும் சக்கரம் -

கண்ணப்பர், பிட்சாடனன், சந்திரமதி, குறவன்குறத்தி சிலைகளின் அழகோ அழகு - சிற்பங்கள் நிறைந்த 985 தூண்கள் -

தெற்கு கோபுரம் உயரம் 160 அடி -

மேற்குக் கோபுரம் உயரம் 154 அடி - இதுவே மதுரைக்கு வருகின்றவர்களின் கண்ணில் முதல் தோன்றும் கோபுரம்.

கிழக்குக் கோபுரம் உயரம் 153 அடி -

திருமலைநாயக்கர் மகால் பிரமிப்பூட்டும் நாற்சதுர

மாடிக் கட்டிடம். மரம் இரும்பு பயன்படுத்தப்படாத மாடி அறைகள் - செங்கல், சுண்ணாம்பு, சாந்து மட்டுமே. தலை நிமிர்ந்து பார்த்தால் தாமரை வடிவில் வண்ணச் சித்திரங்கள் -

எல்லாம்... பார்த்தும்... கேட்டும் அகமகிழ்வோடு வெளியே வந்தனர்.

அழகர் கோயிலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது கார்.

மதுரை நகரைக் கடந்தபோது, வயலும், கோயிலும், குளங்ககளுமாக பசுமையாக இருந்தது பாதை. ஓர் அழிந்த நகரை நினைவூட்டுவது போல் தனித்தூண்கள் கற்கூரையுடனும் இல்லாமலும் வழி நீளம் தெரிந்தன.

மரம், செடிகள் சோலையாய் வளர்ந்த மலைச்சாரலில் இருந்தது அழகர் கோயில். அழகர் சுந்தரராஜன் என்ற பெயர் எதிரே மண்டபத்தின் கூரையில் பொறிக்கப் பட்டிருந்தது.

கருவறையின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. காரணம் கேட்டபோது "இனி, நாலு மணிக்குத்தான் திறபடும்" என்றனர்.

கரிய வண்ணச் சிலைகளையும் சிற்பத் தூண் களையும் மறைத்து மக்கள் கூட்டமாக நின்றனர். ஒளிவிளக்குகள் எரியத் தயார் செய்யப்பட்டன. பீடத்தில் கமரா 'சுடத்' தயாராய் நின்றது.

வேடமிட்ட ஒருவர் படுத்திருந்தார். எட்டிப் பார்த்த குமாரசாமி அங்கே 'படப்பிடிப்பு நடக்கவுள்ளது' என்று

தெரிந்து கொண்டு சொன்னார்.

"அதுக்காக கோயிலையே பூட்டிட்டாங்க..." என்றார் கார்ச்சாரதி.

"பழமுதிர்ச்சோலை இந்த மலைக்குப் பின்னால்தான் போகலாமா?" என்றார்.

அழகர் கோயிலைச் சுற்றி வளைந்து உயர்ந்து செல்லும் தார்ச்சாலை, இருகரையும் சோலை. மானும் மயிலும் சுதந்திரமாய் வாழும் மண். புள்ளினம் பாடிக் களிக்கும் பசுஞ்சோலை. கூட்டங்கூட்டமாய்க் குட்டி களுடன் அச்சமின்றி அருகில் வரும் குரங்குகள்.

மலையில் இருப்பது அம்மன். சிறிதே ஆயினும் செழுமை மிக்க கோயில், சிற்பங்கள், சிலைகள் கண்கவர் வண்ணங்களில் கோபுரத்து உச்சியில் தங்க கலசம். கீழே கால் பதித்ததும் "அதோ அதுதான் பழமுதிர்ச்சோலை முருகன் கோயில்" என்றான் சாரதி.

வீதியை ஒட்டி இருந்தது மண்டபம். குமாரசாமி வெளியில் நின்று அவதானித்தார். கண்மணியும் பிள்ளை களும் கற்பூரம் வாங்கி ஒவ்வொரு தட்டிலும் வைத்து வணங்கிக் கொண்டு சுற்றி வந்தனர்.

"அடுத்து எங்கே அப்பா...?"

"திருப்பரங்குன்றம்...

நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய முருகன் தலம். மலையைக் குடைந்து கட்டப்பட்டது போன்ற தோற்றம். தூரத்தே நின்று பார்க்கையில் கோபுரமும் கோயிலும் அதன் பின்னணியிலுள்ள மலையும் தெரிகிறது.

அண்மையில் சென்றால் கோயில் மலையை மறைத்து விடுகின்றது.

முகப்பு மண்டபத்தில் சிற்பங்கள் நிறைந்த நாற்பத்தெட்டு பெருந்தூண்களைப் பார்த்தார் குமார சாமி.

**பா**ண்டிய மன்னர்கள் ஆண்ட மதுரை. மீனாட்சியம்மன் கோயில் அதன் தலையாய சிறப்பு. அழகர் தலமும், திருப்பரங்குன்றமும், பழமுதிர்ச்சோலையும் மதுரையின் வரலாற்றுப் பெருமைக்கு சான்றாக உள்ளன. நகரில் வாழும் மக்களுக்கும், தரிசிக்க வரும் உலக மக்களுக்கும் கலங்கரை விளக்குப் போல் வானளாவி நிற்கும் கோபுரமும், வைகை நதியும் திருமலை நாயக்கர் மகாலும் மதுரைக்கு அழகு தருவன. டயரியில் முடிவுரை போல் இவ்வாறு எழுதிவிட்டு, சாரதியைப் பார்த்து மதிய உணவை முடித்துக் கொண்டு போகலாம், சைவ ஒட்டலுக்கு விடுங்க" என்றார் குமாரசாமி.

**ம**துரை மாநகரை விட்டுப் பிரியும்நேரம்.

மழை வரும் எனத் தோன்றியது.

"இனி வீடு தானே, மெல்லப் போகட்டும்" என்றாள் கண்மணி.

"வழியில் ஒரு கற்பக விநாயகர் கோவில்... பழைய கோவில்... பார்த்திட்டுப் போகலாமே" என்றார் சாரதி.

வழியில் தானே... பார்த்துக் கொண்டு போவோம்" என்றாள் கண்மணி.

குமாரசாமிக்கு மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"மாமாவுக்கு விருப்பமில்லையோ..." என சிரித்தாள் சித்திரா.

"ஓ... இவர் என்ன கோயில் கும்பிடவர் வர்றவர்..." சிரித்தாள் கண்மணி.

"அப்பா கும்பிட மட்டுமல்ல கலாச்சார சின்னங்களைப் பார்க்கவும் வருகிறார்...." – காந்தன்.

"நானும் கடவுள் நம்பிக்கை உள்ளவன்தான். கடவுளை நெஞ்சில் வைத்து வணங்குபவன் நான். அப்பனே முருகா அரோகரா என்று சத்தமிட்டு திருநீறும் சந்தனமும் குங்குமமும் நெற்றி நிறையப் பூசிக்கொள் பவன்தான் பக்தன் என்றால், அது தவறு... தெய்வச் சிலைகளை வணங்க நீங்கள் வருகிறீர்கள்... அந்தச் சிலைகளை உருவாக்கியவனை நினைப்பீர்களா? அழகுச் சிற்பங்களைக் கல்லில் இருத்தி கொத்தி எடுத்த கலைஞனை நான் வணங்குகிறேன். கருவறையில் கற்சிலையை வைத்தவன்தான் கர்த்தா... எல்லாம் பார்க்க வேண்டும் என்றுதான் முதலில் ஆசைப்பட்டேன். ஆனால் இப்போ பார்த்தவையே போதும் என்று நினைக்கிறேன். ஏனென்னறால் சிற்பியின் கைவண்ணம் எல்லா கோவில்களிலும் ஒரே கருத்தைத்தான் காட்டுகிறது...

அழகின் தரம் வேறுபடலாம். ஆனால் கலையின் வடிவம் ஒன்றே" சொல்லி முடித்துவிட்டு டயரியை எடுத்து முதலில் இருந்து பார்க்கலானார் குமாரசாமி.

மழைத்துளிகள் விழத்தொடங்கின.

◆

# அதிர்ச்சி

**தி**ல்லை நகரில் பொது மருத்துவமனைக்கு சமீபமாக திறமை வாய்ந்த டாக்டர்கள் பணியாற்றும் தனியார் மருத்துவ நிலையங்களை அவதானித்தபடி நடந்து கொண்டிருந்தார் மூர்த்தி.

பெரும்பாலான டாக்டர்கள் எம்.டி. பட்டம் பெற்றவர்கள். அப்பெயர்த் தகடுகளைப் பார்த்துக் கொண்டே வீதியோரம் நடந்து கொண்டிருந்தவரின் மனதில் வியப்பொலி.

"அட இத்தனை டாக்டர்கள்... எங்கட நாட்டில நல்ல டாக்டர்களுக்குப் பஞ்சம்... நல்ல மருந்துக்குத் தடை...." தன் பிறந்த மண்ணின் அவலங்களை எண்ணியபடி அவர் மெல்ல நடந்து கொண்டிருந்தார்.

மூர்த்தி தேடிச் சென்ற தனியார் மருத்துவமனையை

வீதியோரம் ஆட்டோவில் இருந்த ஓட்டியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு ஒரு பக்கமாக நடையைத் தொடர்ந்தார்.

இயந்திரமாக நடமாடும் மனிதர்கள். உயர்ந்த மாடிகள். வீதி நிறைந்த வாகனங்கள். விரைந்தோடி மறையும் ஈருளிகள். காந்தியார் காலத்தில், மனிதன் இழுத்த ரிக்ஷாவை நினைவூட்டும் முச்சக்கர உதைவண்டிகள், வளைந்து நிமிர்ந்து சாகசம் காட்டி, பெரும் வாகனங்களை முந்தி ஓடும் ஆட்டோக்கள். தெருவோர தேனீர்க்கடைகள். அவற்றின் பெயர் சொல்லும் 'காபிடீஸ்டால்' அறிவிப்புக்கள். அங்கே ஈ மொய்க்கும் சிற்றுண்டிகள்... அவருக்கு வியப்பளித்தன.

'பட்டணம் பார்க்க வந்த பட்டிக்காட்டானாக' மேலும் கீழும் கண்களை எறிந்தபடி போய்க்கொண்டிருந்த மூர்த்தியை பின்னால் வந்த கார் ஒன்று மோதிவிடுவது போன்று அருகால் காற்றாய்ப் பறந்தது. திடுக்கிட்ட வராய் ஒரு கணம் ஒதுங்கி நின்று நிமிர்ந்து பார்த்தார்.

"அடப் பார்... நல்ல காலம்..." என்று வாயசைத்தபடி நடையைத் தொடர்ந்தார்.

டாக்டர் ஜெகதீசன். எம்.பி.பி.எஸ், ஈ.என்.டி. பெஷலிஸ்ட் என்ற எழுத்துக்கள் தங்க நிறத் தகட்டில் மின்னியது கண்டு மகிழ்ந்து ஒரு நிமிடம் நின்று அவதானித்து வாசலில் காலணிகளை ஒரு பக்கம் கழற்றிவிட்டு, மாபிள் பதித்த தரையில் காலடி எடுத்து வைத்து அங்கிருந்த நோயாளர் வரிசையில் இறுதி இருக் கையில் அமர்ந்து கொண்டார்.

மேலே மின்விசிறி, வரவேற்பாளரின் மேசையருகே சுவரில் தொலைக்காட்சிப் பெட்டி. அதில் ஒரு இந்திப் படம் ஓடிக் கொண்டிருந்தது. நடந்து களைத்த மூர்த் தியின் உடலுக்கும் உள்ளத்துக்கும் அச் சூழல் சுகமளிப் பதாக அமைந்தது. கொழும்பில் உத்தியோகம் பார்த்த காலத்தில் மதுமதி, மதர் இந்தியா போன்ற படங்களை பார்த்திருக்கிறார். ஆஷா, லதாமங்கேஸ்கர் போன் றோரின் பாடல்களை அவர் பாராட்டியிருக்கிறார். பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு இந்திப்படத்தை பார்க்கக் கிடைத்ததில் மட்டிலா மகிழ்ச்சி மூர்த்திக்கு.

மனமகிழ்ந்திருந்தவர் எழுந்தார். விரைந்து போய் வரவேற்பு பணியில் இருந்த பெண்மணியிடம் "டாக்டரைப் பார்க்கும் வழி முறை என்ன? எப்போ வருவார்?" என்று கேட்டார். அவள் இவரிடம் பதிவுக் கட்டணம் ரூபா பதினைந்து பெற்று பெயரைக் கேட்டு எழுதிக்கொண்டு "ஆறு மணிக்கு வருவார். உட்காருங்க.... கூப்பிடுறம்." என்றாள். மூர்த்தி திரும்பிப் போய் அமர்ந்து கொண்டார். தொலைக்காட்சித் திரையில் அருமையான பாடல் காட்சி ஒன்று தெரிந்தது. அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தியின் உணர்வறியாத வரவேற் பாளர் எழுந்து "சானலை" மாற்றிவிட்டாள். இப்பொழுது ஒரு தமிழ்ப்படத்தின் ஆடல் காட்சி ஓடிக்கொண்டு இருந்தது.

அதைப் பார்க்கப் பிடிக்கவில்லை அவருக்கு. நேரத்தைப் பார்த்தார். 5.30 என சுவரில் இருந்த மணிச் சக்கரம் தெரிவித்தது.

வரிசையில் இருந்த சிலர், இருந்தே அலுத்தவர்களாய்

எழுந்து வெளியே போய் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தனர்.

"ஆறு மணிக்கு டாக்டர் வந்து, அத்தனை நோயாளரைப் பார்வையிட்டு, என் முறை வரும்போது ஏழு மணியாய் விடுமே" என்றெண்ணியபடி எழுந்து வெளியே போய் நடந்தார். மூர்த்தி அங்கேயும் சில மருந்துவ மனைகள். அழகிய மாடிக் கட்டிடங்கள். தெருவோரம், உயர்ந்து கிளை பரப்பிய மரங்கள். அங்கே பாடி ஓடும் புள்ளினங்கள், அவற்றில் மனதை செலுத்தியபடி நடந்தவர், "என் முறை வந்துவிட்டால், அதை தவற விட்டு விட்டால்...." என்ற அச்சம் உந்த திரும்பிப் போய் இருக்கையில் அமர்ந்தார். அங்கே பாதிப்பேர் அப்படியே இருந்தது கண்டு தன் அவசர புத்தியை எண்ணிச் சிரித்துக் கொண்டார்.

தொலைக்காட்சியில் பி.பி.சி. யின் செய்தி முடி வடையும் நேரம். ஒரு நாள் போட்டியில் ஸ்ரீலங்கா இந்தியாவிடம் தோற்றுப் போன காட்சி ஓடிக் கொண்டி ருந்தது. கிரிக்கட் ரசிகர்கள் கையில் இருந்த கொடி-களை உயர்த்தி ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர்.

ஆறு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. பணிப்பெண் ஒருத்தி டாக்டரின் அறையைத் திறந்து சில ஒழுங்குகளைக் கவனித்து அவர் வரவை எதிர்பார்த்து நின்றாள். சரியாக ஆறு மணிக்கு டாக்டர் வந்து அறைக்குள் சென்றார். வாசலை திரைச்சீலை மூடியது. முதல் நோயாளி அழைக்கப்பட்டார்.

அவர் உள்ளே போய் திரும்பி வர பத்து நிமிடங் களாயின.

மூர்த்திக்கு அதிர்ச்சி. தன் முறை வரும்போது எட்டு மணியாகுமே என்று கணக்கிட்டதுதான் காரணம். அடுத்தவர் உள்ளே போய் மூன்று நிமிடங்களில் வெளியே வந்தார். அவரையடுத்துப் போன சிலர் 5-10 நிமிடங்களில் கையில் துண்டுக் கடதாசியுடன் திரும்பி வந்தனர். ஒருவர் எக்ஸ்ரே அறைக்குப் போவது தெரிந்தது. சிலர் மருந்து எடுக்கும் யன்னலில் நின்றனர். இப்போ இருக்கையில் பலரும் இல்லை.

மூர்த்தியின் முறை வந்தது. அவருடன் பேசிய டாக்டர் பெயர், வயதுடன் சிறு குறிப்பு எழுதி, ஒரு பணிப் பொண்ணுடன் மற்றொரு அறைக்கு அனுப்பி வைத்தார்.

அந்த அறையில் ஒருவர், கணினி போன்றதொரு பொறி முன்னால் அமர்ந்திருந்தார். வெள்ளி முனை களுடன் சில வயர்கள் அதில் தொங்கின. அரை வளைவு வில்லுடன் கூடிய ஒலிவாங்கியை அவர் காதில் பொருத் தப்பட்டது. அவர் அந்த வயர்களை எடுத்தும் பொருத்தியும் மூர்த்தியின் காதில் விழும் ஒலிக் கதிர்களின் எதிர் விளைவுகளை கணிப்பிட்டு எழுதிக் கொண்டார். கேட்கிறதா? தெளிவாக? விளங்க வில்லையா? எனப் பல கேள்விகளைக் கேட்டு குறிப்பெழுதிக் கொண்டு, மூர்த்தி யின் தலையில் இருந்த கருவியை அகற்றினார். கையில் இருந்த புள்ளிவிபர அட்டையை கொடுத்தார்.

மூர்த்தி இப்போ டாக்டரின் அறையில் அந்த அட்டையை பார்த்த டாக்டர் "அதிர்ச்சி" என்றார்.

மூர்த்திக்கு ஆச்சரியம் - அதிர்ச்சி. "இவர் எப்படிக் கண்டு பிடித்தார்.?"

டாக்டர் சொன்னார் : "காது கேட்பதில் முப்பது வீதம் குறை உள்ளது. இந்தப் பாதிப்பு எவ்வளவு காலமாய் இருக்கிறது"

"ஐந்தாறு ஆண்டுகளாக..."

"நீங்க விபத்து எதையும் சந்தித்ததுண்டா?"

"இல்லையே..."

"தலையில் அடிபட்டதுண்டா? விழுந்ததுண்டா..."

"......."

மூர்த்தியின் முகத்திலிருந்து விடை கண்டு கொண்ட டாக்டர் "நீங்க சிலோன்தானே... யாழ்ப்பாணமா?" என்று கேட்டார்.

"ஆமா..."

"சரி... சார்..."

"நீங்க கையினாலோ ஆயுதத்தாலோ தாக்கப்பட்டதுண்டா?"

"திடீரென ஓடி விழுந்ததுண்டா... நீங்க அகதியாய் வந்திருக்கிறீங்களா?"

டாக்டர் கருணையோடு கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஒரு டாக்டரின் கேள்விகளுக்கு ஒழிக்காமல் பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால் நோயின் காரணத்தை அவரால் கண்டுபிடிக்க முடியாது" என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறார் மூர்த்தி.

அங்கே குண்டுச்சத்தம் கேளாத நாளில்லை. கடந்த பதினேழாண்டு காலத்தில் எத்தனை அவலங்களை

சந்தித்து விட்டு வந்திருக்கிறார் மூர்த்தி.

எல்லாவற்றையும் சொன்னார். படையினன் ஒருவன் கன்னத்தில் அடித்தபோது தடாரென விழுந்ததையும் பின் தலையில் இரத்தம் கசிந்ததையும் சொன்னார். "தமிழன் என்றால் வயதானவர், சிறுவர், பெண்கள் என்று பார்க்கமாட்டான் சார்..." என்று முடித்தார் கண்கலங்க.

மூர்த்தி சொன்னவற்றை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் "உங்க நிலைமைக்காக வருந்துகிறேன், ஆனால் இதற்கு மருந்து இல்லை....." என்றார்.

ஏமாற்றம்!

மூர்த்தி கேள்விக்குறியுடன் டாக்டரைப் பார்த்தார்.

"ஹியரிங் எய்ட் தான் இதற்கு சிகிச்சை. இதில் விபரம் இருக்கு" என்று அட்டையைக் கொடுத்தார் மூர்த்தியிடம்.

அதை பெற்று பார்த்துக் கொண்டு நன்றி கூறி விடை பெற்றார் மூர்த்தி.

◆

# அரிதான அனுபவங்கள்

"**பொ**ம்பரா பார் பிள்ளை..."

பதில் வருமுன்பே, கையில் இருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு எதிர் வீட்டுப் பக்கம் ஓடுகின்றாள் பொன்மணி.

"மாமீ, பொம்பரில்லை மாமி. பொம்மர் தான் சரியெண்டு மாமா சொன்னாரே அ... அது நேரே போகுது, பயப்பிடா தயுங்கோ மாமி..."

அடுத்த வீட்டுச் சிறுமி கஸ்தூரியின் குரல் அது. அந்த மழலைமொழி கேட்டுப் பாதி வெட்கமும் மீதி சிரிப்புமாக மெல்லத் திரும்புகிறாள்.

வீட்டுக்கு வந்து, கதவைத் திறந்து வைத்துக் கொண்டு சமையல் வேலையைத் தொடர்ந்தவள் தனக்குள் பேசிக் கொள்கிறாள்.

"அந்தப் பாலகிக்கு இருக்கிற அறிவு எனக்கில்லை... ம். இந்தக் காலத்துக் குழந்தையளுக்கு எல்லாம் தெரியும்... பொம்மர் எது... சீ பிளேன் எது.... கெலி எது எண்டு சத்தத்திலேயே தெரியுமாம்... ம்... நான் இதிலை தனிய இருக்கிறதாலை ஒரு திகில்..."

"மா... மீ..."

"என்னடா...?"

"ஆரோடை கதைக்கிறியள்?"

"ஒருத்தருமில்லை குஞ்சு... ஏதோ பிறகும் வருகுது போல... சத்தம் கேட்குது..."

"நான் பாத்துச் சொல்லுறன் மாமி பயப்பிடாதயுங்கோ... அது பொம்மரில்லை... அவ்றோ... அது நேரே போகுது..."

"போகட்டும் பொரிஞ்சு போவான்கள்... கண்டபடி பொழிஞ்சு கொட்டுறாங்கள்... பயப்பிடாமல் இருக்க முடியுமே....?"

"என்னடி, ஆருக்குப் பயம்..." கேட்டுக் கொண்டே நடராசர் – அவளின் தமையனார் - உள்ளே வருகிறார்.

அவர் பேப்பர் பார்க்கத் தினமும் பத்து மணியளவில் வருவார்.

"பொம்மர் போகுது அண்ணை.... அதுதான்."

"எடி அது போகட்டும், நீ சமையலைப் பார்.... எங்க பேப்பரைத் தா..."

மேசையிலை இருக்கும் எடுங்கோ" என்றவள், பின் அமைதியாக இருக்கிறாள்.

போர்நிறுத்தம் இல்லை.....

இனப் பிரச்சினை இல்லை.. பயங்கரவாதமே உண்டு. ஜனாதிபதி மீண்டும் கூறுகிறார்...

தாண்டிக்குளத்தில் துப்பாக்கிச் சூடு...

மன்னார் முகாம் ஒன்றிலிருந்து மூன்று படையினர் தப்பியோட்டம்...

மணலாற்றில் கடும் மோதல். பத்துப் படையினர் பலி.....

திருமலையில் கண்ணிவெடி... ஒரு அதிகாரி உட்பட எட்டுப் படையினர் பலி, இரு போராளிகள் வீரச்சாவு....

"ம் எல்லாம் பலி.. பலி... போர் நிறுத்தமும் இல்லை..."

"ஏதோ இரையுது என்னண்டு பாருங்கோ அண்ணை..." மணியின் குரல்.

"அது இரையட்டும்...... நீ உன்ர வேலையைப் பார்..." நடராசரின் அமைதியான பதில்.

"பொம்மரோ எண்டு கேக்கிறன்...."

"போற வாற பிளேன் எல்லாம் பொம்மர் எண்டு சொல்லிக் கொண்டு ஓடுறாய்... உன்ர மகன் அங்க பொம் மருக்குக் கீழை நிக்கிறான், பயமில்லாமல்.... சாகிறது ஒரு முறைதான் எண்டு அவன்களுக்குத் தெரியும்.. நீ என்னடான்டா வீட்டிலை இருந்து கொண்டு தினமும் சாகிறாய்..."

மணியின் மனம் இப்போ எங்கேயோ களத்தில் நிற்கும் மகனைப் பற்றி.

நடராசரின் கவனம் இப்போ பேப்பரில். அமைதியாகச்

சில நிமிடங்கள் கடந்தன.

பேப்பரை மடித்து மேசையில் போட்டுவிட்டு, "நான் வாறன் ராசா" என்றபடி அவர் போய்விட்டார்.

ராசா என்ற சொல் கேட்டு சிறிது மனம் குளிர்ந்தாள் பொன்மணி.

**அ**க்கம் பக்கம் மனிதர் இல்லாத தனி வீடு அல்ல அது. என்றாலும் அவள் வீட்டில் நாலைந்து பேர் இருந்தால் அவளுக்குப் பயம் இராது. இருக்கும் கண வனும் ஒரு மகனும் அவரவர் வேலைக்குப் போய்விட்டால் அவள் தனிமையில்.

வானில் பொம்மர் வட்டமிடும்போதும் குண்டு போடும் போதும் அடுத்த வீட்டுப் பெண்களுடன் பேசிக் கொண்டு நிற்பாள்.

சிறுவரும் இளைஞரும், வெளிப்பரப்பில் நின்று வானத்தைப் பார்த்தபடி "அந்தா வாறான்.... பதி யிறான்....குத்துறான்... போடப் போறான் போட்டிட்டான்...." என்று சத்தமிடுவதெல்லாம் மணிக்கும் கேட்கும். ஆனால் வெளியில் போய் பார்க்கத் துணிவு வராது. மறைவில் நிற்பது பாதுகாப்பு என்ற நினைப்பு!

அருகில் குண்டு விழலாம். தொலைவில் விழலாம். வீட்டுக்குள் இருப்பதும் மரங்களின் கீழ் நிற்பதும் ஆபத்து என்றும் வெளிப்பரப்பில் நிற்பதும் விழுந்து படுப்பதும் பாதிப்பை தவிர்த்துக் கொள்ளும் வழி என்றும் பலர் கூறக் கேட்டிருக்கிறாள். ஆயினும் பொன்மணிக்கு அந்த உத்திகளில் கவனம் செல்லவில்லை. பேச்சுத் துணையே

தைரியம் அளிப்பதாகத் தோன்றுகிறது.

உண்மையில் சாவு வருவது ஒருமுறைதான் என்பதைத் தெரிந்து கொண்டவள்தான்.

தனிமை அவளை அச்சுறுத்துகிறது.

தன் பிள்ளைக்கு மட்டுமல்ல அவள் அம்மா, அவனையொத்த பல போராளிகள், அம்மா என்று விழிக்கும் பேறு பெற்றவள்; அவளிடம் வந்து பசியாறிப் போனவர்கள். அவர்களில் சிலர் களத்தில் மறைந்த செய்தி கேட்ட போதெல்லாம் கண்கலங்கியவள்.

எல்லோரும் தங்கள் வீடுகளில் பதுங்குகுழி வெட்டு வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த ஒரு கட்டத்தில் "அம்மா நீங்கள் பங்கர் வெட்டயில்லையோ?" என ஒருவர் கேட்டபோது "என்ர பிள்ளை அங்க பொம்மருக்கும், கெலிக்கும் கீழை நிக்கிறான்... எனக்கென்ன பங்கர்?" என்று பதிலளித்தவள். கிட்டத்தட்டப் பத்தாண்டுகள் தெரிந்தோ தெரியாமலோ விடுதலைப் போராட்டத்திற்கு உதவி வந்தவள். அதன் விளைவாகக் கசப்பான அனுபவங்களை எதிர் கொண்டவள். இன்னுமா சாவுக்குப் பயப்படுகிறாள்?

**"மாமீ......"**

கல்யாணியின் கணீரென்ற குரல். "பொம்மர் மாமீ..."

வெளியே ஓடுகிறாள் பொன்மணி.

தெருவைக் கடக்ககையில் வலது பக்கம் சில பேர்கூடி நிற்பதைப் பார்க்கிறாள்.

பொம்மர்! பேரிரைச்சலுடன் சுற்றுகிறது.

"அட இரண்டடா....... அந்தா மற்றது...... நல்லாப் பதியுதடா... ச்சா..... இப்ப சுட்டால் விழுமடா......."

பயமறியாச் சிறுவர்களின் குரல்கள்.

நீர் வற்றி வறண்டு கிடக்கும் நரியன்குண்டைச் சுற்றியுள்ள புற்றரையில் இளைஞரும் சிறுவரும் கூடி நிற்கிறார்கள்.

அந்தா குத்துறான்..... போடாப் போறான்..... போட்டிட் டான்.... ஒருவனின் கூச்சல்.

அடுத்த பொம்மர் ஒரு வட்டம் போட்டு வந்து பதிகிறது.

"மறுகணம் கரும்புகை வான் நோக்கி எழுந்தது.

"அது கரையோரம் இருக்கும் ஒரு மாடிக் கட்டடத்தின் மேல் விழுந்திருக்கு..." என்றான் ஒருவன்.

எதையும் பொருட்படுத்தாமல் சைக்கிள்கள் போகின்றன; வருகின்றன.

ஒரு கறுப்பு 'வான்' விரைந்து கணத்தில் மறைகிறது.

ஓங்கி வளர்ந்து பரந்து மேகத்தை மறைத்து நிற்கும் ஆல், அரசு மரங்களின் கீழும் பெரியதம்பிரான் கோயில் வாசலிலும் சிலர் நிற்கின்றனர், கை கூப்பியபடி.

யாவையும் கவனித்தபடி தூரத்தே நான்.

எதிர்த் திசையில் ஒரு பொம்மர் சுற்றுகிறது.

அது புகை எழுந்த பக்கம் போகிறது.

டும்...ம்...ம்ம்ம்...

மீண்டும் கரும்புகை.

பொம்மர் போய்விட்டது.

குண்டு விழுந்த இடம் பார்க்க இளைஞர்கள் ஓடுகிறார்கள்.

ஏதும் அறியாதது போல் இயல்பு வாழ்க்கை திரும்புகின்றது.

என் அருகில் ஒரு சைக்கிள் சடுதியாய் நின்றது கண்டு திரும்புகிறேன்.

"ஐயா... எப்படிச் சுகம்..?"

"ஓ.... தேவன்...."

எண்பத்தொன்பதில் அசோக் ஹோட்டலில் புரட்சிகர இயக்கத்தவரின் கைதியாக, என்னுடன் இருந்தவன்.

நினைவலைகள் நெஞ்சில் முட்களாக....

என்னை அவர்கள் விடுதலை செய்வதற்கு முன் "நீ போகலாம்" என்று அவனை விட்டு விட்டார்கள்.

இரகசியமாக, என் வீட்டு விலாசமிட்டு, சிறு துண்டு எழுதி, நான் வைக்கப்பட்டிருந்த இடம் குறிப்பிட்டு அவனிடம் கொடுத்துவிட்டிருந்தேன்.

ஆனால், அவன் உளவாளியோ என ஐயமுற்ற என் மனைவி, 'இந்த வீடு அல்ல' என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

நான்காண்டுகள் போயின.

தேவன் என்னை மறக்கவில்லை.

வாழ்வின் அரிதான, மிகக் கசப்பான அனுபவங்களை எப்படி மறக்க முடியும்?

எதிரே வந்த மனைவிக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தேன். அவள் மௌனமாக நின்றாள்.

அவள் கவனத்தை எம்பால் திருப்பி 'அந்த நாள்' அனுபவங்களை நினைவுபடுத்திக் கொண்டோம்.

தேவன் உடலிலும், என் கைகளிலும் இன்றும் மறையாதிருக்கும் தழும்புகளைப் பார்த்துக் கொண்டோம்.

"வரட்டுமா?" என்று விடைபெற்றான் தேவன்.

"கவனம்... பாத்துப் போங்கோ..." என்றாள் மணி.

"சாவு வருவது ஒருமுறைதான் அம்மா..." – தேவன்.

◆

# ஓ தென்மராட்சி

அச்சு வேலியைத் தாண்டி புத்தூர் வரை வந்துவிட்ட படைகளை எதிர்த்து சண்டை உக்கிரமாக நடக்கிறது. பகல் இரவாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் சரமாரியாகக் கேட்கிறது. மோட்டார்க் குண்டுகள் இடைவிடாது முழங்குகின்றன. காலையிலும் மாலையிலும் தெற்கி லிருந்து வடக்கே வரும் போர் விமானங்கள் இலக்கின்றி குண்டுகளை வீசிவிட்டுத் திரும்புகின்றன.

சில நாட்களாக இரவு நித்திரையில்லை. போரின் விளைவுகள் - வீதிக்கு வீதி - வீட்டுக்கு வீடு - உயிரிழப்பின் ஏக்கங்கள். களத்தில் விழுப்புண் பட்டவர்களை ஏற்றி வரும் வாகனங்கள் மருந்துவமனை நோக்கி காற்றாய்ப் பறக்கின்றன. காயமுற்ற, கையிழந்த காலிழந்த பேராளிகள் நிறையும் மருத்துவமனைகள். இன்னும் ஐந்து மைல்களே உள்ளன. தமிழ் மக்களை

சுட்டும் வெட்டியும் கொல்லும் தொழில் புரியும் அரசுப்படை எந்த நேரத்திலும் வீட்டு வாசலுக்கு வந்துவிடலாம்.

பி.பி.சி. செய்தியை அவதானித்து விட்டு பாயில் சரிந்த மறுநிமிடம் வடக்கிலிருந்து கூவிக் கொண்டு வந்த 'ஆட்டிலறி ஷெல்கள்' கோட்டையை நோக்கிப் பறந்தன. கொட்டடிப் பக்கமும் விழுந்தன. அப்பகுதி மக்கள் அவசரமாக வெளியேறி மருத்துவமனை இருக்கும் பாதுகாப்பு வலையம் தேடி ஓடினர்.

எங்கள் வான்பரப்பில் எறிகணைகளும் துப்பாக்கி பொருத்திய ஹெலிகளும் குண்டு வீச்சு விமானங்களும் புக்காராவும் அவ்ரோவும் சீபிளேனும் வட்டமிடுவதும் தாக்குவதும் வீடுகளை தரைமட்டமாக்கி மனிதரை சதைத்துண்டுகளாக்கிவிட்டு போவதும் பத்தாண்டு களுக்கு மேலாக தொடரும் நடவடிக்கைகள்.

படுக்கையை விட்டு எழுந்து வெளியே ஓடுகிறேன். நல்ல நிலவு. இளைஞர்கள் கூடி வான்நோக்கி நின்றனர். தெருவோரம் ஒரு கிணறு. அதனருகில் உயர்ந்து நின்ற நீர்த்தாங்கியின் சுவரை பாதுகாப்பு அரண் என எண்ணி பெண்களும் குழந்தைகளும் அதனை ஒட்டி இருந்தனர். ஷெல் தாக்குதல் முடிந்த பின்பும் நீண்ட நேரம் பலர் தெருவில் நின்று நடந்த கொடுமைகளை விமர்சித்து விட்டு பிரிந்தனர்.

நேரம் 12 மணியாயிற்று. பாயில் சரிந்து பல நிமிடங் களாகியும் தூக்கம் வரமறுத்தது. அமைதியாக தூங்குவதற்கு வழி என்ன? ஐந்தாறு மைல் தொலைவிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்

தெளிவாகக் கேட்கிறது. அரியாலை, கொழும்புத் துறையில் ஒரு உறைவிடம் தேடி மனம் பாய்ந்தது. நாளை இரவு அரியாலையில் சகோதரி வீட்டில் போய்ப் படுப்பது என்ற முடிவுடன் தூங்கிப் போனேன்.

இரண்டு இரவுகள் ஓரளவு அமைதியாகத் தூங்கினேன்.

அக்டோபர் 31 மாலை 5.00மணி.

தெருவில் ஆரவாரம். மக்கள் வெள்ளம்.

பெட்டி படுக்கைகள், சைக்கிள்கள், மாட்டு வண்டில் கள், கார்கள், லொறிகள், செல்லப் பிராணிகள், ஆடுகள், மாடுகள்... வாழ்க்கையில் முன் என்றுமே கண்டிராத அதிர்ச்சி தரும் காட்சி.

எங்கே போகிறார்கள்?

பதில் சொல்லம் மனநிலையை யாரிடமும் காண முடியவில்லை.

யாருக்கும் நின்று பேச நேரமில்லை.

"தென்மராட்சி எவ்வளவு தூரம்?"

"'பத்து மைல் இருக்கும்..."

கேள்வியும் பதிலும் என் காதில் விழுகிறது.

மக்கள் வெள்ளம் தொடர்ந்து பெருகிக் கொண்டு இருக்கிறது.

"இப்ப இராணுவம் எங்கே நிற்கிறது?"

"நீர்வேலியில்..."

மற்றொரு கேள்வியும் பதிலும்.

அப்படியென்றால் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி விடுவார்களோ?

அவர்கள் கையில் அகப்படாமல் முன்னேற்பாடாக இப்படி ஒரு புரட்சியா?

அடுத்த நாள் காலை ஏழு மணிக்கு என் பயணம் தொடங்கியது. வீட்டுக்கு திரும்பிப் போய் மனைவி, பிள்ளைகளை அழைத்து வருவதற்கு எந்தப் பாதையும் இடம் தருவதாக இல்லை. எங்கு திரும்பினாலும் மக்கள் வெள்ளம். மனைவி மக்களை தனியே பின்னால் விட்டு சிறு பையுடன் சைக்கிளை உருட்டிக் கொண்டு நகர்ந்தேன். வீதி நிறைந்த மக்களுடன் கலந்து கொண்டேன்.

அழகு மாடிமனைகளை விட்டு வந்தவர்கள், பட்டியோடு மாடு கன்றுகளை விட்டு வந்தவர்கள், நெல்வயல்களையும் சிறுபயிர்த் தோட்டங்களையும் விட்டு வந்தவர்கள், செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர்கள். விறகு விற்றுப் பிழைத்த சைக்கிளோட்டிகள். ஒரே பாதையில் உயர்வு தாழ்வின்றி தென்மராட்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

அரியாலைச் சந்தியை வந்தடைய நேரம் பத்து மணியாயிற்று. அதுவரை இரு வேலிகளுக்கிடையில் நெருக்குப்பட்டு மனம் நொந்தவர்கள் பக்கவாட்டில் வயல்வெளிகளிலும் செம்மணி மயானத் தரவையிலும் பரந்து நடந்தனர். புற்பற்றை, வரம்பு, வாய்க்கால் சேறு தாண்டி சிரமப்பட்டனர். பெருந்தெருவை விட்டு விலகியதற்காக வருந்தினர். சேற்றிலும் நீர்க்குழிகளிலும் கால்களை விட்டவர்கள் தம்மை இந்த நிலைக்கு

உள்ளாக்கிய ஆட்சியாளரையும் படையினரையும் திட்டிக் கொண்டே நடந்தனர்.

பரந்த வெளி. குடிசை கொட்டில் மனை எதுவும் தென் படவில்லை. வலது பக்கம் தொலைவில் தென்னைகள் சூழத் தெரிந்தது ஒரு கோயில். அதன் எதிரே மேற்குப் பக்கமாக ஒரு கூட்டம் போய்க்கொண்டிருந்தது. அவர்களைப் பின் தொடர்ந்தேன். "வழியில் குறுக்கே கடல் நீர். ரயில்வே பாலத்தில் பலகை இல்லை. திரும்பிப் போங்கோ" என அவ்வூரவர் சொல்லக் கேட்டு கவலை யுடன், வந்த பாதைக்குத் திரும்பினோம். குறுக்குப் பாதை தேடிச் சென்ற மடைமையை சொல்லிப் பலரும் வருந்தினர்.

திரும்பிப் பெருந்தெரு நோக்கி நடக்கையில் சைக்கிளில் பெரிய பொதி கட்டி வந்தவர்கள் வரம்பு தவறி சேற்றில் விழுந்தவர்கள் பிறர் உதவியுடன் சைக்கிளை தூக்கி நிறுத்தி பொதியை நிமிர்த்தி கட்டித் தள்ளிக் கொண்டு நடந்தனர். தூரத்தே பிரதான வீதியிலும் பக்கவாட்டு வயல்களிலும் மக்கள் வெள்ளம் 'கும்பமேளா' போல் காட்சியளித்தனர். பிரதான வீதியை அடைவதற்கு இடுப்பளவு வெள்ளத்தைத் தாண்டி என் முன்னே பலர் போய்க் கொண்டிருந்தனர். உப்பளத் தரையிலிருந்து மேற்கு நோக்கிப் பாயும் உப்பு நீரில் இறங்கி ஒருவர் பின் ஒருவராக அக்கரையை அடைந்த போது என் கையில் இருந்த பையில் நீர் நிறைந்திருந்தது.

மழை தூற ஆரம்பித்தது. கொழுத்தும் வெய்யிலில் மனம் குளிர்ந்தது. கோப்பாய் பக்கம் சூட்டுச் சத்தம்

தெளிவாகக் கேட்டன. எங்கிருந்தோ வந்து இரண்டு போர் விமானங்கள் இரைந்து வட்டமிட்டன.

"கடவுளே... வாறாண்டா... புக்காரா... புக்காரா ஒருமிக்கக் கொல்லப் போறான்டா... கடவுளே..."

எங்கும் அவலக்குரல்கள் எழுந்தன.

நாவற்குழிச்சந்திக்கு அப்பால் போய்க் கொண்டு இருந்தவர்களில் நான்கு பேரை சதைத்துண்டுகளாக்கி பத்துப் பேரை காயப்படுத்திவிட்டு அவை மறைந்து போன செய்தி வந்தபோது மீண்டும் புத்தூர்ப் பக்கம் இரு புக்காராக்கள் வட்டமிட்டன.

மழை பலத்தது. குடை வைத்திருந்தோர் விரித்துப் பிடித்தனர். நடையால் வருந்தி தாகத்தால் நாவரண் டோர் மழை நீரை கையில் ஏந்தி நாவை நனைத்துக் கொண்டனர். மழைக் காலங்களில் வாய்க்காலில் விளையாடும் சிறுவர்கள் இப்போ அழுதபடி நடந்தது ஆச்சரியமளித்தது.

ஒரு பாட்டம் கொட்டிவிட்டு ஓய்ந்தது மழை. வெயில் சுட்டது. ஈரமடைந்த உடைகளும் பொதிகளும் உலரத் தொடங்கின. பார்க்குமிடமெல்லாம் பசுமை. வயல்களில் அரை அடி வளர்ந்திருந்த பயிர்களை மனிதக் கால்கள் மிதித்துப் புதைத்திருந்தன. நாவற்குழிப் பாலத்தின் கீழ் வெள்ளம் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. பாலத்தின் முடிவில் புளிய மர நிழலில் பலர் ஓய்வெடுத்திருந்தனர். அருகே உடைந்த கட்டிடத் தொகுதிகள். ஓ... அந்த நாள்கள் எவ்வளவு பசுமையானவை. அது ஒரு தொழிற்சாலை. நீர் இறைக்கும் இயந்திரங்கள் அங்கே

உற்பத்தி செய்யப்பட்டன. 1985 இல் அக்கட்டிடம் இராணுவத்தின் கையில் அகப்பட்டது. அந்தத் தடை முகாம் முன்னால் பயணிகள் வாகனங்களை விட்டிறங்கி வரிசையில் நின்று சோதனைகளுக்குட்பட்டு 100 யார் வரை நடந்து பயணம் தொடர்ந்தனர். இன்று ஆயிரக் கணக்கில் தடையின்றி சுதந்திரமாக நடக்கிறோம். எதிரே தென்னந்தோட்டம். எல்லையற்ற வெளி. கடல் காற்றின் சுகம். அங்கே இளநீர்க் குரும்பைகளைப் பறித்து குடிக்கிறார்கள். அடுத்த கட்டிடம் அந்நாளில் கடல் உணவு பதனிட்டு ஏற்றுமதி செய்த தொழிற்சாலை. அங்கே நூற்றுக்கணக்கில் ஆண்களும் பெண்களும் வேலை செய்தனர். அதனையடுத்து தென்னைகள் நடுவே இருந்த கண்ணாடித் தொழிற்சாலை. என்ன அழகு. ஒரு தொழில் நகரம் போல் வளர்ந்து வந்தது நாவற்குழி. இன்று இடிபாடுகள் புற்கள் – பற்றைகள் பயங்கர மேடுகளாய்...

சிறிது ஓய்வெடுக்க எண்ணி புளியமரத்தின் கீழ் இருப்பவர்களுடன் அமர்ந்து கொண்டேன்.

"சே எத்தனை லட்சார்ச்சனை. அபிஷேகம். திருவிழாக்கள்... சொற்பொழிவுகள்.... எங்கட கோயில் கள் பட்டபாடு... இந்த தெய்வமெல்லாம் எங்களைத் தெருவில் விட்டிட்டுதோ...." ஒருவரின் வேதனைக்குரல்.

"அப்பிடிச் சொல்லாத தம்பி... தெய்வங்கள் எங்களைப் பாதுகாப்பாகப் போய் தென்மராட்சியில் இருங்கோ... இராணுவம் வந்தால் சுட்டுக்கொன்று விடுவான்கள் என்று சொல்லி அனுப்பியிருக்கினம்...." என்றார் ஒரு பெரியவர்.

"நேற்று வந்த கிழவர் ஒருவர் இந்தப் பாலத்தடியில் விழுந்து செத்துப் போனாராம்... தூரத்தே ஒரு குரல்.

"ஏன் முன்னேறிப் பாய்ச்சலின் போது அளவெட்டியிலிருந்து வந்த அகதிகளில் இரண்டு பேர் தெருவில் விழுந்து செத்தது தெரியாதோ?"

மற்றொரு குரல்.

"அம்மா இனி என்னால் நடக்கேலாது... கால் நோகுது..." ஒரு சிறுமி சிணுங்கினாள்.

"மெல்ல மெல்ல போவம் அம்மா..." என ஆற்றினாள் தாய்.

"எங்கே போகிறோம்? எங்கே தங்குவோம், அகதிகள் முகாமிலா?" ஒரு பெண்ணின் கேள்வி.

"ஏதோ வீடு வாசலை விட்டு வந்தாச்சு... இனி அகதி முகாமோ மரநிழலோ... தெருக்கரையோ... அவன் விட்ட வழி" ஒரு பெரியவரின் பதில்.

"இந்த ஐ.நா.வும் மனித உரிமை இயக்கங்களும் என்ன செய்கின்றன.?"

எல்லாம் வெறும் பேச்சுகள் தான்... நீதி விசாரணையின்றி எவரையும் கைது செய்யவோ சிறையில் அடைக்கவோ... சித்திரவதை செய்யவோ கூடாது என்ற ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட்ட இந்த அரசாங்கம் இப்ப எங்களைத் தெருவில் விட்டிருக்கு....

"இனி எப்ப யாழ்ப்பாணம் திரும்புறது?" – ஒரு இளைஞன்.

இதைக் கேட்டு சிலர் சிரித்துக் கொண்டனர்.

"இன்னும் தென்மராட்சி போய்ப் சேரவில்லை... நீர் யாழ்ப்பாணம் பற்றிக் கவலைப்படுகிறீர்..." என்றார் ஒருவர். மேலும் சிரிப்பு.

"போன மாசம் 40 லட்சம் கொடுத்து வீடு வாங்கினவர் அந்தா இருக்கிறார். அவருக்கு இல்லாத கவலையா எங்களுக்கு....?"

"குடிசையை விட்டு வந்தவனுக்கு கவலையில்லையா; அவனவனுக்கு அதுதான் செல்வம்....."

"புத்தகங்களை எடுத்து வர முடியாமல் போச்சே..." ஒரு இளைஞனின் குரல்?

என் நெஞ்சம் மகிழ்ந்தது.

இரண்டு நாள் முன்பே முன்னேற்பாடாக என் புத்தகங்களை கட்டி ஒருவரின் லொறி தென்மராட்சி போவதைத் தெரிந்து கொண்டு அதில் அனுப்பிவிட்டேன்.

"இனியும் இருந்தால் தென்மராட்சி போய்ச் சேர முடியாது..." என்றபடி எழுந்தார் ஒருவர்.

அவரைத் தொடர்ந்து பொதிகளை தூக்கிக் கொண்டு எல்லாரும் நடக்கத் தொடங்கினர்.

நாவற்குழி தானியக் களஞ்சியத்தின் தெருப்பக்க மதிற்சுவர் நொருங்கிக் கிடந்தது. தெருவோரம் ஒரு பெரும் பள்ளம் இருந்தது. அதில் வெள்ளம் நிறைந் திருந்தது. அன்றொரு நாள் விமானங்கள் போட்ட குண்டுகளால் அந்தச் சுவர் உடைந்ததும் பாரிய குழிகள் தோன்றியதும் அயலில் வீடுகள் தொழிற்சாலைகள்

தரைமட்டமானதும் அவற்றை பார்க்க யாழ்ப்பாணத்திலிருந்து இளைஞர் படையெடுத்ததும் நினைவில் வந்தது. குண்டுகள் விழுந்த பள்ளங்களிலும் இடிபாடுகளிலும் புற்கள் பற்றைகள் வளர்ந்து காடாய்த் தெரிந்தது. நாவற்குழிச் சந்தியில் மக்கள் பிரிந்து கைதடி நோக்கியும் நாவற்குழி மறவன்புலவு பாதையிலும் நடந்தனர்.

கைதடி வயோதிபர் இல்லம். சைவச் சிறுவர் இல்லம். ஆயுர்வேத மருத்துவமனை. யாவிலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர்.

ஏனையோர் மேலும் நடந்தனர்.

கைதடிச் சந்தியை அடைந்தபோது பெட்டி படுக்கைகளை வைத்துக் கொண்டு பாடசாலைகள் கோவில்களில் தங்குவதற்கு தீர்மானித்தவராய் ஆயிரம் பேர் வரை இருந்தனர். அவர்களுக்கு இடம் ஒதுக்கும் பணியில் தொண்டர் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

கைதடிக்கு மேல் கூட்டம் அதிகமாயிற்று. முதல் நாள் இடம் பெயர்ந்து வந்தவர்கள் பலர் இங்கே தங்கியிருந்து புதிதாக வந்தவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

வெயில் சுட்டது. "ஒரு மழை பெய்யாதா" என ஏங்கி வருந்தியோர் பலர். நாவற்குழிப் பாலத்தில் மழையில் நனைந்த போதிருந்த சுகத்தை எண்ணி மகிழ்ந்தேன். இன்னும் சில மைல் தூரம் இருக்கு. ஆனால் இருள் படருமுன் போய் சேர்ந்து விடுதல் சாத்தியமில்லை. சனக்கூட்டம் நகரும் வேகம் மனச்சோர்வைத் தந்தது.இத்தனை லட்சம் பேரில் எத்தனை பேர் எங்கே

போகிறோம் என்று தெரிந்து கொண்டு போகிறார்கள். எனக்குப் பிறந்த ஊர் போகிறேன் என்று உள்ளூர மகிழ்ச்சி - மனநிறைவு. ஆனால் ஆயிரமாயிரம் மனிதருடன் நானும் நடந்தாகவேண்டும். மனைவி, பிள்ளைகளைப் பின்னால் அநாதரவாக விட்டு வருகி றேனே என்று மனம் வருந்தினாலும் இத்தனை லட்சம் பேரில் ஒருவர் துணை அவர்களுக்கு கிடைக்காமலா போகும் என்றெண்ணி ஆறுதலடைந்தேன்.

இது புது அனுபவம். பத்து மைல் நீளம் முன் என்றுமே நடந்ததில்லை. ஒன்றரை மைல் நீண்ட வரிசையில் நான்கு மணித்தியாலங்கள் நகர்ந்து முதல்முதலில் சந்திரனில் இறங்கிய விண்கலத்தைப் பார்க்க கொழும்பு வீதியில் சென்ற அனுபவம் உண்டு. விடுதலைப் போராட்டம் நடக்கும் நாடுகளில் எதிலிகளாக்கப்பட்ட மக்களையும் அவர்கள் பசி பட்டினியாக ஆயிரக் கணக்கில் மடிந்ததையும் பத்திரிகைகளில் படித்த துண்டு. நாங்களும் விடுதலைக்காகப் போராடுகிறோம். அதனால் ஏதிலிகளாகப் போய்க்கொண்டிருக்கிறோம். இது எங்கள் பங்களிப்பு. இது ஒரு வெற்றி. மக்களற்ற வெற்று நிலத்தை எதிரி கைப்பற்றி ஆளப்போகின்றான். அவன் கையில் சிக்காமல் நாங்கள் தப்பிக் கொண்டதில் பெரும் மனநிறைவு.

இடம் பெயர்ந்து வருகிறோம்.

கைதடிப் பிள்ளையார் கோவில் கட்டி முடிக்கப்படாத நிலையில் கண்ணில் பட்டது. மூலஸ்தான கோபுரம் ஓலைகளால் மூடி மறைக்கப்பட்டிருந்தது. சுமார் பத்தாண்டுகளாக அதை தோற்றம். பக்தர்கள் தினமும்

காணிக்கை தருகிறார்கள். பெருந்தொகைப் பணம் சேரும். ஆனால் கோயில் கட்டி முடிக்கப்படவில்லை. ஏன்? என எண்ணியபடி கோயிலை அடைந்தேன். அங்கே தாகம் தீர்க்க முடிந்தது. இன்னல் வரும்போது தான் கடவுள் எண்ணம் வருகிறது. "விநாயகா" என் வாய் உச்சரித்தது.

வானம் இருண்டது. காற்று குளிர்ந்து வீசியது. மீண்டும் மழை. வான்முகில்கள் மோதி முழங்கின. சிலர் முகங்களில் சிரிப்புத் தெரிந்தது. சற்று விரைந்து நடக்க முடிந்தது. என் முன்னால் ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண். மெல்ல நகரும் நிலை கண்டு உள்ளம் வருந்தியது. அவளுக்குத் துணையாக அருகில் ஒரு சிறுவன், பொதி ஒன்று சுமந்தபடி. அவன் அவளுடைய மகன் என்று உணர்ந்தேன். அவ'னை அணுகி. "தம்பி உனக்கு யாரும் துணை இல்லையா? பெரும் பொதியை சுமக்கிறாயே" என்றேன்.

"இது அம்மா, அப்பா கொழும்பில்...." என்றான் அவன். அவன் சுமையைப் பகிர்ந்து கொள்ள நினைத்தேன். பார்க்கப் போனால் சுமை இல்லாதவர்களே இல்லையே. சுமக்கவைத்தவர்களை வைதபடி நடந்தேன்.

கால் வலித்தது. தெருவோரம் இருக்க நினைத்தேன். மனம் தடுத்தது. எத்தனையாயிரம், எத்தனை குழந்தைகள், எத்தனை வயோதிபர்கள், எத்தனை தாய்மார்கள்... எனக்கு மட்டுமா களைப்பு, எனக்கு மட்டுமா இழப்பு? கால் மைல் நடந்து பழக்கமில்லாதவர்களும் காரில் பவனி வந்தவர்களும் காசுத்தாள்களையும் தங்க நகைகளையும் இரும்புப் பொட்டியில் பூட்டி காவல் வைத்தவனும்

எங்கே போகிறோம் என்பதறியாமல் நடந்து கொண்டிருக் கிறார்கள். எந்த ஊர் சென்றடைவார்களோ, எந்த நிழலில் படுப்பார்களோ? குண்டுகளுக்கு இலக்காகாமல் இந்த இரவை எங்கு தான் கழிப்பார்களோ?

எனக்கு மட்டும் என் வீடு திறந்து கிடக்கிறது. எனக்கு முன் போனவர்கள் யாரும் குடியிருக்காத என் வீட்டின் தெருப்படலையைத் திறந்து பொதிகளை ஒரு புறம் வைத்து விட்டுப் புகலிடம் கிடைத்ததாக மகிழ்வார் களே! பிறந்த மண்ணில் வீட்டை பூட்டி வைத்து விட்டு நகர்ப்புற வாழ்க்கை நாடி தொழில் மையத்தை மாற்றிக்கொண்டு ஐந்தாண்டுகளுக்கு முன் வெளியேறி யவன் இப்போ அந்த வீடு நிழல் தரும் என நம்பி நடந்து கொண்டிருக்கிறேன்.

◆

# நன்றியுணர்வு

மாலை 4.30 மணியானதும் கொழும்பு வானொலி வானம்பாடியின் செய்தியைக் கேட்டுக்கொண்டு தெருவில் இறங்கிய அருணாசலம் சாத்தனூர் முருகன் கோவிலை நோக்கி நடந்தார். வழியில் பத்திரிகைக் கடையின் முன் ஒரு நிமிடம் நின்று, அன்றைய மாலைச் செய்தி தாள்களில் வந்திருக்கும் முக்கிய செய்திகள் சொல்லும் போஸ்டர்களைப் பார்த்தார்.

பொங்கல் பரிசாக ஒன்றரை லட்சம்... வறியவர் களுக்கு வேட்டிசேலை... மலை இடிந்து சபரிமலை பக்தர்கள் 54 பேர் பலி.... பொங்கல் சுப்பர் பரிசு இரண்டு கோடி திண்டுக்கல் வாசிக்கு...

"டிக்கட் நம்பர் பார்க்க... என்று கேட்டு, ஒரு பேப்பரை வாங்கி தன்னிடமிருந்த டிக்கட்டின் நம்பரை அதில் தேடினார். ஆறுதல் பரிசாக ஐம்பது ரூபா இருந்தது.

பேப்பரைக் கொடுத்துவிட்டு நான்கு கடைகளுக்கு அப்பால் இருந்த டிக்கட் ஏஜண்டிடம் தன்னுடைய டிக்கட்டை கொடுத்து காசு பெற்றுக்கொண்டு போய்க் கொண்டிருக்க இடது பக்கத்தில் கட்டப்பட்டிருந்த பதாகை ஒன்றில் அவர் கண்கள் பதிந்தன. அந்த கவர்ச்சியான விளம்பரத்தை பார்த்தவருக்கு சிரிப்பு வந்தது. அதில் "திக்கான, சத்தான ஆரோக்கிய பால்" என இருந்ததுதான் அவர் சிரிப்புக்கு காரணம்.

ஏன் தடிப்பான... என்று எழுதக் கூடாது... என்றெண்ணியபடி அப்பால் நகர்ந்தார்.

கோயில் முன்னால் கட்டட வேலைக்கென மதில் ஓரம் குவிக்கப்பட்டிருந்த மணலில் ஐந்தாறு பேர் அமர்ந்திருப் பது தெரிந்தது. அவர்களில் கருப்பையாவும் ஒருவர். கோயில் வெளிக் கேட் இன்னும் திறக்கப்படவில்லை. ஆயினும், இரும்பு சட்டங்களாலான 'கேட்'கள் ஊடே கரு வறையில் இருக்கும் மின்வெளிச்சத்தில் முருகனை, தெருவில் நின்று கூட வணங்க முடியும்.

திருச்சி மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் சாத்தனூர் என்ற பேரூரில் உருவாகியுள்ள கருணாநிதி நகர், எல்.ஐ.சி. காலணி, சுந்தர் நகர், தொண்டமான் காலணி எனப் பல சிறு நகரங்கள் அடங்கும். ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களினால் விபத்துக்குள் ளாகாமல் பாதசாரிகள் பாதுகாப்பாக செல்வதற்கு வசதி யாக நடைபாதை இல்லை. பதிலாக ஒற்றையடிப் பாதை. அப்பாதையில் வந்த சைக்கிள் ஒன்றுக்கு இடமளித்து விலகி நின்றவரை ஒரு முட்செடி கொளுவி இழுத்தது.

எங்கு பார்த்தாலும் வெற்று நிலங்களிலும் வீதியோரங் களிலும் இந்த முட்செடி ஆளுயரத்துக்கு செழித்து

வளர்ந்திருக்கும்: பசுமையாக அழகாக காட்சி தரும் சமையல் விறகாகப் பயன்படும் என்று எப்போதோ ஹெலிகப்டரிலிருந்து தூவப்பட்டதாம் இதன் விதைகள், வேலிகாத்தான் என்று பெயர்.

இச்செடிகளுக்கும் தெருவுக்கும் இடைப்பட்ட நிலத்தில் அதாவது அந்த ஒற்றையடிப் பாதையில் - மனிதர் காலைக்கடன் கழித்துவிட்டுப் போய்விடுவர். முள் குத்தாமல் செடிகளை விலக்கி உள்ளே மறைவில் போய் இருப்பதும் அவர்களுக்கு இயலாத காரியம்தான். பாதசாரிகள் மூக்கைப் பொத்திக்கொண்டே எட்டி அடிவைப்பர்.

கொளுவிய முள்ளை மெல்ல எடுத்துவிட்டு எட்டி நடந்த அருணாசலம் அப்போது தான் அர்ச்சகர் வந்து கேட் திறப்பதையும் வெளியில் காத்து நின்ற பக்தர்கள் அவரைத் தொடர்ந்து உள்ளே போவதையும் பார்த்தார். உள்ளே சென்ற ஐயர் முதல் பணியாக ஒலிபெருக்கியை இயக்கிவிட்டார். "முருகா நீ வரவேண்டும்..." கணீரென்று கேட்டது. அருணாசலம் நாவிலும் "முருகா..."

சில வேளை வந்திருந்து அவர்களுடன் பேசிப் பொழுது போக்கும் கருப்பையா அவரைக் கண்டதும் "வாங்க வாங்க" என வரவேற்றார்.

கருப்பையா முன்னாளில் கொழும்பில் வசித்தவர். வியாபாரம் செய்து கொண்டு நல்ல நிலையில் இருந்தவர். எண்பத்து மூன்றாம் ஆண்டு இனக்கலவரத்தின் போது அவருடைய கடை எரிக்கப்பட்டதோடு பிறந்த மண்ணுக்குத் திரும்பி வந்தவர். அந்தக் கால அனுபவங்களை அவர் சொல்லிக் கேட்டிருக்கிறார், அருணாசலம். இப்போதும் மேலும் சில அனுபவங்களை

அவரிடமிருந்து அறியும் ஆவல் உந்த "யாவாரம் எப்படிப் போகுது? கொழும்பு போல வராது.... இல்லையா" என ஆரம்பித்து வைத்தார்.

"கொழும்பு சீவியம் நல்லாதான் இருந்தது.... அது ஒரு காலம்..." என்றவர் ஒரு கணம் நிறுத்தி "இங்கேயும் பரவாயில்லை ஆனா..."

"இவர் கொழும்பில எவ்வளவு காலம் இருந்தவர்" என்று கேட்டார் அருகில் இருந்தவர்.

"அவர் அங்கே முப்பது வருடங்கள் இருந்தவர்... அவருக்கு அந்தக் காலத்து அரசியல்... எங்கட தலைவர்கள், சிங்களத் தலைவர்கள்.... பலரையும் தெரியும்" என்றார் அருணாசலம்.

கருப்பையா தொடர்ந்தார்.

"நான் இருபது வயசில கொழும்புக்கு போனது, முதல்ல சம்பளத்துக்குத்தான் வேலை செஞ்சன்.... அப்புறம் சின்னதா ஒரு கடை வைச்சன்... கொஞ்சம் கொஞ்சமா நல்ல யாவாரம் நல்லாதான் இருந்தேன். வந்துதே பண்டாரநாய்க்கா ஆட்சி... ஐம்பத்தாறில சிங்களம் மாத்திரம் சட்டம் கொண்டு வந்தாரு அவர்... அதுக்குப் புறகு தான் அந்த நாட்டில பிரச்சனை வந்திச்சு, ஒத்துமையா இருந்த சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் எல்லாம் பிரிஞ்சு விரோதப்பட்டாங்க... இங்கிலீசு இருந்த இடத்தில் சிங்களத்தை வைச்சு புறகு தமிழுக்கு சம உரிமை கேட்டு தமிழ் தலைவரு போராடி னாங்க.... செல்வநாயகம் சார் தலைமையில் சத்தியாக் கிரகம் பண்ணினாங்க... சிங்கள காடையரு வந்து அவருகளை எல்லாம் பொல்லால... கல்லால தாக்கி னாங்க.... பொலிஸ்காரங்க பாத்தும் பேசாம நிண்

டாங்க... அப்புறம் பொலிஸ் வேன் வந்து எல்லாரையும் ஏத்திட்டுப் போனாங்க... அதுக்குப் புறகு அடிக்கடி பிரச்சினை தான்... அப்பே ஆண்டுவ (எங்கள் ஆட்சி) உம்ப கள்ளத் தோணி என்பாங்க. கொலை, கொள்ளை சாதாரணமா நடக்க ஆரம்பிச்சுது.... பொலிஸ் பாத்திட்டே நிப்பாங்க. சிலோன் தமிழர் சரி இந்தியத் தமிழர் சரி சிங்கள காடையருக்கு பயந்து வாழவேண்டியதாச்சு.... தமிழர மதிச்சு சிங்களவருல்லாம் கீழ் நிலையில வேலை செய்தாங்க... கவுண்மேந்து டிப்பாட்மெண்ட் எல்லாம் தமிழர் தான் மேலதிகாரியாக இருந்தாங்க.. பெரிய யாவாரமெல்லாம் இந்தியா ஆட்கள் தான் செஞ்சாங்க.... தமிழ் தலைவர்கிட்ட ஆலோசனை கேட்டு அரசியல் நடத்தினாங்க... அது ஒரு காலம் சேர் பொன் இராமநாதன்...

"ஓ... அவரையும் உங்களுக்குத் தெரியுமா?" என்று இடையில் குறுக்கிட்டார் அருணாசலம்.

"தெரியாது... அவர் நாற்பத்தைந்துக்கு முன்னாடி இருந்தவர். அவர் காலத்தில சிங்களவர் முஸ்லிம்கள் இடையில் ஒரு சண்டை நடந்துதாம்... இராமநாதன் துரை லண்டனுக்கு போய் வெள்ளைக்கார அதிகாரியோட பேசி ஒரு தீர்வுக்கு ஆடர் கொண்டு வந்தாரு... வந்து இறங்கிய ஒடன அவரை குதிரை வண்டியிலை இருத்தி சிங்கள தலைவரு எல்லாம் ஊர்வலமா இழுத்திட்டு போனாங்களாம்.... அவருக்கு கொழும்புல பார்லிமெண்டு முன்னால சிலை வைச்சிருக்காங்க... அவருக்கு புறகும் கூட ஐம்பத்தாறுக்கு முன்னால, செல்வநாயகம், வன்னியசிங்கம், செனட்டர் நடேசன், சுந்தரலிங்கம், ஜி.ஜி பொன்னம்பலம்... எல்லோருக்குமே நல்ல மதிப்பு

இருந்திருச்சு.. நாமளும் பிரச்னை இல்லாம இருந்தம்... இந்த அம்மா இருக்காவே... இப்ப சனாதிபதியா... இவற்ற அப்பா தான் பண்டாரநாயக்கா... அப்பே ஆண்டுவ எண்டு சத்தம் போட்டிட்டு வந்த சிங்களக் காடையரு பார்லிமெண்ட் உள்ளே போய் கதிரையில உட்கார்ந் தாங்க... அதை அறிஞ்ச பண்டாரநாயக்கே "இருக்கட்டும் இது மக்கள் ஆட்சி" எண்டாராம்... அப்பிடி விட்டு பிடிச்சதால நிலம மோசமாமச்சு... பறத்தெமில கெரித் தெமில, கள்ளத்தோணி.. அப்படியா தமிழருக்கு எதிரா துவேச பேச்சல்லாம் ஆரம்பிச்சுது... அரசாங்கமும் அதையெல்லாம் கண்டும் காணாம... நடந்துச்சு... தமிழர் தலைவரு இதையெல்லாம் கண்டிச்சு பார்லிமெண்ட்ல பேசுவாங்க... வெளியில கூட்டம் போட்டு பேசுவாங்க...

"சாத்வீகமா.. காந்தி செய்ததுபோல போராடினாங்க... கம்யூனிஸ்ட், சமசமாச கட்சி தலைவரு கூட தமிழுக்கு சமத்துவம் கொடுங்கன்னு தான் சொன்னாங்க.. அவங்களும் பின்னால ஆட்சியில பங்கு பற்றினாங்க... மந்திரி பதவில இருந்தாங்க.. ஆனா தமிழுக்கு சம உரிமை கொடுக்கல்ல.. அப்புறம்... காலம் போகப் போக இனப்பிரச்னை பூதாகரமா வளர்ந்திட்டிருந்தது. 56ல, 65ல, 70ல, 77ல, 83ல எல்லாம் தமிழர படுகொலை பண்ணினாங்க... தமிழர்கடை, கார், வண்டி எல்லாமே நெருப்பு வைச்சாங்க.. நமக்கு சிங்களம் பேச வரும்... சிங்களவரோட ஐக்கியமாகத் தான் இருந்தன். ஆனா 83ல "உம்ப தெமிலத.... நம மொக்கத?" ன்னு கேட்டுக் கொண்டு காடையர் வந்தாங்க... சிங்களத்தில பதில் சொன்னனே... ஒருத்தன் என்ட கன்னத்தில அடிச்சான்... விழுந்து எழும்பி பின்பக்கமா ஓடி... லான்ட் ஓனர் வீடு

கிட்டத் தான் இருந்தது... "மாத்தயா காப்பாத்துங்க.. ன்னேன். அவர், பய எப்பா அத்துலட்ட என்ட... (உள்ளே வா) எண்டாரு... அங்கயிருந்து பாத்தா கடை எரியுது.... கடைக்குப் பின்னால ஒரு அறை.... அலுமாரியில பணம் இருந்திச்சு... ஐம்பதினாயிரம்... காசு, கடை சாமான் எல்லாம் சாம்பலாய்ப் போச்சு..."

"காசை.... தேடி எடுத்திட்டு நெருப்பு வச்சிருப்பாங்க" என்றார் ஒருவர்.

"எப்பிடியோ... எல்லாம் போச்சு.... நாலு நாள் அவர் வீட்டில இருந்தன். பொலிசும் இராணுவமும் பாதுகாப் புக்கு வீதியில டியூட்டி நிக்கிறாங்க. இப்ப பிரச்னை இல்லையென்று அப்புகாமி வீட்டுக்காரன் - சொல்ல, "சரி மாத்தயா... நா வார்ரன் புள்ளயள பார்க்கப் போறன்னேன். வீடு கொட்டாஞ்சேனையில... அவர் உள்ளே போய் வந்து "பத்தாயிரம் இருக்கு" எண்டு ஒரு கவரை என்டை கையில வைச்சார். கண் கலங்க... வணக்கம் சொல்லி விட்டு வெளில வந்து... பஸ் ஏறி வீட்டுக்குப் போனா... புள்ளக சம்சாரம் எல்லாம் என்னகட்டிப் புடிச்சு அழுகி றாங்க... எல்லோருமே ஒரே குரல்ல... "அப்பா இங்க சிங்களவரு வந்தாங்க... கத்தி பொல்லு எல்லாம் வைச்சி ருந்தாங்க, நாங்க பின்னால ஒடி காதர் நைனா வீட்டில இருந்திட்டம்.... கதவ அடிச்சுப் பாத்திட்டு போய்ட் டாங்க... அப்பா... என்னாச்சு... எங்க இருந்தீங்க..."

"கடைக்கு நெருப்பு வைச்சிட்டாங்க... நா.... மொத லாளி வீட்டுக்கு ஓடிட்டன்.... அமளி ஓஞ்சப்புறம் வாரன்...."

"அப்பா நாம ஊருக்குப் போவம்..." ன்னு எல்லாம் ஒரே குரல்ல அழுதாங்க. வீட்டிலையும் கொஞ்ச பணம் இருந்திச்சு... திரும்பிடலாம்னு முடிவாச்சு... கொழும்புக்கு

ஒரு வணக்கம்... வந்து சேர்ந்திட்டம்..."

"இப்ப வசதியா... சொந்த மண்ணில சந்தோசமா இருக்கிறீங்களே?" அருணாசலம் சொன்னார்.

"ஆமா... இது நம்ம மண்.. யாருக்கும் பயமில்ல.... சின்ன கடை வைச்சிருக்கன்.... கஞ்சி குடிச்சாலும் நிம்மதியா தூங்க முடியுதில்லையா..."

"அந்தக் காலத்திலை உங்களை கள்ளத்தோணி எண்டாங்கள்... இப்ப எங்களை கள்ளத்தோணி என்கி றான்கள். போன கிழமை பேப்பரில பார்த்தேன். 'கள்ளத் தோணியில் இலங்கை அகதிகள் முப்பதுபேர் வந்து தனுஷ்கோடியில் இறங்கினார்கள்' என்றொரு செய்தி இருந்தது." என்றார் அருணாசலம்.

அருணாசலத்துடன் இருந்தவர்கள் எல்லாரையும் பார்த்த கருப்பையா, "பயப்படாதீங்க... உங்கட பொடியள் வீரனுகள்... சிங்கள அரசுக்கு நல்ல அடி கொடுக்கி றாங்க... ஆமா.. எனக்குத் தெரியும்... எல்லாம் அறிஞ் சிட்டுத் தான் இருக்கேன். கவலைப்படாதீங்க... அநீதி நீண்டகாலம் நிலைக்காது... நீங்களும் கெதியில திரும்பிப் போய் சுகமாக சுதந்திரமாக வாழத்தான் போறீங்க..."

"நன்றி... எங்கள் நாட்டில் நீங்கள் வாழ்ந்திருந்த காரணத்தால் நன்றியுணர்வுடன் பேசுகிறீர்கள். ஆனால் இந்த நாட்டில அதிகம் பேருக்கு எங்கள் பிரச்னை.. எங்கள் அவலம் தெரியாது.... இங்கே எங்களை...

அருணாசலத்தை தொடரவிடாமல் கோபுரத்துக் கண்டாமணி ஒலித்தது. முருகா.... என்றவாறு எல்லோரும் எழுந்து நின்றனர். ஐயர் கற்பூரதீபம் காட்டிக் கொண்டு இருந்தார்.

◆

## எரிகிற வீட்டில்

வன்னி மண் வளங்கொழிக்கும் மண்... எங்கு பார்க்கினும் காடுகள் தான்... பசுமையான மரங்கள்... நடு நடுவே வீடுகள். தென்னை, பனை, மா, பலா, வாழை, இனிய பழம் கொட்டடும் பாலை. நீண்டகன்ற சாலைகள்... இரு கரையும் பற்றைகள், பசுஞ்செடிகள், மூலிகைக் கொடிகள், பயன்மிக்க முதிரை மரங்கள், நீரோடும் வாய்க்கால்கள்.. குளங்கள்... அவை நடுவே கிளை பரப்பும் மருத மரங்கள்.... அங்கே நீராடும் மங்கையர், ஆடவர், குதித்து விளையாடும் சிறுவர்கள், வான் வெளியில் பாடிப் பறக்கும் புள்ளினங்கள். சில வேளை களில் சாலைகளைக் கடந்து செல்லும் மயில், மான், கீரி, பன்றி, யானை, காட்டுக்கோழி, உக்கிளான், உடும்பு... பச்சைக்காய்கறி, கரும்பு, பாக்கு, மரவள்ளி, பழங்கள் விளையும் தோட்டம், நெல்வயல்... மழை, வெயில் பாராது பாடுபடும் விவசாயி... நாகரிகத்தின் பெயரால் பண்பாடு

பிறழாத, இயல்பான வாழ்க்கை முறை, ச்சே... இந்த மண்ணிலேயே இருந்திடலாம். யாழ்ப்பாணம் ஏன் போகவேண்டும்....?

இதுவும் தமிழ் மண்தானே... நாங்கள் சொந்த மண்ணில் ஏதிலிகளா? - அந்நிய படையெடுப்பை எதிர்த்துப் போரிட்ட பண்டாரவன்னியனும் கைலை வன்னியனும் ஆண்ட மண்....

"என்ன ஐயா... யோசனை பலமாயிருக்கு.....?" அவருக்கு, கொட்டில் கட்ட இடமளித்த இளைஞன் கேட்க, சிந்தனையிலிருந்து விடுபட்ட சுந்தரம் நிமிர்ந்து பார்த்து, "தம்பி வாரும் இரும்" என்றார், புன்சிரிப்புடன்.

**கி**ளிநொச்சிக்கு கிழக்கே மூன்று மைல் தொலைவில் திருவையாறு இரண்டாம் பகுதி, மூன்று ஏக்கர் நிலம் அவனுடையது. அங்கே ஒரு வீடு. முற்றத்தில் ரோசா, பொன்நொச்சி, தேமா, செல்வரத்தை, கொடித்தோடை, தோட்டப் பயிருக்கு நீர் பாச்சும் பெருங்கிணறு. ஒரு புறத்தில் சுந்தரம் குடும்பத்தவர்க்கு கொட்டில் என்ற பெயரில் ஒரு மண்சுவர் வீடு கட்ட இடமளித்தான் உதயகுமார்.

சுந்தரம் வன்னிக்கு வந்து எட்டு மாதங்களாயின. எண்பத்தெட்டில் இடம் பெயர்ந்து வந்த ஒரு குடும்பத்துக்கு வீட்டை வாடகைக்கு கொடுத்து விட்டுப் போய் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவர், சுந்தரம்.

சரியாகச் சொல்வதானால் இந்திய இராணுவம் வந்த வேளை, அவருடைய வீடு அடிக்கடி சோதனையிடப்

பட்டது. அவருடைய மகன் ஒருவன், சிங்கள அரசின் அடக்கு முறையை எதிர்த்துப் போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினன். அந்நியப் படையினர் சுந்தரம் குடும்பத்தை அழைத்துப் போய் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தனர். ஐந்து நாள் களின் பின் விடுதலை செய்யப்பட்ட போதும் அடுத்த டுத்த நாட்களிலும் அதே சோதனைக்கும் விசாரணைக் கும் உட்பட்ட காரணத்தினால் வீட்டை விட்டு வெளி யேறிப் போய் யாழ்ப்பாணத்தில் இருந்தனர்.

அங்கே தொழிலும் கிடைத்ததால் நிரந்தரமாகவே தங்கிவிட்டனர்.

தொண்ணூற்றைந்து அக்டோபர் 30ஆம் நாள் வலிகாமம் மக்கள் ஒட்டு மொத்தமாக இடம் பெயர நேரிட்ட வேளை அவர்களும் தென்மராட்சியை நோக்கி நகர்ந்தனர். தமது சொந்த வீட்டின் பின்னாலுள்ள தென் னங்காணியில் கொட்டில் கட்டி குளிர்மையான சூழலில் சில நாள் வாழ்ந்தனர். அவர் வீட்டில் வாடகைக்கு இருந்தவர்கள் எவ்வளவோ கேட்டும் சுந்தரம் அவர் களுக்கு சிரமம் கொடுக்க விரும்பவில்லை. சொந்த நிலத்தில் அந்தக் கொட்டில் நாலரை மாதங்களே அவரால் இருக்க முடிந்தது. 90 ஏப்ரலில் மற்றொரு இடப்பெயர்வை எதிர்கொண்டனர். தென்மராட்சியை விட்டு வெளியேறி, மக்கள் வெள்ளத்தில் கலந்து, வானில் வெடித்துச் சிதறிய எறிகணைகளுக்கு தப்பி, வன்னியை வந்தடைந்தனர்.

"வன்னி மண் எவ்வளவு வளமான மண் தம்பி.

உள்ளங்கையளவு எங்கள் குடாநாட்டையும் இந்த வன்னிப் பெரும் பரப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தால்.... மண் மட்டுமா... மனிதரும் கூட... அங்கே பொறாமை வஞ்சகம் அதிகம். ஒற்றுமையில்லாதவன்.... அதனாலை தான் இந்த அவலம்... அடுத்தவன் பொருளுக்கு ஆசைப் படாமல் உழைப்பே தெய்வம் என்று நீங்கள் மண்ணைக் கொத்திப் பாடுபடுகிறியள்.... மட்டான செலவு செய்கி றியள்... பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு தெரியுமோ? அங்கே என்ன நடக்கிறது கடின உழைப் பால் முன்னேறுகிறவனைப் பார்த்து பொறாமைப்படுகிற வனும் ஊரார் பொருளை கொள்ளையடிக்கிறவனும் தான் வாழ்கிறான். நாங்கள் வீட்டை விட்டு வந்திட்டம்... கூரைத் தகடுகளையும் மரங்களையும் காக்கிகள் கழற்றிக் கொண்டு போனாங்களாம்.... என்று முதலில் தகவல் வந்தது..."

"அங்கே வாடகைக்கு யாரோ இருப்பதாக முன்னர் சொன்னீங்களே ஐயா..."

"சரி தம்பி... அவை அரியாலை ஆட்கள்... எல்லோரும் தம் தம் சொந்த ஊருக்குப் போங்கோ... என்று கட்டளை யிட்டான்களாம்... அவர்களும் வீட்டைவிட்டுப் போய் விட்டார்கள். அதன் பிறகு வீட்டுச் சாமான்களை அயல் சனங்கள் அள்ளிப் போய்விட்டதாக கேள்வி... எரிகிற வீட்டில் பிடுங்கும் சாதி... எங்களை கைகட்டி கண்கட்டி கூட்டிப் போன வேளை அயல் சனங்கள் வீட்டில் இருந்த பாவனைப் பொருள்களை எடுத்துப் போனதுமல்லாமல் இவன்களாலை எங்களுக்கும் பிரச்னை, இந்த வீட்டுக்கு நெருப்பு வைக்கவேணும் என்றும் பேசிக்கொண்டார்

களாம்... இப்ப வீட்டுக்கு கூரையில்லை. மழை பெய்தால் உள்ளேயும் புல் முளைக்கும். புற்று எழும்பும். பற்றை வளரும். புழு, பூச்சி, ஓணான், அறணை, பாம்பு குடி கொள்ளும். அப்ப தீ வைக்க நினைத்தவர்களின் ஆசை இப்ப நிறைவேறும்..."

"இதெல்லாம் வதந்தி தானே ஐயா... யாழ்ப்பாணத்து செய்திகள் எதுவுமே சரியாகத் தெரியாது. அங்கிருந்து உங்களுக்கு வேண்டியவர்கள் கடிதம் எழுதினார்களா?"

"சிலருக்கு எழுதினேன். தெளிவான பதில் வரவில்லை. "நீங்கள் நினைப்பது போல் இங்கு ஒரு பிரச்சினையும் இல்லை" என்றும் "அங்கே உங்கள் பத்திரிகைகள் எழுதுவது போல் இங்கு இல்லை" என்றும் "எல்லாம் வழமைபோல்... நீங்களும் வந்து இருக்கலாம்" என்றும் பதில்கள் வந்தன. முழுமையான கையொப்பமே இல்லை. அவ்வளவு பயம்... யாருக்கு எழுதினால் உண்மை அறியலாம் என்பதை கன நாளாக யோசித்தேன். ஒரு நம்பிக்கைக்குரிய நண்பரின் நினைவு வந்தது. எழுதினேன். ஒரு மாதத்தின் பின் பதில் வந்தது. படித்துப் பாரும். அதில் அந்தரங்கம் எதுவுமில்லை" என்றவர் தலைக்கு மேலே கூரையில் செருகியிருந்த கடிதத்தை எடுத்து உதயகுமாரிடம் கொடுத்தார்.

ஆழ்ந்த அன்புள்ள சோதர -

கடிதம் கண்டேன்.

உங்கள் சுகம் அறிந்து மிகவும் சந்தோஷம். ஆனால் துன்பத்தில் ஆழ்ந்த நிலையிலே தான் அனுபவிக்க வேண்டியுள்ளது.

எங்கள் சுகம் பற்றி எப்படி எழுதுவதென்று தெரிய வில்லை. வன்னியிலிருந்து மீண்டவர்கள் சொல்கிறார்கள் "அங்கு மேலே பார்க்கவேண்டும்: கீழே பார்க்க வேண்டும் அவ்வளவு தான் எங்கும் நிம்மதியில்லை" என்று. உங்கள் நிலை எப்படியோ? எங்கோ எப்படியோ தொடங்கிய விடயம் எங்கோ எப்படியோ போய் நிற்கிறது. இறப்பதற்கு முன் இவ்வளவும் இறைவனால் கொடுக்கப் பட்டிருக்கிறது போலும்.

என்ன நடக்குமோ என்ற ஏக்க வாழ்வு பிடிபட்டால் ஒன்றுமில்லை என்று தண்டனையின் பின் ஒரு சிலர் வீடு வருவார்கள். ஒரு சிலர் கே.கே.எஸ் வரை போய் மாதத்தின் பின் வருவார்கள். மற்றவர்கள் இரண்டு மாதத்தின் பின் எலும்புக் கூடாக அதுவும் ஓயாத தேடலில் எடுக்கப்படுவார்கள். ஒன்றும் நடவாவிட்டால் சற்று நிம்மதி போல் தெரியும். ஒன்று நடந்து விட்டால் சுற்றி வளைப்பும் மேற்கூறியவையும் தொடரும். ஏன்பிறந்தோம் தமிழனாக.

உங்கள் வீட்டு நிலைமை நீங்கள் அறிந்தவற்றின் தொடர்ச்சியாக ஒரு பொருளும் இல்லை. வந்தவர்கள் எடுத்துப் போக இருந்தார்கள் மீதியைப் பார்த்திருக் கிறார்கள்.

அதற்கிடையில் ஒரு சில பொருள்கள் புத்தங்கள் உட்பட தானும் வைத்திராமல் வேறு இடத்தில் பாதுகாப் பாக எடுத்து வைத்துள்ளார் சுதா. இதற்கு மேல் அறிய முடியவில்லை. தான், தான் தப்ப அல்லது மற்றவனை அகப்படுத்த ஆர்வம் கொண்டதொரு சமூகத்தில் வாழ்கிறோம் வேதனையோடு. நடமாடினால் வாய்

விட்டால் அது அரவத்துக்கும் எட்டி விடும் அப்படி நிலை.

– அன்புள்ள தம்பி.

கடிதத்தைப் படித்த முடித்த உதயகுமார் எழுந்தான்.

"இதை எழுதியவர் நல்ல, படித்த, மனிதர் போலிருக் கோ..." என்று கேட்டான்.

"சரியாகச் சொன்னீர்.... ஒரு ஆசிரியர் - அதிபர்" என்றார் சுந்தரம்.

◆

# நெஞ்சில் ஆழப் பதிந்த வடு

அந்த அழகிய வெண்சடை நாய்க்குட்டி ஆயிரத்து ஐநூறு ரூபா பெறும். பார்த்திபனுக்கு அதை யாரோ இனாமாகக் கொடுத்தாராம். அவனுக்கு அதுவே பொழுதுபோக்கு. அதனைக் கொஞ்சி விளையாடுவான். அதற்குப் பால் வைப்பான். அது பால் குடிக்கும் பாங்கைப் பார்த்துச் சிரிப்பான். காரம் இல்லாது கறிசோறு குழைத்து வைப்பான். தண்ணீர் ஊற்றி ஷம்பு தடவி சடை-யைக் குழப்பி தேய்த்துக் கழுவுவான். அதற்கென வைத் திருக்கும் துவாயினால் ஈரம் துவட்டுவான். நன்றாகத் தேய்த்தெடுப்பான். "இல்லையெண்டால் வருத்தம் பிடிச் சிடும்" என்பான். ஒரு கதிரையை அதற்கென ஒதுக்கி வைத்து அதில் தன் பழைய சட்டைகளைப் பரப்பி "ஏறிப் படு... படு..." என்பான். அது துள்ளி ஏறிப் படுக்கப் பழகிக் கொண்டது. நாளடைவில் எல்லாக் கதிரைகளிலும் ஏறிப்

படுக்கப் பழகிக் கொண்டது.

அதற்கு "என்ன பெயர் வைக்கலாம் மாமா...?" என்று அடுத்த வீட்டுக்காரனான என்னைக் கேட்டான் பார்த்திபன்.

"பப்பி... ஜிம்மி... ரைகர்.... பிளாய்க்... பிறவுண்...."

"சீ எல்லாம் அநாகரிகம்...." என்றான் அவன்.

அடுத்த கணம் எனக்கு சுட்டியின் நினைவு வந்தது.

"சுட்டி..." என்றேன்.

"குட்டி.... சுட்டி.... அது பொருத்தமாய்த்தான் இருக்கு மாமா... கெதியாய்ப் பழகிடும்...." என்றான் அவன் குதூகலத்துடன்.

அதே கணம் என் நினைவலைகள் பத்து ஆண்டுகள் பின்னோக்கிப் பாய்ந்தன.

**அ**ந்த நாளில் நான் வளர்த்த நாயின் பெயர் சுட்டி. அது ஒரு எதிர்பாராத மோதலில் வீரச்சாவடைந்தபோது பழி என்மீது சுமத்தப்பட்டது. அதன் திடீர் மறைவு என் நெஞ்சில் ஆழப் பதிந்த வடு.

பார்த்திபனின் குட்டியை ஒத்த வயதில் அந்தக் கறுப்பு வெள்ளை வண்ண ஊர்நாய்க் குட்டியை ஒரு ஆச்சியிடமிருந்து பெற்றுக் கொண்டேன். அது என் செல்லப் பிராணியாக வளர்ந்தது. குட்டியாக இருந்த போது பால் கொடுத்து, வளர்ந்த பின் மீன் அல்லது இறைச்சி சேர்த்துத் தின்று வளர்ந்தது. சைவ உணவை வெறுத்தது.

காலை எட்டு மணிக்கு நான் வேலைக்குப் புறப்பட்டு ஐம்பது யார் தொலைவில் இருந்த பேருந்து தரிப்பிடம் நோக்கிச் செல்லும் நேரம் என்னுடன் வந்து, நான் பேருந்தில் ஏறிய பின் வீடு திரும்புவதையும், மாலையில் நான் வீடு திரும்பும் நேரம் பேருந்துத் தரிப்பிடம் வந்து காத்திருந்து என்னை 'அழைத்துக் கொண்டு' வீடு வருவதையும் வழக்கமாக்கி கொண்டிருந்தது. இரவில் என் பாயில், கால்மாட்டில் படுத்து என் அரவணைப் பையும், பிறர் வெறுப்பையும் பெற்றுக் கொண்ட சுட்டி, காலையில் சிலவேளை, நான் நித்திரை விட்டு எழுந் திருக்கத் தாமதித்தால், என் காதுகளை நக்கி என்னை எழுந்திருக்கச் செய்யும். இப்படிப் பலவகையிலும் என் உள்ளங் கவர்ந்து, எனக்கு உறுதுணையாக அது வாழ்ந்து வந்த காலத்தில்தான் அமைதிப் படை என்ற பெயர் கொண்ட, இந்திய இராணுவத்தின், ஒரு பிரிவு எங்கள் நாட்டுக்கு வந்தது. அதில் ஒரு அணி எங்கள் ஊருக்கு வந்து முகாமிட்டிருந்தது. எங்கள் தெருக் களிலும் ஒழுங்கைகளிலும் வாய்க்கால்களிலும் அந்தப் படையணியினர் இரவும் பகலும் ஆயுதங்களுடன் 'பயங் கரவாதிகளை'த் தேடிச் சாரிசாரியாக நடமாடினர். இரவு நேரம், மனிதர் படுத்துறங்கும் வேளை வீடுகளில் நுழைந்து கதவுகளை காலால் உதைத்துத் திறந்தனர். நித்திரை கலைந்து விழித்தோரை தங்கள் வாகனங் களில் ஏற்றிச் சென்றனர்.

அரைமைல் தொலைவில் வரும்படையினரை இனங்கண்டு எங்களூர் நாய்களெல்லாம் ஒருமித்து உரத்த குரல் எழுப்பும். "வாறாங்கள்.... வாறாங்கள்..." என்பது போல் எச்சரிக்கை ஒலியெழுப்பும். கட்டியும்

அதில் பங்கெடுக்கும். எங்கள் வீட்டு நாய்களின் மேல் அந்த ஜவான்களுக்குப் பயங்கர வெறுப்பு.

எங்கள் பிள்ளைகளில் ஒருவன் விடுதலைப் புலி என்று உளவறிந்து பெற்ற தகவலின் அடிப்படையில், அவனைப் பிடிக்க அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வரும் ஜவான்கள், அவன் இருக்கும் இடம் அறிவதற்காக, ஒரு நாள் என் கண்களைக் கட்டித் தங்கள் ஜீப்பில் ஏற்றி முகாமுக்குக் கொண்டுபோய் ஒரு வாரம் தடுத்து வைத்திருந்து பல கேள்விகளைக் கேட்டார்கள். பின் விடுதலை செய்தார் கள். அதன் பின்பும் அடிக்கடி அதிகாலையில் வருவார் கள். படலையை உதைத்துவிட்டு உள்ளே வந்து கதவைத் தட்டுவார்கள். இருபது பேர் வரை. வீட்டைச் சுற்றிச் சிலர் ஓடுவார்கள். ஒருவன் அறைக் கதவுகளை உதைத்து உள்ளே தேடுதல் நடத்துவான். அவ்வளவு தான். மெல்லத் திரும்பிப் போய்விடுவார்கள்.

அத்தனை துருப்பினரையும் தனியொருவனாக நின்று எதிர்ப்பவன் போல் சுட்டி, சுற்றிச் சுற்றிக் குரைக்கும். ஊர் நாய்களும் அதற்குத் துணையாகக் குரல் கொடுக்கும். இது தொடர்கதை. ஊர் உறங்கும் நேரத்தில் இத்தகைய அமைதியின்மை தொடரக் காரணமாயிருப்பது எங்கள் வீடுதான் என்பதில் அயலவரிடையே கருத்தொற்றுமை வளர்ந்தது. அதனை மறைமுகமாக வெளிப்படுத்தவும் செய்தனர்.

ஆக, நாங்கள் அயலவரின் வெறுப்பையும் அந்நியப் படையின் அத்துமீறல்களையும் தவிர்த்துக் கொள்ள ஒரே வழி வீட்டை விட்டு வெளியேறுவதுதான் என்ற முடிவுக்கு வந்தோம்.

சில தளவாடங்களை ஏற்றிக் கொண்டு மீண்டும்

மறுநாள் வரும் திட்டத்துடன் சில பொருள்களை வீட்டில் வைத்துவிட்டு இடம் மாறினோம். சுட்டியை அடுத்த வீட்டில் இருந்த சகோதரியிடம் ஒப்படைத்து, "வந்து கொண்டு போகிறோம்" என்று கூறிக்கொண்டு போய்விட்டோம்.

அடுத்தநாள் காலை நான் வீட்டுக்குப் போனபோது தெருப்படலை திறந்து கிடந்தது. வீட்டுக் கதவுகளும் திறந்தே கிடந்தன. முதலில் சுட்டியைப் பார்க்கப் போனேன். அது கண்ணில் படவில்லை. நான் வந்ததும் என் காலடியில் நிற்கும் என் சுட்டி எங்கே?

"அக்கா, சுட்டி எங்கே?" என்று கேட்டேன்.

"அது செத்துப்போச்சு..." என்றாள் அக்கா, கவலையுடன்.

என் உடல் நடுங்கியது.

கண் கலங்கியவனாய், "எப்பிடி? ஏன்...?" என்று கேட்டான்.

"நீங்கள் அதையும் கொண்டுபோயிருக்கலாம்... அவங்கள் நேற்றிரவும் வந்தாங்கள்... இது குரைத்துக் கொண்டு ஓடிச்சுது... ஒருத்தன்ர காற்சட்டையைக் கவ்விக் கிழிச்சுது... ஒருத்தன் துவக்குப் பிடியால அடிச்சுப் போட்டான்..."

"என்ர சுட்டி எங்க இப்ப?"

"துணியால சுற்றி தம்பி... தாட்டுப்போட்டான்..."

◆

# பசி

அம்...மா... அம்....மா.....

"யாரது பாருங்கோ..." - உள்ளிருந்து குரல்.

யன்னலைத் திறந்து எட்டிப் பார்க்கிறேன். மூன்று சிறுவர்கள்.

"என்ன வேணும்?..."

"பசிக்கிது... சா...ப்பாடு...." மூவரும் ஒரே குரலில்.

வழக்கமாகப் பேப்பர் பொறுக்கும் சிறுமி ஒருத்தி வருவாள். பன்னிரண்டு வயதிருக்கும். "சாப்பாடு.... சாப்பாடு...." என்று சொல்லி நிற்பாள். பழையதோ புதியதோ, இருப்பதை பொலிதீன் பையில் போட்டுக் கொடுத்தால், கொண்டு போய் தெருக்கரையில், எதிர்வீட்டு மதிற்சுவரை மேவி நிற்கும் கொய்யா மரத்தின் கீழ் அமர்ந்து சாப்பிட்டபின் வந்து தண்ணீர் கேட்டுக்

குடித்துவிட்டுப் போவாள். அவள் இன்று வரவில்லை. இன்று புதிதாய் இவர்கள்.

'முறையே ஏழு, ஐந்து, மூன்று வயதிருக்கும். வறுமைக் கோலம். மருத்துவரின் கத்தரிக்கோல் கண்டிராத தலைமுடி - பரட்டை மயிர். ஒருவன் கையில் பாதிகடித்த மாங்காய். மற்றவன் கையில் மட்டை உரிக்காத தேங்காய். இளையவன் வயிறு வெள்ளரிப் பழம்போல், சட்டையைப் பிய்த்துக் கொண்டு வெளியே தெரிந்தது. அவன் 'கேட்' சட்டத்தில் ஏறி சிரித்துக் கொண்டு நின்றான். அவனுடைய பற்கள் வெண்மையாய், அழகாய்த் தெரிந்தன. அவை அறுமையின் நிறம் வெண்மையென்பது போல் பறை சாற்றின. இரந்துண்டு வாழட்டும், வளரட்டும் என்று விடப்பட்டவர்களா? பறந்துண்டு வாழவில்லையா புள்ளினம்.

எழுந்துபோய் "என்ன வேணும்?" எனத் திரும்பவும் கேட்டேன்.

*"சா.... ப்பாடு...."*

*"நீங்க எங்க இருக்கிறது? காலைல சாப்பிடல்லையா?..."*

"இல்ல...."

"உங்கட வீடு எங்க?...."

"இந்திரா குடிசே...."

"உங்கட அம்மா எங்கே?..."

"செத்துப்போச்சு...." நடுவிலான் சொன்னான்.

"இல்ல, பேப்பர் பொறுக்க"...... - மூத்தவன்.

"அப்பா எங்கே?...."

"வேலைக்கு...."

"இவன்க உன்ட தம்பிகளா?"

"ஆமா...."

"அவன் என்ன சாப்பிட்டான்?" இளையவனைச் சுட்டிக் கேட்டேன்.

"ஒன்றுமில்ல..."

"அவன்ட வயிறு ஊதியிருக்கே!..."

"ஒன்றுமே சாப்பிடல்ல"... - சிரிக்கிறான்.

சிரிப்பு வந்தது, எனக்கும்.

"என்ன சிரிப்பு அதுகளைப் பார்த்து?" அருகில் வந்து நின்ற மனைவி கேட்கிறாள்.

"அவன்ட வயிற்றைப் பாரும். நிறைவா இல்லையா? அவன் "ஒன்றுமே சாப்பிடல்ல" என்கிறான் இவன்.

"பேசாமல் இருங்கோ... அதுகள் நிற்கட்டும், வாறன்"

அவள் உள்ளே போய் சோற்றையும் கறியையும் குழைத்து வாழையிலையில் மடித்து பொலிதீன் பையில் வைத்துக் கொண்டுவந்து கொடுத்தாள். மூத்தவன் அதை வாங்கிக் கொண்டு நகரவே, மற்றிவரும் அவன் பின்னால் பாய்ந்து ஓடினார்கள். தெருக்கரையில் அமர்ந்து சாப்பிட்டார்கள்.

அந்நேரம் அவ்வழியே வந்த பெண் ஒருத்தி "யாரு சாப்பாடு தந்தது?" என்று கேட்டதையும் குழந்தைகள் எங்கள் வீட்டைக் காட்டியதையும் யன்னல் அருகே இருந்து என்னால் அவதானிக்க முடிந்தது. எழுந்து போய்

எங்கள் வீட்டு மதிற்சுவரை எட்டி "யார் அது?" என அவர்களிடம் கேட்டேன். அவர்கள் எனக்குப் பதில் சொல்லாது சிரித்துக்கொண்டே, சோற்றை மடித்து எடுத்துக்கொண்டு அடுத்த தெருவுக்குப் போனார்கள். அங்கே இருந்த பொதுக் குடிநீர்க் குழாயிலிருந்து ஒழுகிய தண்ணீரை ஏந்திக் குடித்தார்கள். திரும்பிவந்து அதே இடத்தில் அமர்ந்து மீதியை சாப்பிட்டார்கள். முடிந்ததும் எழுந்து கொய்யாமரக் கிளைகளை இழுத்து கைக்கெட்டிய காய்களைப் பறித்த கடித்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தனர்.

ஒரு பிள்ளைப் பாய்க்கியம் இல்லையே என்று கோயில்களை வலம்வரும் குடும்பம் எத்தனை! நான்கு பெண்களைப் பெற்றவள் ஒரு ஆண்குழந்தைக்கு ஏங்குகிறாள். ஐந்து ஆண்களைப் பெற்றவள் ஒரு பெண்குழந்தைக்கு ஆசைப்படுகிறாள்.

பெற்றவுடன் பற்றைக்குள் வீசிவிட்டுப் போகின்றவளும் பிறக்கு முன்னே அழித்துவிடுபவளும் வாழும் மண் இது.

இங்கே மூன்று பிள்ளைச் செல்வங்கள் பசி என்று கேட்டு, கொடுத்ததை தெருக்கரையில் இருந்து புசித்து மகிழ்கின்றன.

சுந்தர் நகர் 'வேளாங்கண்ணி நியூஸ் ஏஜென்சி' யில் ஒரு 'தினமணி' வாங்கிக்கொண்டு திரும்புகிறேன். நேரே வீடு வந்து சேராமல் ஒரு கிலோமீட்டர் வரை நடந்துபோய் திரும்புவேன். வழக்கமாக என் பாதை, பெரியார் நினைவுக் கல்வி வளாகம், கற்பக விநாயகர் கோயில் கடத்துபோவதாக இருக்கும்.

கோயிலில் இன்று சிறப்புப் பூசைபோலும். ஒலிபெருக்கியில் பக்திப் பாடல் கேட்கிறது. பிரசாதம் என்ற பெயரில் பொங்கல் வாங்க வந்திருக்கும் சிறுவர் சிறுமியர் மண்டபத்திற்கு வெளியே வரிசையில் நிற்கிறார்கள். கோயிலைக் கடந்து போகிறேன். எதிரே ஓரமாக ஒரு பெண், கையில் அலுமினிய குவளையுடன் வருகிறாள். இவள்...? ஓ! காலையில் "யாரு சாப்பாடு தந்தது?..." என்று கேட்டுக்கொண்டு போனாளே... அவள்தான்! சிறிது தூரம் போய்த் திரும்பிப் பார்க்கிறேன். அவள் அந்தச் சிறுவர் வரிசையின் அருகில் சற்று விலகி நிற்கிறாள். வரிசையில நின்ற மூன்று சிறுவர்கள் அவள் கையைப் பற்றிக் கொள்கிறார்கள். அவர்கள்...? அவர்களேதான்!

◆

# குற்றம் புரிந்தவன்

அயல்வீட்டில் பிறந்து வளர்ந்த அழகான இரு சிறுவர்கள்.

பத்தாம் வகுப்பு வரை பாடசாலை போன பவளராசா படிப்பைக் குழப்பிக்கொண்டு வியாபாரியாக தொழிலைத் தொடங்கினான். இளவயதில், தான் விரும்பிய பெண்ணைத் திருமணமும் செய்து கொண்டான். அதற்கு மேலும் படித்த அவன் தம்பி கனகராசா அரச பணியில் சேர்ந்து நல்ல பதவிக்கு உயர்ந்து நன்றாக வாழ்ந்தான். தொடர்ந்த சில நாட்களில் தாய்தந்தையரை இழந்தனர். இருவரும் வெவ்வேறு திசையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர்.

இளையவளையும் மனைவியாக்கிக் கொண்டான் பவளராசா; இது பின்னாளில் வந்த செய்தி. இரண்டு வீட்டிலும் இல்லை. ஊரை விட்டே போய்விட்டான்

பவளராசா. அது நீண்ட நாட்களின் பின் கேள்விப்பட்ட செய்தி.

இப்படி எத்தனை மனிதர்கள்.

யாருக்காகவும் கவலைப்படாமல் காலவெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. தொழில் காரணமாக தென்பகுதியில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் இருந்துவிட்டு வடக்கே வந்தபோது அவையெல்லாம் மறந்து போன சம்பவங்கள்.

*1995* அக்டோபர் *30*. தென்மராட்சியிலிருந்து வன்னி மண்ணுக்கு.

ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களின் வரலாற்று இடப்பெயர்வு. இனப்பகையின் அரச படை களின் - அக்கிரமங்களின் உச்சக்கட்டம்.

இரணைமடு பாதையில் திருவையாறு எனும் வளம்மிக்க விவசாய கிராமத்தில் கொட்டில் கட்டிக்கொண்டு வாழ்ந்த வேளை -

கிளிநொச்சி - யாழ். சாலையருகே, ஒரு காலைப் பொழுதில் சைக்கிளை நிறுத்திவிட்டு தேநீர் குடிக்க வென கடைக்குள் புகுந்தேன். அங்கே பவளராசாவைக் கண்டேன். .... அவன் தான் என்று தீர்மானிக்க இரண்டு நிமிட நேரமெடுத்தது. இளமையில் பார்த்த சிவந்த அழகான அந்த தோற்றம்.... எத்தனை ஆண்டுகள்... "ஓ... பவளராசாவா? இரும்" என்றேன்.

எதிரே கிடந்த கதிரையில் அமர்ந்தான்.

இருவரும் தேநீர் குடித்தோம்.

இவன் நடத்தியதாகக் கேள்விப்பட்ட குற்றச் செயல்கள் நினைவில் வந்தன. இன்றைக்கு அவன்

கோலத்தை பார்த்த கணம் அவை ஒளிந்து கொண்டன.

"எங்கே தம்பி இருக்கிறாய்... என்ன செய்கிறாய்...? இது என்ன கோலம்?" எனக் கேள்விகளை அடுக்க, அவனோ மௌனம் சாதித்தான். தேநீரைக் குடித்து விட்டு ஒரு வரட்டுச் சிரிப்பை காட்டினான். தாடி வளர்ந்திருந்த அவனது ஒட்டிய முகத்தில் பல்வரிசை மட்டும் வெண்மையாய், அவனது இளமைக்கோலத்தை நினைவூட்டியது.

"நீ வீட்டை விட்டுப் போய் எவ்வளவு காலம்? அவை இப்ப எங்கே.....? இங்க வந்திருக்கினமா? என்ன சொல்லேன்." என்றேன்.

"கமலா இங்க தான் இருக்கிறாளாம்.... கனகபுரத்தில....."

"அப்ப கதைச்சுப் பாப்பமா...? வீடு தெரியுமா?"

"வேண்டாம் அண்ணை... அவள் விரும்பமாட்டாள்..."

"ஏன் நீ செய்ததெல்லாம் பிழை எண்டு உனக்கே தெரியுது இல்லையா....? எங்கே இருக்கிறாய்....? என்ன செய்கிறாய்?"

"கரடிப்போக்கிலை... ஒரு கடையிலை நிக்கிறன்.. நான்வாப்போறன்..."

அவன் எழுந்தான்... போய்விட்டான்.

எல்லாம் எனக்குத் தெரிந்திருக்கும். பழையதை எல்லாம் கிளறிவிடுவன் என்று பயந்தானோ? போகட்டும் எங்கே தான் போவார்? என்றெண்ணியபடி எழுந்தேன். சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினேன்.

"எங்கட பவளராசாவை சந்திச்சன்.... அவன் தான்

குடும்பத்தை விட்டுப் பிரிஞ்சு போய் ஏழெட்டு வருவமாச்சு என்றீரே, ஒரு நாள்... அவன் இங்கதான் இருக்கிறான்" என்றேன் மனைவியிடம்.

"அப்பிடியே.... எங்க இருக்கிறானாம்...? அவள் மூத்த வளும் இங்க தானே இருக்கிறாளாம்..."

ராஜம், அவனைப்பற்றி நான் அறிந்திராத செய்திகள் சிலவற்றை சொன்னாள். அடுத்தடுத்த கொட்டில்களில் இருக்கும் எங்கள் ஊரவர்களுடனும் அவனைப்பற்றி கதைத்த போது அவர்கள் சொன்னவற்றில் அதிர்ச்சி யூட்டிய வரிகள் இவை :

கமலாவுக்கு நான்கு குழந்தைகள். இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும்... அதே வேளை அந்த வீட்டில் இருந்த மனைவியின் தங்கை குவேனியையும் அவன் தாரமாக்கிக் கொண்டான். உள் வீட்டில் தொடங் கிய குடும்பச் சச்சரவுகள் மெல்ல மெல்ல ஊர் அறிய வந்ததும் அதற்குத் தீர்வாக இளையவளைக் கூட்டிப் போய் வாடகைக்கு வீடு எடுத்து வைத்துக் கொண்டான் பவளராசா. இவளுக்கு இரண்டு குழந்தைகள். ஆண் ஒன்று பெண் ஒன்று. இப்போது கமலாவின் பிள்ளைகளும் குவேனியின் இரண்டு பிள்ளைகளும் வன்னி மண்ணில். கமலா முதல் மகன் ஒருவிடுதலைப் போராளி. இரண்டாவது மகன், சிறு வியாபார முகவர். மூன்றவாது பெண் 'சுதந்திரப் பறவைகள்' உறுப்பினள். நான்காவது மகளுக்கு வயது 16. தாயுடன் இருக்கிறாள். பாடசாலை போகிறாள். குவேனியின் மகளும் ஒரு சுதந்திரப் பறவை. அவளுடைய தம்பி, இயக்கம் சார்ந்த ஒரு தொழில் நுட்ப நிறுவனத்தில் வேலை. இவனுக்கு அன்னை, தந்தை, சகோதரர் என்ற ஆதரவு ஏதும் இல்லை. வேலை செய்யும்

இடத்திலேயே தங்குவது, உண்பது, உறங்குவது எல்லாம். தாய் குவேனி குவைத்தில் பணிப்பெண்ணாக வேலை செய்கிறாள். தொடக்கத்தில் தொடர்பு இருந்தது. இப்போ அவள் இன்னொருவரின் மனைவி. அவனும் அங்கே ஒரு கம்பனியில் வேலை. அவனுக்கு இங்கே ஊரில் மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள்.

குடி குடியைக் கெடுக்கும் என்பதை உண்மையாக்கி இரு மனைவியரையும் விட்டுப் பிரிவதற்கு முன்பே குடிக்கத் தொடங்கிய பவளராசா அதில் முன்னேற்றம் கண்டானேயன்றி தான் விரும்பி ஏற்றுக்கொண்ட இரு மனைவியரையும் அநாதைகளாக விட்டுப் பிள்ளை களையும் அநாதைகளாக விட்டுப் போகிறானே என்று சிந்திக்கும் அளவிற்கு பொறுப்புணர்வு பெற்றிருக்க வில்லை. நாற்பது மைல்களுக்கு அப்பால் அப்பா என்றொரு மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பதை மறந்து அந்தக் குழந்தைகள் இத்தனை ஆண்டுகளாக வறுமையை அனுபவித்து வளர்ந்து வருவதற்குக் காரணமாயிருந்தது பவளராசாவின் குடிகெடுமதி.

ஆனையிரவிலிருந்து பரந்தன் பார்த்து நகரத் தொடங்கிய அரச படைகள் ஏவிய எறிகணைகள், இரவு பகலாக கிளிநொச்சி நெடுஞ்சாலையிலும் கிழக்கே இரணைமடு, திருவையாறு, மேற்கே கோணாவில், உதய புரம் வரை விழுந்து வெடித்தன. இராணுவ ஆக்கிரமிப்பு தொடங்கிவிட்டதை உணர்ந்து வன்னி மண்ணில் நிரந்தரமாக வாழ்ந்தவர்கள் உட்பட மக்கள் ஒட்டு மொத்தமாக தமது வீடுகள் உடமைகளை விட்டு மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனிக்குளம், பாலிநகர், மல்லாவி, துணுக்காய் போன்ற இடங்களை நாடி நகரத்

தொடங்கினார்.

ஒன்பது மாத காலத்தில் அது மூன்றாவது இடப்பெயர்வு. மாங்குளம் சந்தியிலிருந்து கிழக்கே முப்பத்தைந்து மைல்கள் வரையும் மேற்கே மல்லாவி, துணக்காய் வழி முழங்காவில், பாலையடி, இலுப்பைக் கடவை, நாச்சிக்குடா ஆகிய ஊர்களைக் கண்டு பூநகரி, ஐயபுரம், சோலை என அறுபது மைல்கள் வரை வளைந்து திரும்பும் சாலையின் இரு புறமும் மரநிழலிலும் கோயில்களிலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர்.

வன்னிக்கு வந்த பின் நான் அமைத்த கொட்டில் மூன்றாவது மல்லாவியில். பாரிய வேர்களுடன் கிளை பரப்பி தலை நிமிர்ந்து நிற்கும் ஆல், அரசு, மருது மரங்கள் சூழ்ந்த விசாலமான குளங்களும் நீரோடும் வாய்க்கால்களும் நிறைந்த ஊர் மல்லாவி. இடம் பெயர்ந்தோர் ஆயிரமாயிரமாக இரவு பகலாக இங்கு வந்து போயினர்.

இப்பொழுது இனத்தவர் அயலவர் முகங்களைப் பார்க்க முடிந்தது. கடந்த கால சம்பவங்களை மீட்டு, சில நிமிடங்கள் பேச முடிந்தது. எதிர்காலம் பற்றிய கனமான சிந்தனைகளை சிதறவிட்டு பிரியும் நிலை தொடர்ந்தது.

இச்சூழலில் ஒரு காலை நேரம், பவளராசா எதிர்ப்பட்டான்.

அன்று ஒரு பழைய சைக்கிள் வைத்திருந்தான். கரியரில் ஒரு சாக்கு கட்டப்பட்டிருந்தது.

"என்ன தேங்காய் வியாபாரமோ?" என்றேன்.

என் கேள்விக்கு அவன் பதில் சொல்லவில்லை. மாறாக என்னிடம் அவன் ஒரு வேண்டுதல் வைத்தான்.

"எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யவேணும்..." என்று சொல்லிவிட்டு மெல்லச்சிரித்தான்.

"என்ன...?"

"கமலாவிட்ட அந்த பங்கீட்டு அட்டைடைய வாங்கித் தாருங்கோ... எனக்கு ஒரு புதிய அட்டை எடுத்துக் கொண்டு திருப்பித் தாறன்... வவுனியா போய் வர... ஒரு அனுமதி எடுங்க..."

"சரி... அவள் இப்ப எங்க இருக்கிறாள்?"

"வவுனிக்குளம், பாண்டியன் குளம் வடக்காலை ஒரு தேத்தண்ணிக் கடை இருக்கு.... அருகில ஏழு கொட்டில்... அதில நடுக்கொட்டில்..."

"வா.... உன்னோட கொஞ்சம் கதைக்க வேணும். இப்பிடி மரநிழலிலை வா... இரு" இருவரும் அமர்ந்தோம்.

நீ ஏன் அதுக்ளை விட்டிட்டு வந்தனீ? வந்தாய் சரி... கோபம் தணிய திரும்பிப் போயிருக்கலாம்.... நீ செய்த தெல்லாம் பெரும் தவறுகள்... ஒருத்தியோட சீராய் இருந் திருக்கலாம்.... இரண்டு தோணியிலை கால் வச்சவன்.... கதையாய்..... இப்ப நடுத்தெருவிலை நிக்கிறாய்... உன்ர பிள்ளையள்... எவ்வளவு அருமையான, பெறுமதியான பிள்ளையள்... எல்லாம் நான் கேள்விப்பட்டன்..... அதுகள் தாய், தகப்பன் தெரியாததுகளாய் வளருதுகள்... வாழ்க்கையிலை இப்பிடி ஒரு மனுசனை நான் பார்த்த தில்லை... உன்ர தம்பியும் தான் படிச்சு... மதிப்பாய் நல்ல நிலையிலை இருக்கிறான்... உனக்கு ஏன் புத்தி இப்பிடிப் போச்சுது? இப்ப நான் அவளட்ட போனால், விபரமாய் கதைக்கவே மனம் ஏவும்.... அவள் என்ன சொல்வாளோ? என்னால் பதில் சொல்ல முடியுமோ? இல்லை நீ கேட்ட

அட்டையைத் தான் தர மறுத்தால் நான் எந்த முகத்தோடை திரும்பிறது?..."

"கேட்டுப் பாருங்கோ இல்லையெண்டு சொன்னால் வாருங்கோ.... நான் யாழ்ப்பாணம் போகிறது தான் அடுத்த முடிவு....."

"அங்க போய் என்ன செய்யப் போகிறாய்?"

"வீடு, வயல், தோட்டம் இருக்கு..."

"ஓ... அப்பிடி ஒரு யோசனையோ? இனி ஒற்றுமையாய் வாழ முடியாதெண்டு நினைக்கிறாய் போல...."

"அவள் விரும்பமாட்டாள்..."

"அவ்வளவுக்கு வெறுப்பை வளர்த்து விட்டாய்....." இல்லையா?" எனக்கு விளங்கிறது..... எல்லாம் கேள்விப்பட்டன்... எண்டாலும் ஒருக்கால் கதைச்சுப் பார்க்கிறேன்.... உன்னைப் பார்க்க கவலையாய் இருக்கு......"

"கமலா....." என்றழைத்தேன்.

மகள் போலும் - முன் வந்தாள்.

"அம்மா எங்கே!" என்றேன்.

கமலா பின்னால் வந்து நின்றாள்.

"வாருங்கோ.... இருங்கோ...... என்ன இந்தப் பக்கம்?"

"என்னைத் தெரியும் போல......"

"தெரியுமோவா......? என்ன கேள்வி.... நீங்கள் கொழும்பு கண்டி எண்டு சுகமே இருந்திட்டு வந்தியள்... நாங்கள் பட்டபாடு... கஷ்டமெல்லாம் உங்களுக்கு

தெரியாது..."

"தெரியும் மோனை... எல்லாம் கேள்விப்பட்டன்..... மடைப்பொடியன்..... தன் தலையிலை மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறான்... பாவம் இப்ப நல்லாய் பழுதாய்ப் போனாள்... என்ன மாதிரி செல்லமாய் வளர்ந்த பொடியன்... இது இளையவள் தானே? தங்கச்சிக்கு என்ன பேர்?"

"துர்க்கார்த்தி"

"சிங்கமே தான்... நிமிர்ந்த பார்வை, சீரான அழகு... தகப்பனைப் போல." என்று என்னுள் நினைத்திருக்க...

"என்ன வந்த அலுவல் என்று கேட்டுக் கொண்டே எதிரில் அமர்ந்தாள் கமலா. அவள் முகத்தில் வாட்டம், கண்களில் சோகம், பார்க்க கவலை பிறந்தது எனக்கு.

"பவளராசா இங்க தான் இருக்கிறான். நல்லாய் பழுதாய்ப் போனான். பாவம். ஆளைப் பார்க்க பரிதாப மாய் இருக்கு... உழைப்பும் இல்லை. வவுனியாவுக்குப் போய் சாமான் எடுத்து வந்து விற்கவாம்... அனுமதி அட்டை எடுக்க, உங்கட பங்கீட்டு அட்டையை வாங்கித் தரக் கேட்டான்... அவன்ர பேர் அதில் இருக்கிறதாலை அதை ஒருக்கால் தா மோனை, அலுவல் முடிஞ்சதும் கொண்டு வந்து தாறன்."

அவள் முகத்தில் துயர ரேகைகள் படர்வதை அவதானித்தேன். அவை எனக்கு நம்பிக்கைக் கோடுகளாக தோன்றின.

இரு நிமிட நேர மௌனத்தின் பின், "அது இங்க இல்லை மாமா... அன்பு புரத்தில முந்தி இருந்தபோது அங்க உலர் உணவு, சாமான் எடுத்தனான். இப்பவும்

அங்க போய்த்தான் எடுக்கிறனான்... அடுத்த கிழமை போறன்.... எடுத்து வந்து தாறன்..." என்றாள்.

நான் அடுத்த அத்தியாத்தை எடுத்தேன். ஏன் பிள்ளை.. கிட்டக் கிட்ட வந்திருக்கிறியள். ஊர்வாய்க்கு அவலாக இருந்தது போதும். இனியெண்டாலும் ஒற்றுமை யாய் இருந்தாலென்ன? அவனும் பிழை விட்டிட்டான். ஏதோ கூடாத காலம்... இப்ப அதை உணருகிறான். நீயும் தனியாய் இருக்கிறாய்.... துர்க்கார்த்தியை மட்டும் வைச்சுக் கொண்டு... கொஞ்சம் விட்டுக்கொடுத்து, பொறுமையைக் கடைப் பிடிச்சு, ஒற்றுமையாய் இருந்தா லென்ன... பிள்ளையளும் வந்து போகுங்கள்"

"மாமா உந்தக் கதையை விட்டுட்டு வேறை ஏதும் கதையுங்கோ..." கமலாவின் குரல் மென்மையாக ஆனால் உறுதியாக ஒலித்தது. துர்க்கார்த்தி தேநீர் கொண்டு வந்து வைத்தாள்.

"ஏன் பிள்ளை உனக்கும் அப்பாவைப் பிடிக் கேல்லையே?" என்றேன். அவள் மௌனமாக நின்றாள்.

"அவள் அந்த மனுசன்ரை முகத்தையே மறந்து போனாள். இவ்வளவு காலமும் இல்லாத அப்பா... இனி எங்களுக்கு வழி தெரியும்..." என்றாள் கமலா.

"நல்லாய்க் களைச்சுப் போனாள் மோனை... என்ன மாதிரி இருந்த ஆம்பிள... வாழவேண்டிய வயதில வழி தவறிப் போனாள்..."

"மாமா நீங்கள் எங்க இருக்கிறியள்?"

"மல்லாவி... அனிஞ்சியன் குளம்.... சந்தை றோட்டில... இரண்டாவது வீடு"

"நான் வாறன்... மாமியைப் பார்க்கவேணும். நீங்கள் இப்ப போங்கோ இருட்டாகுது..."

அவள் எழுந்தாள்.

சில நிமிடங்களுக்கு முன் தோன்றிய நம்பிக்கை ரேகைகள் என்னை ஏமாற்றிவிட்டு ஒளிந்து கொண்டன.

பவளராசா வீட்டுக்கு வந்து காத்திருந்தான். பங்கீட்டு அட்டை பற்றி மட்டும் அல்ல அதற்கு மேலும் எதையோ எதிர்ப்பார்த்தவன் போல் என் முகத்தை அர்த்தமுடன் பார்த்தான்.

ஆனால் நானோ அவன் வாழ்வில் வசத்தம் திரும்பும் என்று அவன் நம்புவதற்கு ஓரிரு வார்த்தைகளையாவது கூறும் நிலையில் இல்லையே. "அடுத்த கிழமை பங்கீட்டு அட்டை தருவாள்." என்பதைத் தவிர வேறு எதை என்னால் சொல்லமுடியும்.

அவன் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

நான் தொடர்ந்தேன்.

"உங்களை ஒற்றுமையாக்கிவிடலாம் என்று முயற்சித்தேன். அது எனக்கு தோல்வியாப் போச்சு."

"சரி இருக்கட்டும், நான் யாழ்ப்பாணம் போறன்" என்றவன் எழுந்தான்.

என் இதயம் கனத்தது.

◆

# வானமே கூரை

எறிகணைகள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன. முன்னேறி வந்த படைகளிடம் அகப்படாமல் வலிகாமத்தை விட்டு வெளியேறி தென்மராட்சியை நோக்கிய நெடுஞ்சாலையில் கடலென நகர்ந்து கொண்டிருந்த மக்களுடன் சேர்ந்துகொண்டார் அவர். வாடகை வீட்டில் பாவனைப் பொருள்களை விட்டுப் போகிறேனே என்ற கவலை நாகநாதருக்கு இருந்தாலும் "பிறந்த மண்ணும் சொந்த வீடும் இந்த நேரத்தில் கை கொடுக்கும்" என்றெண்ணி உள்ளூர மகிழ்ந்தார்.

காலை ஆறு மணிக்கு தெருவில் காலடி வைத்தவர் அரியாலைச் சந்தியை வந்தடைந்த நேரம் பத்து மணி.

அது ஒன்றும் அதிசயமல்ல. செம்மணித் தரவையிலும் அரியாலைத் தென்னந் தோப்பிலும், வயல்வெளியிலும் அவர் கண்ட மக்கள் வெள்ளம் அதிர்ச்சியூட்டியது. மக்கள் மட்டுமா? பொதிகள் ஏற்றிய மாட்டு வண்டிகள்,

கனரக வாகனங்கள், சைக்கிள்கள், ஆடுகள், கோழிகள், பசுக்கள், கன்றுகள், நாய்கள்...! நல்லூர்த் திருவிழாக்களில் சிலமணிநேரம் கூடிக் கலையும் பக்தர் தொகையைப் பார்த்து வியந்திருக்கிறார். செம்மணிச் சந்தியில் இருந்து நாவற்குழிப் பாலம் வரை தெரிந்த திருவிழாக் கோலத்தை இந்த வயதுவரை எந்தக் கோயிலிலும் அவர் கண்டதில்லை.

முன்சென்றார் அடியெடுக்கும் வரை நின்று அடியெடுத்து வைத்து அவர் நடந்தார்.

வெய்யில் சுட்டது. நா வரண்டது. நடை தளர்ந்தது. பாலத்தை அடுத்த தென்னைகளும் இளநீர்க் குலை களும் நினைவில் வந்தன. ஆனால் அவற்றில் தேங் காயோ,இளநீர்க்குரும்பைகளோ, தென்படவில்லை. உப் பாற்று நீர் ஓடிக்கொண்டிருந்தது. தாகம் தீர்க்க தண்ணீர் இல்லை.

என்ன அதிசயம்! வானம் கறுத்தது. இடியும் மின்னலும் தொடர மழை பொழிந்தது. காயந்த மேனிகள் நனைந்தன.

சிலர் கையில் குடை இருந்தது.

நாகநாதருக்கு முன்னாலும் ஒரு குடை விரிந்தது. குடையில் கொட்டிச் சிந்திய மழைத்துளிகளை ஏந்தி வாயில் விட்டுக்கொண்டார்.

பாலத்தைக் கடந்தபோது மழை விட்டிருந்தது. காற்று வீசிற்று. பகலவன் உச்சியில் தெரிந்தான். சட்டையும் வேட்டியும் காய்ந்தன. மீண்டும் தாகம் எடுத்தது. தென்னை மரங்களைப் பார்த்தார். தரையில் தேங்காய்,

குரும்பை, கோம்பபைகள் குவிந்து கிடந்தன. "முதல் நாள் வந்தவர்களின் வேலை இது" என எண்ணிக் கொண்டார்.

சற்றே தொலைவில் பலர் தெருக்கரையில், வாளியில் இருந்து தண்ணீர் குடிப்பதைக் கண்டார். அந்த இடத்தை அடைய அரைமணி நேரம் எடுத்தது, ஒரு கப் தண்ணீர் கிடைத்தது.

நாவற்குழிச் சந்தி வந்தது. பயணம் அப்பால் சுலபமாகத் தோன்றியது. நேரே மறவன் புலவு, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு முதலாம் கிராமங்களை நாடிப் பிரிந்து ஒரு கூட்டம் சென்றது.

நாகநாதார் கைதடி நோக்கி நடையைத் தொடர்ந்தார். ஆயுர்வேத மருத்துவமனையிலும் வயோதிபர் இல்லத்திலும் பெருமளவு மக்கள் இருந்தனர். இளைப்பாறினர். கைதடிச் சந்தியில் ஆயிரக்கணக்கில் இருந்தனர். அங்குள்ள கோயில்ககளிலும் பாடசாலைகளிலும் அவர்களைத் தங்கவைக்கும் முயற்சியில் அவ்வூர் தொண்டர்கள் துரிதமாக ஈடுபட்டிருந்தனர்.

"இன்னும் மூன்று மைல் நடந்தால் நுணாவில் சந்தி.

அங்கிருந்து வடக்கே திரும்பி அரை மைல் போனால் அவருடைய வீடு.

நேரம் இரண்டு மணி.

கைதடிப் பாலத்தைக் கடந்ததும் இரு கரையும் பனையும் தென்னையும். அவை இடையே சிறு குடிசைக் கடைகள். சிலவற்றில் வடையும் தேநீரும் இருந்தன. அங்கே மக்கள் முண்டியடித்து நின்றனர். நாகநாதர்

தோளில் இருந்த தொதியை இறக்கி வைத்துவிட்டு ஒரு ஐந்து ரூபாவை நீட்டி. "தம்பி வடையும் தேத்தண்ணியும்" என்றார். வீண் முயற்சி. அவருக்கு தேநீர் வருமுன் ஐம்பது பேராவது பின்னால் வந்தாக வேண்டும். அவர் பொதியைத் தூக்கிக் கொண்டு நடந்தார். "இன்னும் இரண்டரை மைல்" என எண்ணியவர், எட்டி அடி வைத்தார். மக்கள் பல திசைகளில் பிரிந்து போய்விட்டதால் பயணம் சுலபமாக அமைந்தது.

வீடு வந்து சேர்ந்த நாகநாதருக்கு வியப்பு. இடம்பெயர்ந்து வந்தோர் இருபது பேர் வரை - அயலவர், இனத்தவர் - அங்கே இருந்தனர். முதல்நாளே வந்து விட்ட அவரது மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்து வந்த வர்கள் என்றாலும் அவருக்கு ஏமாற்றம் இல்லை. பரந்த வீடு. பின்புறம் நிழல் தரும் மா, பலா, தென்னை, பனை, வேம்பு.

அவர் பிறந்த மண், மணல் செறிந்த கோவில் வீதிகளும் கேணியும், தாமரைக் குளமும், வயலும், வாழையும், கரும்பும் நிறைவாய்த் துலங்கும் பேரூரில் புகலிடமா இல்லை. பொதியை முற்றத்தில் வைத்து விட்டுத் தெருவுக்குப் போனார். இரு திசையும் பார்த்தார். இடம் பெயர்ந்து வந்தவர்கள் அவரைக் கடந்தும் போய்க் கொண்டிருந்தனர்.

"அப்பா வாங்கோ, தேத்தண்ணி குடியுங்கோ" உள்ளிருந்து ஒரு குரல். வாங்கிக் குடித்தார். பின்பக்கம் போனார். தென்னைகளில் தேங்காய் குலைகுலையாய் - ஓலைகள் ஆங்காங்கே விழுந்தபடி, மட்டைகள் காய்ந்து கிடந்தன. மாவும் பலாவும் காய்ந்துத் தொங்கின.

"மாமரத்தின் கீழ் ஒரு கொட்டில் கட்டினால் படுத் துறங்கலாம்..." என எண்ணினார். மறுநாளே செயலில் இறங்கினார். இளைஞர்கள் இருவர் உதவிக்கு வந்தனர். தடிகள் வெட்டினர். ஓலைகள் கிடுகுகளாகின. பனை ஓலை வெட்டி நாரும் ஈர்க்கும் எடுத்தனர். இரண்டே நாளில் கொட்டில் உருவாயிற்று. கவனிப்பாரற்றுக் கிடந்த கட்டில் ஒன்று இவருக்கு ஏகாந்த அமைதி தந்தது.

காலையில் கோயிலுக்குப் போனார். பூசை நேரத்து மணியோசையின் இசையை மெய்மறந்து அனுபவித்தார். குளத்தில் குளித்தார். தாமரையைத் தண்டுடன் பறித்தார். கொய்யாப் பற்றைக்குள் பழங்களைத் தேடி னார். அணிலும், கிளியும் பழம் கொறித்து உண்ணும் அழகை ரசித்தார். அவரைக் கண்டு எட்டாத கொப்பு களில் தாவிய குரங்குகளைப் பார்த்து நின்றார்.

அன்று போலவே இன்றும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மாணவப்பருவத்தில் அவர் இதே சூழலில்தான் வாழ்ந்தார். அதே இயற்கை வளம் கொஞ்சும் மண் இன்றும்.

நண்பர்கள், அயலவர், இனத்தவரைப் போய்ப் பார்த்தார். பேசி மகிழ்ந்து, விருந்துண்டு பொழுது போக்கினார்.

பத்தே மைல் தொலைவில் எதிரி படையோடு நிற்கிறான்; எந்த நேரமும் உள்ளே வந்துவிடுவான் என்ற எதிர்பார்ப்பும் அச்சமும் இல்லை; இரவு பகலாய் தெரு நிறைந்த மனித நடமாட்டம் இங்கு, ஐப்பசி 30-ல்

ஆரம்பித்த நடைப்பயணம் இன்னும் தொடர்கிறது. கிளாலிக் கடல் தாண்டி வன்னிக்குப் போகின்றவர்களும், தனிக் குடித்தனம் இருக்க கொட்டில் கட்டுகின்றவர் களும், கோயில் மண்டபங்களைவிட்டு பாடசாலையை நாடுகிறவர்களுமாக தலையிலும், கையிலும் பொதிக ளுடன் எங்கும் காணப்படும் மனிதர்கள்.

வந்தவர்கள் அமைதியாக, நிம்மதியாக, நிலையாக படுத்துறங்க வழி தேடி அலைந்து கொண்டிருக்க வந்தது சித்திரை 19.

"தென்மராட்சியை விட்டு வன்னிப் பெரு நிலப்பரப்புக்குப் போ" என்று சொல்வது போல மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் மேற்கு வீதியில் எதிரியின் படைகள் வந்து நின்றன.

மறுபடியம் ஒரு பயணம். மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் தெருவில் நின்றனர். நாகநாதர் வீடும் பூட்டப்பட்டது. மேற்கிலிருந்து வந்த எறிகணைகள் அவர் வீட்டுக்கு மேலால் பறந்துபோய் கிழக்கில் வயலில் வெடித்துச் சிதறின்.

"இது போலத்தான் அப்ப வேரற்கேணி முருகன் கோயில் திருவிழாவில் வான வேடிக்கை நடக்கும்"என்று சொல்லிக் கொண்டே அவர் நடந்தார். அதை காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் யாரும் இல்லை.

கிளாலிக் கரையை அடைந்தபோது பொழுது விடிந்திருந்தது. அங்கே சனசமுத்திரத்தைப் பார்த் தவுடன் திரும்பிப் போயிவிடலாமா? என மனம் தவித்தது. மூன்றாவது நாள் அவர்களுக்கு படகில் இடம்

கிடைத்தது. அக்கரையில் இறங்கி இரண்டு மணித் தியாலம் இருந்தபின் கிளிநொச்சி போக வாகனங்கள் வந்தன.

"ஆனையிறவு இங்கிருந்து பத்து மைல் இருக்கும். இங்கும் கொலைகாரர்கள் வரமாட்டார்கள்? எறிகணை கள் வராதா?" என்று கேட்ட நாகநாதருக்கு யாருமே பதில் சொல்லவில்லை. கூட வந்தவர்களும் பயணம் சொல்லாமலே வெவ்வேறு வாகனங்களில் பிரிந்து சென்றனர்.

நாகநாதர் குடும்பத்துக்கு திருவையாற்றில் ஒரு கொட்டில் கட்ட இடம் கிடைத்தது.

ஆடி மாதம் பத்தொன்பதாம் திகதி மாலைப் பொழுது.

ஆனையிறவில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வன்னியில் நாலா பக்கமும் விழுந்து வெடித்தன. திருவையாறு தாண்டி இரணைமடுவிலும் விழுந்தன. அன்றிரவு மல்லாவி நோக்கிய பயணம்.

இரணைமடு கட்டுக்குளம் அருகே நீரோடும் வாய்க்கால்கள் இருக்க விவசாயம் செழித்த மண், திருவையாறு. பாலும் பழமும், காய், பிஞ்சும், கிழங்கும் மலிவாகக் கிடைத்த மண்ணில் இருந்து வாழக் கிடைக்கவில்லை என்ற கவலை நாகநாதருக்கு.

"மல்லாவி எப்படி இருக்குமோ?" என எண்ணியவராய் திருவையாறு விட்டு இரவிரவாக நடந்தார். முன்னும் பின்னும் மக்கள் வெள்ளத்தில் நாகநாதர் குடும்பமும் கலந்தது.

பாரிய விருட்சங்களும் பராமரிப்பற்ற வாய்க்கால்

களும் நீர் நிலைகளும் வயல் நிலங்களும் உள்ள மல்லாவியில் மக்கள் வளமாக வாழமுடியவில்லை. வெய்யிலும், மழையும், நோயும் எதிரிகளாய் அமைந்தன. நோய்க்கு மருந்தில்லை. போதிய உணவுப் பொருள் இல்லை. மக்கள் அநாதைகளாய் அலைந்தனர்.

மற்றொரு கொட்டில் மல்லாவியில்.

"இதெல்லாம் தமிழ் மண். இதை திருத்தி பண்படுத்தினால் ஏதிலிகளாய் நாம் அலையவேண்டாம்." என்றெண்ணி மகிழ்ந்தார் நாகநாதர். "அதற்கொரு காலம் வரும் வரும்..." என தனக்குள் சொல்லிக் கொண்டார்.

அதற்கு முன் ஆவணி வந்தது.

மழை பொழிந்தது. எங்கு பார்க்கிலும் வெள்ளம், சேறு. தெருக்களின் குறுக்கே ஓடிய வெள்ளம், கொட்டில் களிலும் புகுந்தது. எங்கும் இரவும் பகலும் கொசுக்கள் படையெடுத்தன. மனித இரத்தத்தை உறுஞ்சிப் பாடிக் களித்தன.

அகதிகள் கொட்டில்களை விட்டுப்போய் பாடசாலை களில் இருந்தனர்.

மழை தணிந்தது. வெயில் எறித்தது. நிலம் காய்ந்தது. கூடவே மலேரியா பலரையும் பற்றிக் கொண்டது.

நாகநாதர் காச்சல் என்று படுத்தார். நடுங்கிக் குலுங்கினார். "முருகா! முருகா!" என தன் ஊர் முருகனை அழைத்தார். காய்ச்சல் குறைவில்லை. மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கே மலேரியாவுக்குப் போதிய மருந்தில்லை என்று

சொல்லப்பட்டது. "இருக்கும் மருந்தை" பங்கிட்டுக் கொடுத்தனர். பலபேர் வாழ்வை முடித்துக் கொண்டு 'பிணம்' என்று பெயர் பெற்று, கொட்டில்களுக்குத் திரும்பினர்.

நாகநாதருக்கு நீண்ட வாழ்நாள். அவர் சுகமடைந்து, உடல் ஒட்டி எலும்புக் கூடென உருமாறி கொட்டிலுக்கு திரும்பினார். உடல் தேறி வழமைக்குத் திரும்ப இரண்டு மாதமாயிற்று.

வெயில் சுட்டது. மாலை ஆறு மணியானாலும் வெப்பம் நிலைத்தது. என்ன மழை! என்ன வெயில்! என்ன செய்வது! எங்கே போவது?

சில கொட்டில்களில், மண் வீடுகளில் இருந்தாவர்களைக் காணவில்லை. விசாரித்தபோது, அவர்கள் இந்தியா போய்விட்டனர் என அறிந்தார். தெரிந்தவர் அறிந்தவரிடம் பேசினார். துணுக்காய் வழி சென்று இலுப்பைக்கடவையில், இரவு எட்டு ஒன்பது மணியளவில் படகு ஏறினால் விடியும் வேளை அக்கரை சேர்ந்து விடலாம் அங்கே அகதி முகாம்களில் தங்கும் வசதி செய்து கொடுக்கிறார்கள் என்ற தகவலுடன் கொட்டிலுக்குத் திரும்பினார்.

சித்திரைப் பௌர்ணமி இரவு. கடல் எங்கும் பளபளக்கும் நிலவு. நாகநாதர் குடும்பம் உட்பட முப்பது பேரை ஏற்றிக் கொண்டு அக்கரை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது படகு.

"போன வருஷம் இதே நாளில்தான் கிளாலிக் கடலைக் கடந்தோம். மேலே வட்டமிட்ட 'கிபிர்' விமானங்

களைப் பார்த்து பதறித்துடித்தோம்" என்றார் நாகநாதர்.

"நீங்கள் அழுதீங்களோ?" என்றான் எதிரே இருந்த இளைஞன்.

"அழுதால் அவனுக்குக் கேட்குமா? அந்த நிலவில் நான் ஆகாயத்தையே பார்த்தபடி இருந்தேன்" என்றார்.

"அடேயப்பா பயமில்லாத மனிதர்..."

"இனி அச்சமில்லாமல் வாழலாம். தமிழ்நாட்டில்... இல்லையா தம்பி... இனி எந்தச் சத்தமும் கேட்காது."

பேரவைகள் படகில் மோதின. கடல்நீரில் படகினுள் விழுந்தது. நீரை வெளியேற்ற டின்கள் கிடந்தன. அவற்றைப் பயன்படுத்தி நீரை வெளியே ஊற்றினர் இளைஞர். படகு விரைந்த போய்க் கொண்டிருந்தது.

தூரத்தே தீபங்கள் உருண்டு கொண்டிருந்தன.

"வெளிச்சம் தெரிகிறதே. கரையிலா...? என்று கேட்டார் நாகநாதர்.

"இல்லை பெரியவரே. அது மின்பிடிப் படகுகள்" என்றான் ஒருவன்.

**அ**திகாலை ஐந்துமணி. அக்கரை கிட்டவே தெரிந்தது. எஞ்சின் இயக்கம் நின்றது "சத்தமிடாம இறங்குங்க..." என்றான் ஓட்டி. பொதிகளைத் தலையில் வைத்துக் கொண்டு இறங்கி இடுப்பளவு நீரில் நடந்தனர். கடலைத் தாண்டியதும் மணலில் கால்கள் புதைந்தன. தெருவோ, வாகனமோ, மனிதரோ கண்ணுக்கெட்டிய வரை தென்படவில்லை. தாகமெடுத்தது. பொதிகளை

இறக்கிவைத்து இளப்பாறினர். தூரத்தே ஒரு வாகனம் வருவது தெரிந்தது. எழுந்து கை உயர்த்திக் கொண்டு விரைந்து நடந்தனர். பயனில்லை. அது போய்விட்டது. நடந்தனர். கிழக்கில் சூரிய ஒளி பளிச்சிட்டது. ஒரு சந்தி வந்தது. பேருந்து ஒன்று வந்தது. கை காட்டினார்கள். நின்றது பேருந்து. "நீங்க அகதிகளா?" என்று சாரதி கேட்டார். பதிலுக்கு காத்து நிக்காமல் பேருந்து போய்விட்டது. நடையைத் தொடர்ந்தனர்.

'கடலோரக் காவல்' தெரிந்தது. அது காவல் நிலையம்.

"வாங்க..." காவலர் அழைத்தனர், அன்பாக. அகதிகள், பொதிகளை இறக்கி வைத்தனர். தண்ணீர் கேட்டனர். பானையில் தண்ணீர் வந்தது.

பொறுப்பதிகாரி வந்தார்.

விசாரணை தொடங்கியது. பெயர், வயது, தோணியின் பெயர் வந்த காரணம் எனப் பல கேள்விகள் முடிந்ததும் தொலைபேசியில் யாருடனோ பேசினார். "உட்காருங்க..." என்றார் அவர்களைப் பார்த்து.

ஒரு மணி நேரம் கழித்து ஒரு அதிகாரி பேருந்தில் வந்து இறங்கினார். எதிர்த் திசையில் வந்த பேருந்தில் முப்பது பேரையும் ஏற வைத்து தானும் ஏறிக்கொண்டார். அத்தனை பேருக்கும் கட்டணத்தை அவரே கொடுத்தார். அகதிகளிடம் ஏது பணம்? அதுவும் இந்தியப் பணம்.

முகாம் வந்தது. அது 'தாயகம் திரும்பியோர் தங்குமிடம்' என்று முகப்பில் எழுதப்பட்டிருந்தது. உள்ளே போனவர்களை "உட்கார்... உட்கார்..." என்றாள்

ஒருவன், அலுவலக வாசலில் மணலில், வேப்பமர நிழலில் அமர்ந்தனர். சோதனை - விசாரனை தொடங்கிற்று. பொதிகளிலிருந்து அனைத்தையும் வெளியே எடுக்கச் சொல்லி சோதித்தனர். இளைய வயதினைப் பார்த்து "பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருக்கா?" எனக் கேட்டனர். ஒரு காலில்லாதவன். "எறிகணை தாக்கிய-தால் கழட்டப்பட்டது" என்றபோது, "எறிகணை உன் காலை மட்டுமா உடைத்தது" என்று கேட்டார் ஒருவர். பின்னால் இருந்து நடப்பதை அவதானித்த நாகநாத ருக்கு வந்த சினத்தை சூழல் கருதி அடக்கிக் கொண்டார்.

விசாரணையைத் தொடர்ந்து தனித்தனியாகவும் குடும்பமாகவும் நிழல்படம் எடுக்கப்பட்டது. வரிசையில் விட்டு வீடியோ படம் எடுத்தனர். வெள்ளைச் சோறும் சாம்பாரும் பப்படமும் ஒரு மேசைக்கு வந்தது. சாப்பிட்ட பின் அவர்களை ஒரு அறைக்கு அனுப்பினர். அங்கே ஊசி மருந்து ஏற்றினர். "காய்ச்சல் வந்தால் சாப்பிடு" எனச் சொல்லி வில்லைகள் கொடுத்தனர்.

"நாளைக்கு வந்து அடையாள அட்டை எடு. சரி போ..." எல்லோருக்கும் பொதுவான கட்டளை. நேரம் ஐந்துமணி ஆயிற்று. வீடுகள் கட்டி திறப்புக் கொடுக்கவென ஒருவன் முன் செல்ல அகதிகள் பொதி களைத் தூக்கிக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தனர். கதவைத் திறந்து காட்டி திறப்பைக் கையளித்துவிட்டு அவன் போய்விட்டான்.

தூசியும் குப்பையும் அகற்றி, கழுவிக் காயவிட்டு, பாய்வாங்கிப் படுக்கும் வரை தூக்கம் வராதா?

ஒதுக்கப்பட்ட வீடுகளின் முன்னால் பொதிகளைத் தலையணையாக வைத்து படுத்துக்கொண்டனர்.

நாகநாதருக்கு நித்திரை வரவில்லை. தூரத்தே வெளியில் சிலர் படுத்திருப்பது நிலவொளியில் தெரிந்தது.

நாகநாதர் எழுந்து சிறிது தூரம் போனார்.

அங்கே படுத்திருந்த ஒருவன் "என்னய்யா நித்திரை வரேல்லையா?" என்று கேட்டான்.

இப்பதான் தம்பி வந்தனாங்கள். வீடு துப்புரவாக் காமல் எப்படிப் படுக்கிறது? நீங்கள் எப்ப வந்தனீங்கள்? ஏன் வெளியில் படுத்திருக்கிறீர்?"

"நான் வந்து கனகாலம் பெரியவர்... உள்ள படுக்க இடமில்லை. வெளியில் படுத்தால் காற்றும் விழும்..."

"எத்தனை அறை தம்பி? முன்பக்கம் யன்னலும் இல்லை"

"இது சீமெந்துக் கூரை வீடு... கிறில் யன்னல்... அறை எண்டில்லை. குசினியெண்டு ஒரு அடைப்பு. ஆறுக்கு நாலு - ?"

"அங்கால ஓட்டு வீடுகளும் இருக்கே?"

அதெல்லாம் முதல் வந்தவைக்கு குடுத்தாச்சு... அதுவும் டச்சுக்காலத்துக் கட்டிடங்கள்... மழை வந்தால்..."

"ஏன் திருத்தித் தராங்களே?"

"அது சிப்பி ஒடு. அந்தக் காலத்தான்... நல்ல மழைக்கு தாங்காது... இங்கயும் அப்படித்தான் சில

வெடிப்புக்கள்... மழைக்கும் ஒழுகும். ஒருமாதிரி சரிக்கட்டிச் சமாளித்து இருக்கவேண்டியதுதான்..."

"படுக்க பாய் கீய் தருவாங்களே...?"

"முந்திக் கொடுத்தவங்களாம்... இப்ப அதுவும் இல்லை. நாங்கதான் வாங்க வேணும். காசு தருவாங்கள்..."

"எவ்வளவு தம்பி...?"

"மாதம் இரண்டு தடவை... ஆளுக்கு 65 ருபா... குடும்பத் தலைவருக்கு நூறு ருபா."

நாகநாதர் சிரித்தார்.

"மாதம் நூற்றி முப்பது போதுமா தம்பி?"

"ஏன் சிரிக்கிறியள்...? மாதம் நூற்றி முப்பது காய் பிஞ்சு வாங்க வெள்ளை அரிசி முப்பது கிலோ தாறாங்கள் சலுகை விலையில். கிலோ 55 சதம். பங்கீட்டு அட்டைக்கு சீனி, மண்ணெண்ணை எல்லாம் தருவாங் கள். அடையாள அட்டை தந்தவங்களே...?"

"இல்லை.. நாளைக்கு வந்து எடு என்றான்." நாகநாதர் குரலில் கடுமை தொனித்தது.

"வந்திட்டம்... இனி எங்கட தகுதிக்கு இங்க இடமில்லையெண்டாலும்... ஒரு மாதிரி அனுசரித்துப் போகவேண்டியதுதான்..."

"சரி தம்பி வாறன்... போய்ப் படுத்துப் பார்ப்பம்" துவாயை விரித்து கையை மடித்து தலையணையாக்கி மணலில் படுத்துக் கொண்டார் அவர்.

பயணம் தொடங்கிய நேரம் தொட்டு அதுவரை பட்ட

அனுபவங்கள் அபூர்வமானவை. உடலும் உள்ளமும் அலுத்துப் போன நிலை. அடுத்து நிமிடமே. அவரை நித்திரை அரவணைத்தது.

காலையில் அவர் எழுந்த போது அவரைச் சூழ மனைவி பிள்ளைகள் இருந்தனர். தேனீர் குடிக்கும் நேரம் கடை எங்கே உள்ளது என்பது தெரியவில்லை. கையில் இருப்பது எங்கட காசு. இங்கு செல்லாது என நினைத்து எழுந்து நடந்தார். இரவு அவருடன் பேசிய இளைஞனிடம் போனார். "தம்பி எங்கட காசை எங்க மாத்தலாம்?" என்று கேட்டார்.

"இருங்கோ பெரியவர். தேத்தண்ணி தரலாம்..." என்றவன் உள்ளே போய் கையில் ஒரு சாடி தேனீருடன் வந்தான். "கொண்டு போய்க் குடியுங்கோ காசு மற்ற ஒருவன் வருவான். அகதிகள் வந்ததை அறிந்து உடனே வருவான். நூற்றுக்கு அறுபது சிலவேளை 63 ரூபா தருவான். போங்கோ நான் வாறன்..."

"நன்றி தம்பி..." நாகநாதர் தேனீரை எடுத்துக் கொண்டார்.

அப்துல்காதர் யாரும் அழைக்காமலே வந்தான். நேற்று வந்தவர்கள் 30 பேர் என்று தெரிந்துகொண்டு தான் வந்தான்.

"சிலோன் காசு இருக்கா? மாற்றித் தரலாம்...?"

அவனைச் சுற்றி நேற்று வந்த சிலர் கூடினார்.

"ஆயிரத்துக்கு எவ்வளவு தருவீங்கள்?..."

"அறுநூறு ரூபா தர்றேன்... நீங்க எங்க போனாலும்

அதுதான் ரேட்"

"அறுநூற்றம்பது எடுக்கலாம்... அந்த இடம் எனக்குத் தெரியும்..." ஏதோ தெரிந்தவன் போல, ஒருவன் சொன்னான்.

"சரி அறுநூற்றுமுப்பது தர்றேன்..." என்றான். அப்துல்காதர். எல்லோரும் ஐந்நூறு, ஆயிரம் ரூபா தாள் களைக் கொடுத்து இந்திய ரூபாய்களாகப் பெற்றுக் கொண்டனர்.

முகாமுக்கு வெளியே நடைபாதையில் கடைகள் இருந்தன. காலைச் சந்தையும் இருந்தது. வீட்டுப் பாவனைப் பொருள்கள் யாவையும் வாங்கலாம்.

நாகநாதரும் மனைவியும் அவருடன் வந்து அடுத் தடுத்த வீடுகளில் இருந்தவர்களும் வெளியே செல்லப் புறப்பட்டார்கள். தேவையான பொருள்களை வாங்கினார் கள். திரும்பி வந்து வெளியில் அவற்றை வைத்து விட்டு வீட்டைத் துப்பரவு செய்தனர். பிளாஸ்டிக் வாளிகளில் அருகிலிருந்த கொட்டுக் கிணற்றில் நீர் எடுத்துக் கழுவினார்கள்.

அரிசி, உப்பு, மிளகாய், தேங்காய், பருப்பு, சமையல் பாத்திரங்கள் சிலவும் வாங்க அடுத்த பயணம். இப்போது பெண்களும் போனார்கள். "முதலில் குக்கர், மண்ணெண்ணெய், தேயிலை, சீனி" நாகநாதரிடம் மனைவி சொல்லிக்கொண்டாள். "முட்டை வாங்கினால் நல்லது. இங்க மலிவு... பொரிக்கலாம்" என்றார் நாக நாதர்.

"முட்டை என்ன விலை தம்பி...?" ஒரு கடையில்

கேட்டார். "மூணு ரூபா" என்றான் கடைக்காரன். கம்பிக் கூடையில் இருந்த முட்டையுடன் தொங்கிய அட்டையில் ரூபா 1.10 என்றிருந்ததைக் காட்டி "அது வேறு முட்டையா?" என்று கேட்டார்.

"நீ எப்ப வந்தே?" என்றான், கடைக்காரன். நாகநாதர் முட்டை வாங்கவில்லை. திரும்பிவிட்டார்.

அவர் மனைவி வாங்கிய காய் பிஞ்சுகளுடன் முட்டையும் இருந்தது கண்டு "என்ன விலை முட்டை?" என்று கேட்டார். "ஒரு ரூபாய் பத்து சதம்."

"என்னை ஏமாற்றப் பார்த்தான் அந்தக் கடைக்காரன். நீ எப்ப வந்தே எண்டு கேட்கிறான். ஆளைப் பார்த்து யாவாரம் பண்ணுறாங்கள் போல இருக்கு..."

சாமான்களை வாங்கிக்கொண்டு எல்லோரும் ஒன்றாய்த் திரும்பினார்கள்.

வாங்கியவற்றின் விலைகள் பற்றி பேசிக் கொண்டே நடந்தனர்.

"தேயிலை நூறு கிராம் 17 ரூபா, எங்கட பணத்தில் 26 ரூபாய்க்கு சமன்..."

"ஓ... இரண்டு மூண்டு சாமான்களைவிட மற்றதெல்லாம் நெருப்பு விலை. இட்லி காலணா, பால் பத்தணா எண்டதெல்லாம் அந்தக் காலம்..."

"சரி நடவுங்கோ அடையாள அட்டை எடுக்கப் போக வேணும்" என்றார் நாகநாதர்.

அடையாள அட்டையில் குடும்பத் தலைவரின் படமும் குடும்பப்படமும் ஒட்டப்பட்டிருந்தது. பங்கீட்டு அட்டை

யில் அரிசி, சீனி, பருப்பு, மண்ணெண்ணை என எழுதப்பட்டிருந்தது.

முதலாந்திகதி சம்பளம் என்று வழங்கப்படும் கொடுப்பனவு. அடையாள அட்டையையும் பங்கீட்டு அட்டையையும் மேசையில் அடுக்கிவிட்டு வரிசையில் நிற்கவேண்டும். பெயர் அழைக்கப்படும் போது போய் கையொப்பம் இட்டு காசு வாங்கவேண்டும்.

"நீங்கள்" "உட்காருங்கள்" "வாருங்கள்" போன்ற வார்த்தைகள் அவர்கள் பேச்சு வழக்கில் இல்லை போலும். "சரி நீபோ" "நீ வா உட்காருடா..." இத்தகைய வார்த்தைகள்தான் அவர்கள் வாயில் வரும்.

வரிசையில் நின்ற நாகநாதர் இதையெல்லாம் அவதானித்தார். முயன்று பொறுமையைக் கடைப் பிடித்து தன்முறை வந்தபோது கையொப்பத்தை இட்டு பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

மாலை வேளையில், மரநிழலில், மணலில் அமர்ந்து மாநாடு கூடிப் பொழுதுபோக்கும் அகதிகளில் அவரும் ஒருவர். அகதி வாழ்வு தொடக்கம் அரசியல் வரை பல விடயங்களும் அங்கே அலசப்படும், ஒருநாள், திரும்பிப் போகின்றவர்களுக்கு கடவுச் சீட்டு எடுக்க கலெக்டர் கடிதம் தருவார் என்ற தகவலை ஒருவன் சொன்னான். அதுபற்றி விபரமாக அறிந்துகொண்டு எழுந்தார் நாக நாதர்.

"இவங்களிட்ட கையேந்தி நிற்பதைவிட சுடுபட்டாலும் உதைப்பட்டாலும் பிறந்த மண்ணில் செத்திடலாம்" என்ற முடிவிற்கு வந்தவர் மனைவியிடம் விபரமாக விட

யத்தைச் சொன்னார்.

விண்ணப்பம் எழுதிக் கொண்டு கலெக்டரிடம் போனார். திரும்பிப் போக விரும்புவதாகக் கூறினார். அனுமதி கிடைத்தது. கலெக்டர் கொடுத்த கடிதத்தை எடுத்துப் போய்க்காட்டி கடவுச்சீட்டு, விசா அலுவல் களை முடித்துக்கொண்டார். மனைவியின் நகைகளை விற்று செலவுகளையும் பார்த்துக் கொண்டார். திருச்சியில் விமானம் ஏறினார்கள். கொழும்பில் இறங்கி திருகோணமலைக்குப் பயணமானார்கள்.

பருத்தித்துறையில் கப்பலைவிட்டு இறங்கிய நாக நாதர் குடும்பத்தினர் ஐந்து நாள்கள். தடைமுகாமில் வைத்து விசாரிக்கப்பட்டனர். பின்னர் மீளக் குடியேற்றம் உதவிப் பணமாக ஐயாயிரம் ரூபா பெற்றுக் கொண்டனர்.

ஊர் விட்டு உடமைகளைவிட்டு நாடு விட்டுப்போய் இரண்டாண்டுகளாயின. அன்று விமானம் பொழிந்த குண்டுகளால் உடைந்த வீடுகளும் மாடிகளும் கோவில் களும் கடைகளும் புற்கள், பற்றைகள் வளர்ந்து மூடப்பட்டுத் தோன்றின. புதிதாக ஆளை மறைக்கும் மண்மேடுகள். காப்பரண்கள், முட்கம்பி வேலிகள், அகழிகள், காவல் நிலையங்கள், ஆயுதமேந்திய காக்கிகள் காட்சியளித்தன.

அவற்றைப் பார்க்க உதவுவது போல மெல்லவே ஓடிக்கொண்டிருந்தது கொடிகாமம் போருந்து. பஸ் இடையில் ஐந்து இடங்களில் நிறுத்தப்பட்டது. சோதனைக்காக "தம்பி இந்த பஸ் மட்டுவில் போகுமா?" என்று கேட்டார். நாகநாதர் நடத்துனரை நோக்கி,

"போகும் ஐயா... நீங்கள் எங்க இறங்க வேணும்...?"

"வேரங்கேணி முருகன் கோவிலடி தம்பி"

பேருந்து நுணாவில் சந்தியில் திரும்பி ஓடிக் கொண்டிருந்தது. இந்த ஊருக்கு பேருந்து விடக்கோரி வடபகதி போக்குவரத்துச் சபையுடன் போராடிய அந்த நாட்கள் அவர் நினைவில் வந்தன. பேருந்து மட்டுவில் சாலையால் கொடிகாமம் வரை ஓடியபோது ஊராக நற்பணி மன்றம் எடுத்த முயற்சியால் கட்டப்பட்ட நிழல் குடை முருகன் கோவில் அருகே தெரிந்தது.

"எங்கள் அந்த நிழல் குடையில் இறக்கிவிடும்."

நாகநாதர் குடும்பம் வந்து இறங்கியதைப் பார்த்தவர்கள் ஓடி அருகில் வந்தனர். கேள்விக்கணை தொடுத்தனர்.

"வந்தாயிற்று... இனி ஆறுதலாய்ப் பேசுவோம்..." என்று சொல்லிக் கொண்டு கிழக்கே திரும்பி "முருகா" என்றபடி நடந்தார்.

அவர் வீட்டு வாசலில் அயலவர் சுற்றத்தார் கூடி நின்று வரவேற்றனர். புன் சிரிப்பு தவழும் முகத்துடன் நாகநாதர் விரைந்து முன்னேறினார். மனைவி, பிள்ளைகள் ஓட்டமும் நடையுமாக.

அதோ வீடு.

அதுவா அவர் வீடு?

அதுதான் வீடு:

அதன் கூரை எங்கே?

அவருக்குப் புரியாதா,

என்ன நடந்திருக்கும்?

என்று.

வீட்டின் சுரைத் தகடுகள், மரங்கள் இல்லை. உள்ளும் புறமும் புற்கள், செடிகள் வளர்ந்து பசுமையாய்த் தெரிந்தன.

முற்றத்தில் விழுந்து படுத்தார் நாகநாதர். அவரைச் சுற்றி மனைவி பிள்ளைகள்.

◆

# பயணங்கள்

ஆறுமாத காலச் சுற்றுலா விசாவுடன் வந்திருந்தார் விநாயகமூர்த்தி. இன்னும் ஐந்து மாதங்கள், மீதி உள்ளன. அதற்குள்ளாக சுவிஸில் இருக்கும் அவருடைய மகன் வசந்தன் ஸ்பென்சர் வழியில் அவரை அங்கே அழைத்துக் கொள்வான். அதுவரை ஆயிரம் ரூபா வாடகை கொடுத்து அந்த மேல்மாடி அறையில் தங்கியிருக்கிறார். விசா காலம் முடிவதற்குள், பயண ஒழுங்குகள் முடியவில்லையென்றால், காவல்துறையில் அகதி என்று பதிந்துகொண்டு தங்கிவிடலாம். சுற்றுலா விசாவில் வந்து பலரும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று அறிந்து வந்திருக்கிறார்.

தனி மனிதர். மனைவி காலமாகி மூன்றாண்டு களாயின. மூன்று பிள்ளைகள். மூத்தவள் மணமுடித்து நான்கு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். மருமகன் கொழும்பில் வர்த்தக நிறுவனம் ஒன்றில் உயர் பதவியில்

உள்ளார். மகன்கள் இருவரும் சுவிற்சலாந்தில்.

"வாலிப வயதினர் இருந்தாற்தான் பிரச்சினை என்று இல்லை. கைக்குழந்தையுடன் அடிக்கடி சுற்றி வளைப்புக்கும் சோதனைக்கும் விசாரணைக்கும் நடுத்தெருவில் நிற்கவேண்டியுள்ளது. இருந்தாற்போல் வெடிச்சத்தம் கேட்கிறது. மோதல் நடக்கிறது. நாளை எங்கள் தெருவிலும் எதுவும் நடக்கலாம். துப்பாக்கி குண்டுகள் எங்கள் வீட்டிற்குள்ளும் பாயலாம். நாங்கள் கொழும்புக்கு போய் அவருடன் இருக்க நினைக்கிறம் அப்பா. நீங்களும் வாருங்கோ. அங்கே இருக்க விருப்பமில்லாவிட்டால் தம்பியுடன் கதைத்து உங்களை சுவிசிற்கு அனுப்பி வைக்கிறேன். சரியாப்பா!" - தன் திட்டத்தைச் சொன்னாள் மகள்.

பிறந்த மண்ணையும் மனையையும் பழகிய மனிதர்களையும் விட்டுப் பிரிந்து போக மனமில்லாதிருந்தும் மகள், குழந்தைகளின் பாதுகாப்பை மனங்கொண்டு, மறுபேச்சின்றி சம்மதம் சொல்லிவிட்டார் விநாயகமூர்த்தி.

கொழும்பு வந்த மறுநாள் மகனுடன் பேசினார். மகளும் நாட்டு நிலமையை முன்னிட்டு ஊர்விட்டு வந்ததையும் அப்பாவை ஸ்பொன்சரில் அழைத்துக் கொள் என்றும் தம்பி வசந்தனிடம் சொல்லி வைத்தாள். "சுகமாப்பா... இருங்கள் அப்பா ஆறுதலாக கதைக்கிறேன். இப்ப நேரமில்லை வேலைக்கு போகிறேன்," என்றான் வசந்தன். அண்ணாவுடன் கலந்தாலோசித்து விட்டு உங்களுடன் கதைக்கிறேன் என்றான் இளையவன் அமுதன்.

மற்றொரு நாள் வந்து சுவிசிலிருந்து தொலைபேசி அழைப்பு வசந்தன் கதைத்தான். "அப்பா சுகமாப்பா?... கொழும்பு வசதியாயிருக்கா? என்ன... இரைச்சலா?... சனநெருக்கமா?... இங்கேயும் அப்படித்தான்... விரும்பினா நீங்கள் தமிழ்நாடு வந்து இருங்கோ...

திருச்சியியை சிவஞானம் மாமா இருக்கிறாரே... அவருடன் அல்லது தனியாக ஒரு அறை எடுத்து இருங்கோ... இருந்து கொண்டு விலாசத்தை சொல்லுங் கோ காசு அனுப்ப... மற்றதெல்லாம் ஆறுதலாய் கதைப்பம்..."

விநாயகமூர்த்தி தமிழ்நாடு போவதை விரும்பினார். பாஸ்போட் விசா எடுக்கும் அலுவலங்களுக்கு அவரால் தனியே போய்வர இயலுமா? மருமகன் காலையில் எழுந்து போனால் வீடு திரும்ப மாலை ஆறு மணி ஆகிறது. அவர் ஏற்படுத்திக் கொடுத்த முகவர் ஒருவருவடன் கூடிக் கொண்டு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கும் இந்திய தூதரகத்திற்கும் பல தடவை அலைந்து பல்நாட்டு கடவுச் சீட்டும் விசாவும் பெற்றுக்கொண்டபோது ஆறு மாதங்கள் கடந்து போயின. அதே மாதங்களில் கொழும்பு வாழ்க்கை அவருக்கு வெறுத்துப் போயிற்று போதாமைக்கு எங்காவது இருந்தாற்போல் குண்டு வெடிக்கும். தொடர்ந்து வீதியெங்கும் கனரக வாகனங்களில் படையினர் காணப்படுவர். சுற்றி வளைப்பு, கைது என்று ஒரே அமர்க்களம்.

சிலவேளை தனிமையில் யோசித்துக் கொண்டி ருக்கும் தந்தையின் முகக் குறிப்பையுணர்ந்து "அப்பா

கவலைப்பட வேண்டாம். தமிழ்நாடு போய்விட்டால் பிரச்சினை இல்லாமல் நிம்மதியாய் இருக்கலாம்...' அங்கே இருக்கிற நாளில் கோயில்களையும் போய்ப் பார்க்கலாம்..." என்று ஆறுதல் சொல்வாள் மகள்.

பிரச்சினைகளுக்கு நடுவிலும் பிறந்த மண்ணில் சுதந்திரமாக சுற்றிவந்து பலருடன் பேசி சிலருடன் சிரித்து மகிழ்ந்த நாள்களை நினைத்து மனம் சொந்தார். அயலவரின் அரவணைப்புடன் அங்கேயே இருந்திருக்கலாம் என்றெண்ணி வருந்தினார். தமிழ்நாடு போய்விட்டால் இந்த தொல்லையெல்லாம் இருக்காது தான் என்றெண்ணித் தெளிந்தார்.

பயணநாளும் வந்தது. திருச்சிக்கு போன் செய்து சிவஞானத்துடன் பேசினார். விமானம் புறப்படும் நாள் நேரம் சொல்லி எயார்போட்டிற்கு வருமாறு கேட்டு அவரது சம்மதம் பெற்றுக் கொண்டார்.

**சி**வஞானம் வீட்டில் சில நாள் தங்கியிருந்த விநாயக மூர்த்தி வேறாக இருக்க விரும்பினார். எனது வீட்டின் அயலில் மேல்மாடி. அறை ஒன்று இருப்பதாக அறிந்த சிவஞானம் அவரை அழைத்து வந்து அந்த வீட்டாருடன் பேசி அறையை எடுத்து கொடுத்தார். அந்த மாடியில் ஒரு நீள் சதுர அறை மட்டுமே. சிறு குடும்பம் இருப்பதற்குரிய வசதிகள் கொண்டது. மீதி முற்றம். காலையில் சிற்றுண்டிக் கடையில் உணவருந்தவென இறங்கி வருவார். சிலவேளை இரண்டு பண் அல்லது பாதி பாண், பழம் வாங்கிவந்து முற்றத்தில் அமர்ந்து உண்பார். பகல், இரவு உணவை அந்த வீட்டிலேயே வைத்துக்

கொள்வார். மாத முடிவில் அறைவாடகைப் பணத்துடன் உணவுக்குரிய தொகையையம் சோந்த்துக் கொடுப்பார்.

மாலை ஐந்து மணியானதும் அறையைப் பூட்டிக் கொண்டு இறங்கி தெருவுக்கு வருவார். சிவஞானம் வீட்டுக்கு செல்வார். ஆறு மணிக்கு திரும்பி வருவார். வேறு எங்கும் போக மாட்டார். சிலவேளை சிவஞானம் வந்து மேலே போய் பேசிக் கொண்டிருப்பார். முன்னரே எனக்குப் பழக்கமான சிவஞானம் அவரைப் பற்றி சுருக்கமாக சொல்லி "கவனித்துக் கொள்ளுங்கோ" என்றும் கூறி வைத்தார்.

**வா**ங்க, எங்கே பயணம்? எனக் கேட்டு பழகிக் கொண்டேன் அவருடன்.

மேலே தனியாக எப்படி நேரம் போக்க முடிகிறது? "என்னோடு வாருங்கோ அய்யப்பன் கோயில் வரை ஒரு நடை போய் வருவோம், பொழுதுபோகும்... ஏழு மணிக்கு திரும்பலாம்..." என்றேன் ஒருநாள்.

"தூரமோ?... அதிகம் நடக்கேலாது..." என்றார் அவர்

"கிட்டவேதான்... அடுத்த சந்தி அய்யப்பநகர்... அதற்கடுத்த தெருவில் இருக்கு கோயில்..."

"சரி போவம்" என்றார்.

அருகருகே நடந்து சென்றோம்.

"நீங்கள் எந்த ஊர்? எப்ப வந்தனீங்கள்?" அவர் கேட்டார்.

"ஊர்... எல்லாரும் ஒரே ஊர்தானே... நாங்கள் வந்து

மூன்று வருசமாச்சு... நீங்கள் ஏன் இங்கே வந்தனீங்கள்? கொழும்பில் இருந்து சுலபமாக போயிருக்கலாமே?..."

அவர் என்னை வியப்புடன் பார்த்தார், இதெல்லாம் எப்படித் தெரியும்? என்று கேட்பது போல்.

"தெரியும் நண்பர் சிவஞானம் சொன்னார்..."

"அங்கே அலுவல் பார்க்க... உதவிக்கு ஆளில்லை... ஏஜென்சிக்கு காசை கொட்டவேண்டியிருக்கு... தவிர இந்தியாவையும் பார்த்துக் கொண்டு போகலாம் என்று..."

"ஏன் மருமகன் கவனிக்க மாட்டாரே...?"

"அவருக்கு நேரம் வராது. கம்பனி வேலையோட அவருக்கு பொழுது சரி..."

"ஆனால் இங்கேயும் டெல்லிக்கும் சென்னைக்கும் போய் அலையவேண்டுமே...?"

சென்னைக்கு போய்வரலாம்... டெல்லி எவ்வளவு தூரம்! ரயில் பயணம் தானே...

"ஓ... முப்பத்தாறு மணித்தியாலம் இடைவிடாப் பயணம்... டிக்கட் நாணூற்றைம்பது ரூபா... சிலீப்பிங் பேர்த் எடுத்தால் படுத் தூங்கவும் வசதியாயிருக்கும்..."

கோயில் வந்தது.

வாசலில் நின்றே அய்யர்ப்பனை வணங்கிவிட்டு ஒருபுறம் நிற்கும் வேப்பமரத்தின் கீழ் அமர்ந்தோம். பகலெல்லாம் பூமியை சுட்டெரித்த ஆதவன் தன் கடமை முடிந்து மேற்கின் அடிவானில் செந்தீக் கோளமாய் மாறி மறைந்து கொண்டிருந்தான். இருள் மெல்லப் படர்ந்தது. தெற்கிலிருந்து வீசிய காற்று வேப்பிலைகளைத் தழுவி

தென்றலாய் மாறி மேனியை குளிரச் செய்தது. மனம் மகிழ்ந்தது.

புலம்பெயர்ந்து வந்திருக்கும் சிலர் மாலைப்பொழுதில் இங்கு வந்து சேருவர். அன்றை வானொலி, தொலைக் காட்சி செய்திகளை பரிமாறி நாட்டு நிலமையை அறிந்து கொள்வர். நாங்கள் மரத்தின் கீழ் அமர்ந்த பின் பத்துப் பேர் வரை வந்து கூடினர். என்னுடன் வந்திருந்த புதியவரை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். எல்லாரும் வெளிநாட்டு பயணம் பற்றியும் ஸ்பொன்சர் பற்றியும் பேச ஆரம்பித்தனர். தங்கள் பட்டறிவையும் கேள்விகளையும் அவையில் வைத்தனர். விநாயக மூர்த்தி அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்.

ஏழு மணியாயிற்று. மாலை நேர பூசையை குறிக்கும் கண்டாமணி ஒலிந்தது. எல்லாரும் எழுந்து நின்று தொழுதனர். பூசை முடிந்ததும் வந்து அமர்ந்தனர். இனி எட்டு மணி வரை மாநாடு தொடரும். இலங்கை, இந்திய, உலக செய்திகள், முக்கியமாக அரசியல் அலசப்படும்.

"போகலாமா..." என்றார் விநாயகமூர்த்தி.

வழமையாக எட்டு மணிவரை இருந்து பொழுது போக்குபவன் நான். விநாயகமூர்த்தியின் விருப்பத்தை ஏற்று, "சரி போகலாம் வாருங்கோ" என்றழைத்துக் கொண்டு எழுந்தேன்.

'நடந்து செல்வோருக்கு தார்ச் சாலையில் இடமில்லை' என்று எழுதப்படாத சட்டமுள்ளதோ? வாகனங்கள் சாலையை முழுமையாக ஆக்கிரமித் திருந்தன. கரையோரம் மேடும் பள்ளமும் சிதறிக்

கிடக்கும் கற்களுமாக கால் பதித்து செல்ல இயலாத பாதை.

"இந்த இடமும் திருச்சி முனிசிபாலிட்டிதானா?" என்று கேட்டார் விநாயகமூர்த்தி.

"ஓ... திருச்சி நகரின் விரிவாக்கம்... புறநகர் என்று சொல்வார்கள்..."

அவர் சிரித்தார். கல் ஒன்று தடுக்கி நடை தளம்பியவர் என்னைப் பற்றிக் கொண்டார்.

"இது விசாலமான இரட்டை வீதி பாருங்கோ... கடைகள் எல்லாம் எட்டத்தில் கட்டப்பட்டுள்ளதை கவனித்தீங்களா? இன்றும், திட்டப்படி வேலை முடியவில்லை என்று தெரிகிறது... இந்த வீதி கே.கே.நகர் வரையும்... அப்பால் ஒலையூர்வரையும் அகன்ற பாதையாகச் செய்யும்..."

"கே.கே.நகர் என்றால்?..."

"கலைஞர் கருணாநிதி நகர்... அங்கெல்லாம் அகன்ற தார்ச்சாலை... இடையில் இந்த மாதிரி குறைகள்..."

**நா**ள்கள் நகர்ந்தன.

சில நாள் அவர் என்னுடன் நடை செல்ல வரவில்லை... கோயில்களைப் பார்த்துவிட்டு வருவதாக சொல்லியிருந்தார். திரும்பிவந்த மூன்றாம் நாள் என்னிடம் வந்தார். தல யாத்திரை பற்றிப் பேசிக் கொண்டே நடந்து சென்றோம். இராமேஸ்வரத்திலிருந்து திரும்பிக் கன்னியாகுமாரி, திருச்செந்தூர், தென்காசி, சுசீந்திரம், குற்றாலம். மதுரை

மீனாட்சி திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, அழகர் கோயில் ஆகியவை பார்த்ததாக சொன்னார். பயணக் களைப்பிலிருந்து இன்னும் மீளாதவராகக் காணப்பட்டார்.

"சரி ஸ்பொன்சர் அலுவல் என்ன நிலமை..." என்று கேட்டேன்.

"அது சரிவராது போல இருக்கு... நேற்று போன் வந்தது. அவர்களிடத்தில் பணவசதி இல்லையாம்... அங்க ஒரு தொகை கட்ட வேணுமாமே... எனக்கு அதனால் கவலையில்லை... நான் திரும்பிப் போகிற முடிவு.... போனால் கொழும்பிலயும் இருக்க நான் விரும்பபேல்ல... ஊருக்குப் போக நினைக்கிறன்..."

"ஊரில் யார் உதவி?"

"சிறிது நேர மௌனம். கண் கலங்கினார்.

மனைவியின் ஞாபகம் வந்ததோ?"

அவர் மனைவி ஷெல் விழுந்து செத்தது பற்றி சிவஞானம் சொன்னாரே.

◆

# இந்து சமுத்திரத்தில் ஒரு இரவுப் பயணம்

பௌர்ணமி நிலவின் பேரொளியில் பரந்த பெருங் கடல் பளபளத்தது. ஓய்வின்றி ஓடிவரும் வெண்திரைகள் படகில் மோதி உடைந்தன. உடலைத் தழுவிய மென் காற்று, பகல் முழுவதும் வன்னி மண்ணின் கரடுமுரடான பாதைகளில் பயணஞ் செய்து அலுத்த மேனிக்குச் சுகமளித்தது. ஆழ்கடலில் 'ட்றோலர்' எனும் பெரும் படகில் எங்களை ஏற்றி விட்டு அந்தச் சிறுபடகு திரும்பிப் போய்க்கொண்டிருந்தது.

எங்களில் பத்துப் பேர்.

"மேல் தட்டில் இருக்க வேண்டாம். உள்ளே இறங்கி இருங்கோ-" படகு ஓட்டியின் கட்டளை மெல்லக் கேட்டது.

சதுரக் கிண்று போல் இருந்த ஒடுங்கிய பலகை வாயில் ஊடாக ஒவ்வொருவராக உள்ளே இறங்கினோம். அங்கே தடிகளும் வலைகளும் பலகைகளும் பரவிக்கிடந்தன. இரண்டு பலகைகளை அசைத்து இருக்க வசதி செய்து கொண்டோம்.

அதுவரை மெல்ல இயங்கிக் கொண்டிருந்த என்ஜினை ஏற்றி இயக்கிவிட்டான் ஓட்டி. பெருஞ் சப்தமிட்டு ஓடத் தொடங்கியது படகு. வெளியே ஆனந்தமான நிலவு. உள்ளே ஒருவரையொருவர் பார்க்க முடியாதபடி இருட்டு. ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளும் முயற்சியையும் தடுத்து என்ஜின் 'கறார்.... கறார்' என இரைந்தது. படகின் உள்ளே கணுக்கால் மீறிய உப்புநீர். கால்களைத் தூக்கி எதிரே, குறுக்காக இருந்த தடிகனில் வைத்துக்கொள்ள முடிந்தது.

நேரம் ஒன்பது முப்பது. காலை மூன்று மணிக்கே அக்கரை போய்ச் சேர்ந்து விடலாம் என்று சிலர் சொன்ன ஞாபகம். அப்படியென்றால் ஆறு மணித்தியாலங்களில்... சே, ஏன்? மாலை ஐந்து மணிக்குத்தான் போகட்டுமே. இருட்டில் எங்களை இறக்கிவிட்டு ட்றோலரை திருப்பிக் கொண்டு போய்விடுவான் ஓட்டி. அதுவரை காதுகளைத் துளைக்கும் இந்த என்ஜின் இரைச்சலைச் சகித்துக் கொண்டு இருந்தாக வேண்டும். உடல் அலுத்தது. கண் களை நித்திரை தழுவியது. ட்லோறர் அசைந்தாடியபடி போய்க்கொண்டிருந்தது. எதிரே இருந்த பலகையில் காலைப் போட்டு படுத்துக் கொள்ள முடிந்தது. சுமார் ஒரு மணி நேரம் ஓடியிருக்கும். "டமார்..." என்ற திடீர் சத்தம் கேட்டுத் திடுக்குற்று எழுந்தேன். "என்ன நடந்தது?"

விழித்திருந்தவர்கள் "என்ஜின் வேலைநிறுத்தம்" என்றனர். கடவுளே, அப்படி யென்றால் யார் காப்பாற்ற வருவார்கள்? நாட்கணக்கில் கடலில் அலையும் படகுகளின் கதைகள் நினைவில் வந்தன.

ஓட்டியின் உதவியாளன் கையில் சாவிகளுடன் வந்து இருட்டில் எதையோ சுழற்றிக் கொண்டிருந்தான். எங்களில் ஒருவன் தன்னிடமிருந்த 'டோர்ச்' சைக் கொடுத்து உதவினான். துரிதமாமக கழற்றி பூட்டி என்ஜினை இயக்கிவிட்டு அவன் எழுந்தான், வெற்றி வீரானாக. ட்றோலர் நகர்ந்தது.

இதயம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. மீண்டும் அதே கறார்' சத்தம் தலை வலித்தது. மேலே போனால் சுகமாக இருக்கும் என்றெண்ணி மேல் தட்டில் பிடித்து தலையை நீட்டி உன்னி எழுந்தேன். நிலவொளியில் கைமணிக்கூடு நேரம் பதினொன்று என்று காட்டியது. வெள்ளிப் பாளங்களாக சிதறும் அலைகளைப் பார்த்து மகிழ்ந்தேன்.

"உள்ளே வா... வா..." என்று கீழே குரல்கள் எழுந்தன. ட்றோலர் ஓடிக்கொண்டிருந்தது. வேகமோ மணிக்கு ஐந்து மைல்தான் என்று சொல்லலாம். அரைமனத்தோடு உள்ளே இறக்கினேன். மீண்டும் இருட்டில். வெளியுலகைப் பாராமல் இந்துமா சமுத்திரத்தில் போய்க் கொண்டிருக் கிறேன். பரந்த நெடுங் கடலின் அழகைப் பாராமல் தமிழ் நாட்டின் கரை தெரிகிறதா என்று பார்க்க முடியாமல் இருளில் அடைபட்டுக் கிடக்கின்றேன். சில நிமிடங்கள் சென்றன. எவரும் பேசவில்லை. நித்திரைத் தூக்கமோ? சத்தமின்றி எழுந்து மேலே தாவினேன். நடுவே இருந்த

கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றைப் பிடித்தபடி அமர்ந்தேன். இருகரையும் அலைகள் ட்றோலரில் மோதி மழைத்தூறல்கள் போல் மேல் தட்டில் கடல்நீர்.

ட்றோலரின் வேகம் அதிகரித்தது. முன் பின்னாக உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லும் பெரும் படகின் செயல் அச்சமூட்டியது. பலமான காற்று, உயரத் தாவும் அலைகள், நாற்புறமும் ஆழ்கடல்... கரை தெரியும் அறி குறி இல்லை. கண்ணில் வேறு படகுகள் தென்பட வில்லை. கணப்பொழுதில் இதயம் கனத்தது. படகு முன்னே நகர நினைவலைகள் பின்னோக்கிப் பறந்தன.

அகதிகளை ஏற்றி வந்து ஆழ்கடலில் கவிழ்ந்த படகுகள்... கரையொதுங்கிய சடலங்கள்... பிறந்த மண்ணில் அயல் நாட்டவனின் அக்கிரமங்களுக்குப் பயந்து தமிழகத்தில் அச்சமின்றி வாழலாம் என்றெண்ணி படகில் ஏறினால் கடலில் மூழ்கிப் பலியாகும் அவலம்? இந்த நேரம் அங்கே என்ன நடக்கிறதோ? பகல் இரவு பாராமல் 'கிபீர்' என்று போர் விமானம் ஏழெட்டுக் குண்டுகளைப் போட்டு விட்டு ஒரு நொடியில் மறையுமோ? எத்தனை பேர் சதைக் துண்டுகளாய்! அட உணவுப் பொருள்களுக்குத் தடை; நோய்க்கு மருந்தில்லை. அதற்குந் தடை. வயலில் நெல் விதைக்கத் தடை. மழையை வழங்கும் மரங்கள் வளர்க்கத் தடை... வளங் கொழிக்கும் தென்னையும் பனையும் படையினரின் காவ லரண்களுக்கு தூண்களாகும் துயரம்... இடம் பெயர்ந் தவர்களின் வீடுகளில் கூரைகளையும் மரங்களையும் கதவுகளையும் கழற்றித் தமது முகாமுக்கு வேலி கட்டும்

காக்கிகள்! திறந்தே கிடக்கும் வீடுகளில் எஞ்சியதை அள்ளும் எம்மவர் - அயலவர்... கடலம்மா! ஆதரிப்பதற்குப் பதிலாக, அரவணைத்து அக்கரை சேர்ப்பதற்கு மாறாக ஆழத்தில் மூழ்கவைக்கிறாயே, ஏனம்மா?

"தலை காட்டாமல் உள்ளே இருங்க" என்றான் உதவி ஓட்டி. திடுக்குற்றவனாய் அவன் பக்கம் பார்த்தேன். தொலைவில் மின் விளக்குகளின் வரிசை தெரிந்தது. தமிழ் நாட்டின் கரை தெரிகிறதோ? சே... அதற்குள்ளானவா? உள்ளேயிருந்து ஒரு குரல். "நேவி வந்தாலும் வருவான் உள்ளே வா..."

ஓ... மன்னார்! மூன்று மணித்தியாலங்கள் ஓடியும் மன்னாரைக் கடக்கவில்லையா? கீழே இறங்கி அமர்ந்தேன். தூக்கம் வந்தது.

அடுக்கியிருந்த பெட்டிப் பொதிகளின் மேல் தலையைச் சாய்த்தேன். நித்திரை வரவில்லை. 'நேவி' வருவானோ? அச்சம் மேலிட்டது. நடுக்கடலில் வைத்துச் சுடுவானோ? சுற்றி வளைத்துக் கூட்டிப் போய் முகாமில் அடைப்பானோ? மன்னர் நீதிமன்ற நீதிவான் முன் நிறுத்துவானோ அல்லது தங்கள் கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவானோ?

எண்ணங்கள் அலையலையாக.... படகு போய்க் கொண்டிருந்தது. தலையை உயர்த்தி எட்டிப் பார்த்தேன். அந்த மின்கம்பங்கள் மறைந்து போயின. இனிப் பயமில்லை. எனக்குள் துணிவு பிறந்தது. என்றாலும் மேலே போகக்கூடாது. இன்னும் ஐந்து மணித்தியாலங்கள் ஆகலாம். அதுவரை? இருட்டில்

அடைபட்டுக் கிடந்தேன், விடியலை எதிர்பார்த்து. மீண்டும் என் மனம் அலைபாய்வதைத் தடுத்தான் எதிரேயிருந்த இளைஞன்.

"ஆழக்கடலெங்கும் சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று..." என்ஜின் இரைச்சலை மீறி ஒலித்தது அந்தப் பாட்டு. வன்னி மண்ணில் அடிக்கடி கேட்கும் பாட்டு. இனி எப்போ கேட்க முடியும?

"தம்பி, இந்தப் பாட்டையும் பாடடா...." பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே..." அவன் பாடினான். மெய்மறந்து செவியுற்றேன்.

ட்றோலர் வேகமடைந்தது. இடையிடையே எழுந்து தலையை வெளியே நீட்டிக் கொண்டேன்.

நிமிடங்கள் விழுங்கியவண்ணம் மணித்தியாலங்கள் மெல்ல நகர்ந்தன.

இருள் மறைகிறது. ஒளி தெரிகிறது. கண்ணுக்கு எட்டிய தொலைவில் மணற் பரப்பும் தெரிகிறது. கரை காணாமலே ட்றோலர் நின்றது. பயங்கரமாக மோதியது அலை.

"இறங்குங்க....." என்றான் ஓட்டி.

"இடுப்பளவு இருக்குமா?"

"ஆமா... இறங்குங்க"

ஒருவர் இறங்கினார். கழுத்தளவு கடல். எட்டிப் பார்த்தார் ட்றோலரில், பாய்ந்து ஏறினார். "இன்னும் போ..." எல்லாரும் ஒரே குரலில் சத்தமிட்டனர்.

"சத்தம் வேண்டாம். சத்தம்..." என்றவன் என்ஜினை இயக்கிவிட்டான். சிறிது தூரம் போய் நின்றது ட்றோலர்.

"சரி இறங்குங்க..."

நான் முதலில் இறங்கினேன். இடுப்பளவு கடல், இன்னும் போ என்று சொல்லலாமா? ட்றோலர் தரைதட்டி விடுமே!

இறங்கி விட்டோம். ஒருவரையொருவர் பற்றிக் கொண்டோம். பொதிகளை எடுத்துக் தந்தான் உதவி ஒட்டி. தலையில் சுமந்து கொண்டோம். கடலைத் தாண்டினோம் மணலில் பொதிகளை இறக்கி வைத்துக் களைப்பாறினோம். போத்தலில் எடுத்து வந்த தண் ணீரைக் குடித்தோம். எழுந்து நடந்தோம். கரையோர காவல் நிலையம் தூரத்தே தெரிந்தது. நடந்தோம்.

"வாங்க... வாங்க... வாங்க..." என்றனர் அங்கிருந்த காவலர்கள்.

ஆச்சரியம்! அன்பான வரவேற்பு. தேநீர் வந்தது. நெஞ்சம் குளிர்ந்தது. நெத்தலி கலந்த கஞ்சி வந்தது. "போதும் போதும்" என்ற போதும் ஊற்றினார்கள். எம்மவர் சிலர் அதை மறுத்தனர். பக்கத்திலிருந்தக் கடைக்கு கூட்டிப் போய் இட்லியும் வடையும் காப்பியும் சாப்பிட வைத்தனர்.

எங்கள் வருகை பற்றி மேலிடத்திற்கு 'போன்' செய்து பேசினர். தொடர்ந்து, பெயர், வயது ஊர், வந்த காரணம், படகின் அடையாளம் ஆகிய விபரங்களைக் கேட்டு எழுதிக் கொண்டனர். மண்டபம் முகாமுக்குப் போகும் பேரூந்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர். நன்றி கூறி விடை

பெற்றோம். நன்றி மறக்க முடியாத அனுபவம். தொடர்ந்து எங்களை அச்சுறுத்திய தடைகள் காவல் நிலையத்தினரின், கடற்படையினரின், முகாம் அதிகாரிகளின் விசாரணைகள், கேள்விகள், கெடுபிடிகள்! இவை மறக்க முடியாத அனுபவங்கள். நான்கு மணிக்குத் தரப்பட்ட சோறும் சாம்பாரும் குழம்பும் அடுத்தநாள் கிடைத்த அடையாள அட்டையும் கூட. இவ்வனுபவங்களில் அடங்கும்.

செழித்து வளர்ந்திருந்த வேப்ப மரநிழலில் மணல் மீது அமர்ந்து என் கதையைப் பொறுமையுடன் செவிமடுத்த என் ஊரவர், எனக்கு முன்பே வந்தவர் - சுந்தரலிங்கம் சிறுவெறுப்புணர்வுடன் சொன்னார்.

"நீர் புண்ணியம் செய்தவன்... நாங்கள் வந்து சேர்ந்தது பகல் பன்னிரண்டு மணிக்கு. என்ஜின் வேலை செய்யாமல் எங்கெல்லாமோ அலைந்து... அழுது குளறி இரண்டு பேர் என்ஜினைத் திருத்தி சரிப்படுத்திக் கரைசேர்த்தான்கள்... உச்சி வெய்யில்.... நெஞ்சளவு கடல். கடலலைகளைத் தாண்டினால் மணல் நெருப்பாய் கால்களைப் பொசுக்க காவல் துறையின் கண்களில் பட்டு மீதி, நீர் சொன்னது போல இங்க வந்தும் ஆறுதலில்லை... வாசலில் தொங்கும் 'போர்ட்' பார்த்தீரா?..."

'தாயகம் திரும்பியோர் தங்குமிடம்' தாயகமாம் சேய்களாம்... நாம் எங்களை மதிக்கிறான்களில்லை.... ம்... சரி ஆறுதலாய்க் கதைக்கலாம் எழும்பும்."

இவர் என்ன சொல்லுகிறார்? அக்கரைக்கு இக்கரை

அந்நியமா? குழம்பிய மனத்துடன் நடக்கிறேன், இருப்பிடம் நோக்கி.

கடற் காற்று வேகமாக வீசுகிறது. அது ஒன்றே ஆறுதல் போலும். அதுவும் எங்கள் வன்னி நாட்டின் பக்கத்து மன்னார்க் கரையிலிருந்து வருவதால்...

◆

*ஆசிரியரின்*
*பிற நூல்கள்*

**ஒன்றே தெய்வம்**
**— சிறுகதைகள்**

**பொழுதுபோக்கு**
**— சிறுகதைகள்**

**பொற்கிழி**
**— நாடகம்**

**வல்லவரும்**
**நல்லவரும்**
**— கட்டுரைகள்**



இலங்கையில் தம் சொந்த மண்ணில் வாழ முடியாமல் அல்லலுற்று கதிகலங்கி நிற்கும் தமிழர்களின் ஆறாத் துயர்களைக் கொண்டது நண்பர் கிருஷ்ணனின் இக்கதை நூல். அங்கு நம் தமிழர் படும் பாடுகளில் இது ஒரு பனித் துளிதான். அங்கு வாழ முடியாமல் ஒரு நள்ளிரவில் தமது மனைவி மக்களுடன் படகேறி தென்னகம் வந்த திரு.கிருஷ்ணன், பயணத்தில் தாம் பட்ட இன்னல்களையும் 'இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்' என்ற கதையில் பதிவு செய்துள்ளார். திரு. கிருஷ்ணன் படைப்புகள் மனித நேயமிக்கவை. இலங்கை தவிர உலகின் இதர நாடுகளிலிருந்தும் வெளிவரும் இதழ்களிலும் அவர் ஆக்கங்கள் வெளி வந்துள்ளன.

மிகுதியும் மொழிப் பற்றினால் கவரப்பட்ட நண்பர் கிருஷ்ணன் அப்பற்றின் காரணமாகத் தமது அரச பதவியை இழந்தார். பத்திரிகையாளருமான அவர் யாழ்ப்பாணம் அரசுச் செயலகத்தில் பொறுப்பான பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- சசி பாரதி